பெப்ரவரி 2025

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை **297**

விலை : ரூபா 100/=

25ஆவது அகவையில் ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகை

சிறப்புக் கட்டுரை




*சிறப்புக் கட்டுரை*

## மேரு மாத்திரை சந்தம் - எண்ணொழுங்கு (Fibonacci Sequence)



பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

ஞானம்
ஒளி: 25
சுடர்: 09
297

# பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்!

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.

## ஆசிரியர் குழு

ஆசிரியர், ஸ்தாபகர் : தி. ஞானசேகரன்
இணை ஆசிரியர் : ஞானம் ஞானசேகரன்
நிர்வாக ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்

ஓவியர் : கிறிஸ்டி நல்லரெத்தினம்

## தொடர்புகளுக்கு

**தொ.பேசி.** ☞ 0094-71-7362862
0094-11-2586013

**மின்னஞ்சல்** ☞ editor@gnanam.info

**அஞ்சல்** ☞ 3B-46th Lane, Colombo-6,
Sri Lanka

**வங்கி விபரம்** ☞ G. BALACHANDRAN
Acc. No. - 009020348846
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX

**சந்தா விபரம்** ☞ **ஒரு வருடம்**

| | |
|---|---|
| Sri Lanka (LKR) | 1000 |
| Australia (AU$) | 50 |
| Europe (€) | 40 |
| India (Indian Rs.) | 1500 |
| Malaysia (RM) | 150 |
| Canada ($) | 50 |
| UK (£) | 40 |
| Singapore (Sin. $) | 50 |
| Other (US $) | 50 |

*⊙ ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.*

*⊙ புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி, ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.*

*⊙ பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.*

*⊙ படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.*

*⊙ ஞானம் சஞ்சிகையானது பொதுவெளி (Public Domain) பதிப்புரிமையை உடையது.*

## இதழினுள்ளே.....



⊙ **கவிதைகள்**
E.A.G. மிலானி 09
கலாநிதி செ. ஞானராசா 09
அநபாய சோழன் 16
கீதா கணேஷ் 20
வை. இராமச்சந்திரன் 37
என். நஜ்முல் ஹுசைன் 37
கலாநிதி ஜீவகுமாரன் 43
குப்பிளான் குமரன் 47
செங்கதிரோன் த. கோபாலகிருஷ்ணன்

⊙ **சிறுகதைகள்**
யே. கிறித்துறாஜா 10
கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ் 17
கு. யர்சினி 41
அசோகதாசன் 48

⊙ **புனைவுக் கட்டுரைகள்**
அ. முத்துலிங்கம் 03

⊙ **விமர்சனம்**
பாடுமீன் சட்டத்தரணி சு. ஸ்ரீகந்தராசா 33
சி. ரஞ்சிதா 38

⊙ **கட்டுரைகள்**
பேராசிரியர் சபா. ஜெயராசா 06
நாட்டிய கலாநிதி கார்த்திகா கணேசர் 14
ஞானம் பாலச்சந்திரன் 21
இனியவன் இசாறுதீன் 44

⊙ **பத்தி**
சமரபாகு சீனா உதயகுமார் 20
பேராசிரியர் துரை மனோகரன் 50

⊙ **வாசகர் பேசுகிறார்** 52

# ஆசிரியர் பக்கம்

## அதிகரித்துவரும் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) செயலிகள்

சென்ற சில வருடங்களாக செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) செயலிகளின் வருகை அதிகரித்து வருகின்றமை நாம் அனைவரும் அறிந்ததே. ChatGPT, Gemini எனும் பிரபல்யப் பட்டியலில் சென்ற ஜனவரி 2025இல் வெளிவந்த **டீப்சீக்** (DeepSeek) எனும் செயற்கை நுண்ணறிவு செயலியும் இணைந்துள்ளது. கடந்த சில வாரங்களாக பெரும் பேசுபொருளாக மாறியுள்ளதுடன் பல நாடுகளின் பங்குச்சந்தைகளிலும் இந்த டீப்சீக் தாக்கம் செலுத்திவருகிறது.

திருவள்ளுவர் கல்வி, கல்லாமை, கேள்வி, சான்றாண்மை, மெய்யுணர்தல் எனப் பல அதிகாரங்களில் வகுத்து, தொகுத்து அளித்துள்ள கல்விக்கும் மெய்யுணர்தலுக்கும் இடையிலான படிநிலைகள், இன்றைய சமூகத்தில் பெருன்பான்மையாக நீர்த்துப்போன தன்மையை அடைந்துள்ளமையைக் காணலாம். நிறுவனங்களில் கற்று சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டவர்கள், அறிஞர்களாகவும் – ஞானிகளாகவும் வலம் வருகின்றனர். விடயதானங்களை இணையத் தளங்களில் தரவிறக்கம்செய்து அழகுற கிளிப்பிள்ளையாக ஒப்புவிப்பவர்கள், பேரறிஞர்களாக அடையாளம் பெறுகின்றனர். இந் நிலையை மேலும் தூண்டி விடுவதாக செயற்கை நுண்ணறிவு செயலிகளின் வருகை அமைகின்றது.

ஆறுமுக நாவலர் பற்றிய ஒரு கட்டுரை வரைக, விபுலாநந்தரின் இசைப் புலமையை ஆபிரகாம் பண்டிதரின் இசைப் புலமையுடன் ஒப்பிடுக, ஈழத்தில் வெளிவரும் ஞானம் சஞ்சிகை பற்றி ஒரு கவிதை படைக்க என நாம் இந்தச் செயற்கை நுண்ணறிவு செயலிகளிடம் தமிழில் வினவினால் அது நொடிக்குள் எமக்கு பதில்களைத் தந்துவிடும். பல வாரங்களாக – பல மாதங்களாக தரவுகள் திரட்டி, ஒழுங்கு செய்து, சிந்தித்து, எம்மை வருத்தி, எழுதவேண்டிய தேவையை இல்லாமல் ஆக்கிவிடுகிறது. செயலிகள் கொடுப்பதை சீர்தூக்கி செப்பனிட்டால் போதுமானது. அந்தச் செப்பனிடலைக்கூட செய்யவேண்டிய தேவைகள் பல ஆரம்பநிலை விடயங்களுக்கு இல்லாமல் போகிறது. இது புலமைத்துவ உலகிற்கு மிகுந்த சவாலாக அமைந்து, எது மனிதனால் எழுதப்பட்டது? எது செயலியினால் எழுதப்பட்டது? எனப் பகுத்தறிய முடியாத நிலைக்குத் தள்ளிவிடுகிறது.

இந்தப் பின்புலத்தில், டீப்சீக் செயலியின் வருகையானது அறிவுலகத்தின் அத்திபாரத்தை மேலும் அசைப்பதாக அமைந்துள்ளது. சீன நாட்டைச் சேர்ந்த மிகச் சிறிய நிறுவனமொன்று அதிகுறைந்த செலவில் உருவாக்கியுள்ள டீப்சீக் செயலியானது, முன்னைய செயலிகளின் திறன்களுடன் போட்டியிட்டு அவற்றை பின்தள்ளி முன்நோக்கிச் செல்கிறது. குறைந்த செலவில் இது உருவாக்கப்பட்டுள்ளதால் அனைத்து புலங்களுக்கும் இது இலகுவில் ஊடுருவிச்சென்றுவிடும்.

இதனால் இன்றைய உலகிற்கு கிடைக்கப்பெறும் அனுகூலங்களையும் நாம் ஒதுக்கிவிடமுடியாது. தொழில்நுட்பத்துறைகளில் பாரிய மாற்றங்களை இது ஏற்படுத்தும் என எதிர்பார்க்கலாம்.

இருப்பினும், இந்த செயற்கை நுண்ணறிவு செயலிகளை புலமைத்துவ உலகில் பயன்படுத்துவது தனிப்பட்ட தார்மீகப் பொறுப்பாகிறது. குறுக்குவழிகளில் பயன்படுத்தாது இந்த செயற்கை நுண்ணறிவு செயலிகளின் துணையை ஊன்றுகோல்களாக எடுத்துக்கொண்டு அறிவுப் புலத்தையும் ஆய்வுப் புலத்தையும் அடுத்தகட்ட நிலைக்கு உயர்த்துவதே இவற்றைப் பயன்படுத்துவோரின் **தனிமனித ஒழுக்கமாகிறது**.



# அதுதான் முகம்

(புனைவுக்கட்டுரை)



அ. முத்துலிங்கம்
(கனடா)

வாழ்நாள் ஆசை என்று ஒவ்வொருவருக்கும் ஒன்று இருக்கும். என்னுடைய ஆசை கனடாவில் ஒரு நாளாவது வேலை செய்வது. வேலை என்றால் தொண்டு வேலை அல்ல. அது நிறையச் செய்தாகிவிட்டது. சம்பளத்துக்கு வேலை. என்ன வேலை என்றாலும் பரவாயில்லை. தோட்ட வேலை. சுப்பர் மார்க்கட்டில் வண்டில் தள்ளும் வேலை. உணவகத்தில் கோப்பை கழுவும் வேலை. மூளை உபயோகிக்கும் வேலை மட்டும் வேண்டாம். அதுவும் கணக்கு எழுதும் வேலை எனக்கு தேவையே இல்லை. வாழ்நாள் முழுக்க அதைத்தானே செய்தேன்.

சுப்பர்மார்க்கட்டில் வண்டில் தள்ளும் வேலைக்கு முயற்சி செய்தேன். வாடிக்கையாளர்கள் சாமான்களை வண்டிலிலே வைத்து தள்ளிச் சென்று காரிலே சாமான்களை ஏற்றி வண்டிலை விட்டுவிட்டு போவார்கள். அவற்றை சேகரித்து சுப்பர்மார்க்கட் உள்ளே கொண்டுபோய் நிறுத்தவேண்டும். மிகச் சுலபமான வேலை. மூளையை பாவிக்கவே தேவையில்லை. ஆனால் அதுகூடக் கிடைக்கவில்லை.

வேறு பல வேலைகளுக்கு முயற்சிகள் செய்தாலும் அவை தோல்வியிலேயே முடிந்தன. இப்படி நான் சோர்ந்துபோய் இருந்த சமயம்தான் ஒரு நாள் அதிகாலை டெலிபோன் மணி அடித்தது. மற்றப் பக்கம் இருந்தவர் ஒரு நிமிடம் பேசிய பின்னர்தான் அவர் ஆங்கிலம் பேசுகிறார் என்று எனக்குப் புரிந்தது. தமிழ் - ஆங்கில மொழிபெயர்ப்புக்கு வரமுடியுமா என்று என்னிடம் கேட்டார். எப்போது என்று கேட்டேன். இன்றைக்கு. எத்தனை மணிக்கு? காலை 9 மணி. என்ன இடம்? அவர் முகவரியை சொல்லச் சொல்ல எழுதினேன். தூரமான தேசம். நான் அது பற்றி யோசிக்கும்போதே வாய் "சரி வருகிறேன்" என்று சொல்லிவிட்டது. உடல் உழைப்பு இல்லாவிட்டாலும் பரவாயில்லை மூளை பாவிக்கத் தேவையில்லை.

ஒன்பது மணிக்கு ஒரு நிமிடம் இருக்கும்போது போய்ச் சேர்ந்தேன். நான் சந்தித்தது ஒரு யூதப் பெண்மணி. பெயர் எமூனா என்றார். அவர் உடையும், இருந்த தோரணையும், பேசிய விதமும் எனக்குப் பிடித்துக்கொண்டது. கருணை உள்ளவர் என்று உடனேயே என் மனதில் பதிந்தது. காப்புறுதி நிறுவனம் சார்பில் விபத்தில் மாட்டிய ஒரு தமிழ் பெண்மணியின் உடல், மனநிலையை அவர் மதிப்பீடு செய்யவேண்டும். இவருடைய மதிப்பீட்டின் அளவுகோல்படி அந்தப் பெண்ணுக்கு இழப்பீடு வழங்கப்படும் என்பதை எமூனாவே என்னிடம் சொன்னார்.

விபத்தில் மாட்டிய பெண்ணின் பெயர் சின்னநாயகி என்று எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். பெரியநாயகி கேள்விப்பட்டிருக்கிறேன். சின்னநாயகி புதிதாக இருந்தது. அவர் ஒரு திருமண விழாவுக்கு உறவுக்காரருடன் காரில் போய்க்கொண்டிருந்தபோது வேறு காருடன் மோதி விபத்து நடந்தது. மூன்று நாள் மருத்துவமனையில் நினைவு தப்பிக் கிடந்தார். உடம்பில் பல இடங்களில் முறிவு. தலையில் பலமான அடி. காரில் பயணம் செய்த மற்றவர்கள் சிறிய காயங்களுடன்

---

**2025 ஜனவரி 19ஆம் திகதி முத்துலிங்கம் அவர்களின் 88 அகவையை முன்னிட்டு இவ் ஆக்கம் வெளிவருகிறது.**

தப்பிவிட்டனர். ஒருமாத காலமாக இவருக்கு சிகிச்சை நடந்தது. இப்பொழுது வீட்டில் இருந்து சிறிது சிறிதாக தேறி வருகிறார்.

சின்னநாயகி கட்டையாக உருண்டையாக இருந்தார். தும்மல் ஆரம்பிப்பதுபோல முகம் கோணலாக இருந்தது. யாழ்ப்பாணத்தில் தமிழ் ஆசிரியையாக வேலை செய்து புலம் பெயர்ந்தவர். அவருக்கு கணவரும் ஒரு மகனும். நோயாளியும் மொழிபெயர்ப்பாளரும் அவர்களுக்குள் பேசுவது தடுக்கப்பட்டிருந்தது. ஆனாலும் சின்னநாயகி இடைவேளைகளில் தன் சரிதத்தை எனக்குச் சொல்லிவிடுவார். மகன் அவரை பின்னேரம் வந்து கூட்டிப் போவார் என்றார்.

நான் தயாராக இருந்தேன். எமூனா ஆரம் பித்தார். நான் மொழிபெயர்த்தேன்

இன்று எப்படி உடம்பு இருக்கிறது?

வலிதான். வலியில்லாத ஒரு நிமிடத்தைக் கூட நான் அனுபவித்தது கிடையாது.

இரவு தூங்கினீர்களா?

நித்திரை மாத்திரை போட்டுவிட்டு படுத் தேன். மூன்று மணி நேரம் தூங்கினேன். பின்னர் எழும்பி இன்னொரு வலி மாத்திரை போட்டேன். சிறிது நடந்தேன். சுடுதண்ணீர் வைத்துக் குடித்தேன். தூங்க முடியவில்லை.

உங்களுக்கு சொல்லித்தந்த உடல் பயிற் சிகளை செய்கிறீர்களா?

பயிற்சி செய்தால் வலி இன்னும் கூடு கிறதே. ஏதோ கொஞ்சம் ஏலக்கூடியதை செய்கிறேன்.

கல்யாணவீடு, பிறந்தநாள் கொண்டாட்டம் இப்படியான நிகழ்வுகளுக்கு போகிறீர்களா? அப்படிப் போனால் உங்களுக்கு நல்லது என்று சொல்லியிருக்கிறேன். முகத்தில் சிரிப்பு வரும்.

போகிறேன். என்னுடைய அக்கா அது களுக்கு கூட்டிப் போவார்.

நல்லது. நல்லது. உங்கள் சுவாச....

திடீரென்று சின்னநாயகி எழுந்து நின்று தாதி வெப்பமானியை உதறுவதுபோல கையை உதறினார். என்ன என்று கேட்டபோது மருத்து வருடைய குறிப்பை மறந்துவிட்டதாகக் கூறி கைப்பையில் துளாவி எடுத்து எமூனாவிடம் நீட்டினார்.

உங்கள் மருத்துவரும் சுவாசப் பிரச்சினை பற்றி எழுதியிருக்கிறார். இது என்ன புதிதாக இருக்கிறது?

மூச்சு விடக் கஷ்டம். பாதி மூச்சுத்தான் வருகிறது. சுவாசப்பை நிறைவதே இல்லை. உடனே களைப்பும் வருகிறது என்றுவிட்டு இளைத்தார்.

நீங்கள் உங்கள் சமூகக் கூட்டங்களில் பாடியுள்ளதாக முன்பு சொன்னீர்களே. எங்கே ஒரு பாட்டுப் பாடுங்கள் பார்ப்போம்.

உடனே சின்னநாயகியிடம் ஒரு மாற்றம் வந்தது. முகத்திலே சிரிப்பு போல ஒன்று தோன்றியது. அழகாகக்கூட தெரிந்தார்.

சுவாசமே சுவாசமே
என்ன சொல்லி என்னை சொல்ல
காதல் என்னை கையால் தள்ள
இதயம்தான் சரிந்ததே உன்னிடம்
சுவாசமே சுவாசமே.

அவர் பாடிய சங்கீதத்தில் கொஞ்சம் மீதி இன்னும் இருந்தது. இரண்டு மைல் ஓடியது போல அவருக்கு மேலும் கீழும் இழுத்தது. நான் திகிலுடன் இதையும் மொழிபெயர்க்க வேண்டுமா என்பதுபோல பார்த்தேன். எமூனா வேண்டாம் என்றார்.

தொடர்ந்து சின்னநாயகி பேசினார். திடீ ரென்று வலி வருகிறது. சிவப்பு வலி மாத் திரை போட்டாலும் போகுதில்லை. மஞ்சள் போட்டாலும் போகுதில்லை. அது நினைத்த பாட்டுக்கு வருகிறது. நினைத்த நேரம் போகிறது.

கழுத்து வலியா?

இல்லை, கை வலி.

அங்கேயுமா? நடுச்சாமத்தில் வலி வந்தால் என்ன செய்வீர்கள்?

கையை நீட்டிக்கொண்டு சுடுதண்ணீர் பைப்பை திறந்துவிடுவேன். முதலில் குளிர்ந்த தண்ணீர் வரும். பின்னர் அது சூடாகி சுடுநீர் வரும். அதை மாறி மாறிப் பிடிப்பேன். வலி போகாது. கொஞ்சம் ஆறுதலாக இருக்கும்.

உங்கள் கணவரையும் நீங்கள்தான் பார்க்கவேண்டுமா?

வேறு ஆர்? நான்தான் பார்க்கவேண்டும். அவர் மறதி என்னிலும் மோசம். குளிர் பெட் டியை திறந்து தலையை நுழைத்து எதையோ தேடுவார். ஆனால் மறந்துவிடும். கதவு வந்து அவர் குண்டியிலே அடிக்கும். அப்படியே உறைந்த கல்லைப்போல நிற்பார்.

போனதடவை உங்களுக்கும் மறதி வரு கிறது என்று சொன்னீர்களே.

அதுதான் மோசம். பக்கத்து கடைக்கு போனால் என்ன சாமான் வாங்க வந்தேன் என்பது நினைவில் இல்லை. ஒருநாள் எங்கே நிற்கிறேன் என்பது மறந்துவிட்டது. என்னு



வித்தியாசம் என்றால் வித்தியாசம் தான். அமெரிக்கா காசும் காசு. கனடா காசும் காசு. ஆனால் வித்தியாசம் இருக்கிற தல்லவா?

எமூனா சிரித்தார். நானும் சிரித்தேன்.

உடனேயே சின்னநாயகி உசார் வந்து இடதுகால் சப்பாத்தை அதிகாரிக்கு காட்டுவதற்காக சட்டென்று குனிந்து அகற்றினார். மோசமான நாற்றம் ஒன்று எழுந்தது. சதை அழுகிய மணம். காற்றின் நிறம்கூட மாறியதுபோல எனக்குப் பட்டது. எமூனா பார்க்க முன்னரே நான் அவர் பாதத்தை கண்டுவிட்டேன். வீங்கி வரிவரியாக சிவந்துபோய் முயல்குட்டிபோல உட்கார்ந் திருந்தது. அதற்குள் இருந்து என்னவோ வெளியே வரத் துடித்தது. கால் விரல்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிப்போய் வாத்தின் விரல்கள்போல ஆகிவிட்டன.

டைய வீட்டு முகவரியும் ஞாபகத்தில் இல்லை. ஒன்பது வயதுச் சிறுமி ஒருத்தி என்னப் பிடித்து அழைத்துப்போய் வீட்டில் சேர்த்தாள்.

உங்கள் பெயரையும் முகவரியையும் டெலிபோன் நம்பரையும் ஓர் அட்டையில் எழுதி அதை எந்நேரமும் கழுத்தில் தொங்க விடவேண்டும். அதை கடந்த தடவை சொன் னேனே.

அதுவும் எனக்கு மறந்துபோனது.

சரி, மருந்தாவது கிரமமாக எடுக்கிறீர்களா?

எங்கே எடுக்கிறேன். எனக்கு அதைப் பார்த்து நேரத்துக்கு நேரம் தவறாமல் தர ஒரு வரும் இல்லையே. சிலவேளை முற்றிலும் மறந்துபோகிறேன்.

இப்படி எங்கள் அறிவுரைகளை உதாசீனம் செய்தால் எப்படி உடம்பு சுகப்படும்?

திடீரென்று ஒரு பழைய பாடலை சின்ன நாயகி சொன்னார்.

அடுத்து முயன்றாலும் ஆகும் நாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா – தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர் மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா

நான் அங்குமிங்கும் தலையை திருப்பி னேன். அதையும் மொழிபெயர்ப்பதா என்பது போல பரிதாபமாக எமூனாவைப் பார்த்தேன். அவர் மொழிபெயர்க்கச் சொன்னார்.

சுருக்கமாக ‘எது எது எப்போ நடக்க வேண்டுமோ அது அது அப்போ நடக்கும்’ என்றேன்.

உங்கள் கால்வலி எப்படி?

உடனேயே சின்னநாயகியின் முகம் மலர்ந்தது. சொல்லவேணும் சொல்லவேணும் என்று நினைத்து வந்தனான். எல்லாம் மறந்து விட்டது. அந்த வலியை விளங்கப் படுத்தவே முடியாது. எலும்புக்குள் இருந்து தொடங்கும். வித்தியாசமானது.

அது என்ன வித்தியாசமான வலி?

‘மூடுங்கள் மூடுங்கள்’ என்று எமூனா கத்தினார். நாங்கள் அங்கேயிருந்த ஒரு மணி நேரத்தில் முதல் தடவையாக எமூனா குரலை உயர்த்தினார்.

இப்பொழுது வலி எண் என்னவென்று அமைதியாக கேட்டார்.

எந்த வலி?

எது ஆகக்கூடிய வலியோ அது?

நான் மொழிபெயர்க்க முன் அவர் ‘ரென்’ என்று ஆங்கிலத்தில் சொன்னார்.

எமூனா எழுதிக்கொண்டார்.

சில நாட்கள் கழித்து எனக்கு சம்பளப் பணம் வந்தது. அந்தப் பெண்ணுக்கு இழப்பீடு கிடைத்துவிட்டதாகவும் அறிந்தேன். தொகை தெரியவில்லை. ஒரு லட்சம் டொலராக இருக்க லாம். ஒரு மில்லியன்கூட இருந்தாலும் அதிச யப்படக் கூடாது. அந்த இழப்பீட்டுப் பணத்தில் என் பங்கும் இருந்தது. எமூனா வைத்திருந்த கோப்பில் சின்னநாயகியின் படம் ஒன்று இருந்தது. விபத்துக்கு முன்னர் எடுத்தது. நான் அதை என் பக்கத்தில் இருந்து தலை கீழாகப் பார்த்தேன். அழகான சிரித்த முகம். ஒரேயொரு கணநேரத்தில் நடந்த விபத்தில் அவர் முகம் அப்படி மாறிவிட்டது. எவ்வளவு கோரமான விபத்தாக அது இருந்திருக்கும். இனிமேல் அவருக்கு அதுதான் முகம். ஒரு மில்லியன் டொலர்கூட அந்த வலி முகத்தை இனி மாற்றமுடியாது.

❍❍❍

# கலை இலக்கியமும் மொழியின் தவிப்பு நிலையும்



பேராசிரியர் சபா ஜெயராசா

ஆழ்ந்த கட்டமைப்பும் (BASE) மேலமைந்த கட்டமைப்பும் பற்றிய உரையாடல் உளவியல், மெய்யியல், சமூகவியல், மொழியியல் முதலாம் துறைகளில் மட்டுமன்றி கலைப் படைப்புகளை விளங்கிக் கொள்வதற்குரிய ***மீயறிகை*** (META COGNITION) முறையாகவும் அமைகிறது.

கருத்தைத் தாங்கி நிற்பது ***ஆழ்ந்த கட்டமைப்பு*** என்றும், வெளித்தோன்றும் சொற்கள் **மேற்பரப்பு வடிவம்** என்றும் கூறுதல் பொதுவான விளக்கம்.

புனைகதைகளில் கூறவிளையும் பொருளின் கனதி அடிக்கட்டமைப்பாகவும், எடுத்தாளப்படும் சொற்கள் மேற்கட்டமைப்பாகவும் அமையும். இந்த விளக்கம் கவிதை மற்றும் கலை வடிவங்கள் அனைத்துக்கும் பொருந்தும்.

சொற்களால் தமது ஆழ்ந்த வடிவத்தை விளக்க முடியாமல் இருக்கிறது என்று வெறுப்படைந்த கவிஞர்களும், கலைஞர்களும் தவிப்படைந்த நிகழ்ச்சிகள் உண்டு. "போ போ என்னால் வருணிக்க முடியாது" அது காலைக் காட்சியைக்கூற வந்த ***பாரதி***யின் தவிப்பு நிலை.

தாம் வரைந்த ஓவியம் கூறவந்த ஆழ்ந்த அடிக்கட்டுமானத்தைப் புலப்படுத்தவில்லை என்பதனால் அதன்மீது வண்ணக்கலவையை வீசித் தெளித்த ஓவியர்களும் உள.

தமது எழுத்துக்கள் தான் நினைத்தவற்றை வெளிப்படுத்தவில்லையே என்று தாள்களைக் கிழித்து வீசிய எழுத்தாளர் மட்டுமன்றி, எழுதிய கடிதத்தைப் பலமுறை கிழித்தவர்களும் இருக்கின்றார்கள்.

இவை மொழியின் பலமிழப்பை அல்லது குறியீடுகளின் இயம்பற் போதாமையைப் புலப்படுத்தும். சிந்தனைத் திரட்டல்கள், கருத்து வடிவங்கள், மனவெழுச்சிக் கோலங்கள், கற்பனை வனைவுகள், ஆழ்ந்த கட்டமைப்பில் இடம்பெறுகின்றன. அவற்றை வெளிப்படுத்தும் அளிக்கைக் கோலங்கள் மேலமைந்த கட்டமைப்பில் இடம்பெறுகின்றன.

ஆழமும் மேற்பரப்பும் என்ற இருநிலைகள் மீது ஊன்றிய கவனம் செலுத்திய புலமாக ஆழ்நிலை உளவியல் (DEPTH PSYCHOLOGY) விளங்குகின்றது. நனவுமனம், நனவிலி (ஆழ்) மனம் ஆகியவற்றுக்கிடையே உள்ள தொடர்புகளை ஆராய்வது ஆழ்நிலை உளவியலின் அறிபொருளாகின்றது. ***சிக்மன் பிராய்டு கார்ல் யுங்***, ***அல்பிரெட் அட்லர்***, ***ஒட்டோராங்*** முதலியோரும், புதிய உளப்பகுப்பியல் ஆய்வாளரும் இத்துறையில் ஊன்றிய கவனம் செலுத்தியுள்ளனர்.

ஆழ்மனத்தின் இயல்பை கனவுகளும், வாயிலிருந்து தவறிவிழும் சொற்களும், இயல்பாக வெளிவரும் நகைச்சுவை வெளிப்பாடுகளும் ஆழ்வுணர்வுடன் எழும் கவலைத் துண்டங்களும், தற்செயல் நினைவுகளும், வெளிப்படுத்தும் என்று கூறப்படுகிறது. கலைகளும் தொன்மங்களும் ஆழ்மன அடங்கலின் வெளிப்பாடு என்று கருதப்படுகின்றன.

தொன்மங்கள் கூட்டு நனவியலின் வெளிப்பாய்ச்சலாக இருத்தலை ***கார்ல் யுங்*** குறிப்பிட்டுள்ளார்.

மேலமைந்த மனம், ஆழ்மனம், தொடர்பான கருத்தை ***பிரடிக் ஜேம்சன்*** முன்வைத்தார். பன்மை நிலையான மேலடுக்குகள் மேல் மனத்தில் இடம்பெறுவதாகவும், கருத்து வினைப்பாடுகளின் இடைத் தொடர்புகளும் நடைமுறைகளோடு இணைந்த அடுக்குகளும் மேல்நிலையில் பன்மையாக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அவர் நனவு மனத்தின் இயல்பை ஆழ்ந்து நோக்கினார். அண்மைக் காலத்தைய நரம்பியல் ஆய்வுகள் இத்துறையில் மேலும் கவனம் செலுத்துகின்றன.

சமூகவியலின் அடியமைப்பு, மேல் அமைப்பும் பற்றிய மாற்று விளக்கத்தை **கார்ல் மார்க்ஸ்** முன்வைத்தார். உற்பத்தி விசைகள் *(PRODUCTION FORCES)* அல்லது சமூகத் துக்குத் தேவையானவற்றை உருவாக்கிக் கொண்டிருக்கும் பொருண்மிய இருப்பும் வளங்களும் அடிக்கட்டுனமாகின்றன. அவற் றோடு தொடர்புடைய மேன்மை அமைப் பாக அரசு, கல்வி, சட்டங்கள், சமூகக் கட்ட மைப்பைக் கட்டிக்காக்கும் மரபுகள், சடங் குகள் முதலியவை உருவாக்கம் பெற்றுள்ளன.'

அதாவது அடி அமைப்பாக உற்பத்தி வழிமுறைகள், உற்பத்தித் தொடர்புகள் அமை கின்றன. மேல் அமைப்பில் நிறுவனங்கள், சட்டங்கள் அமைகின்றன. அடி ஆதாரமே மேன்மை அமைப்பை வடிவமைக்கின்றது.

உறுதியான சமூகமாற்றம் என்பது அடிக் கட்டுமானத்தில் நிகழும் மாற்றத்தையும் பெயர்ச்சிகளையும் குறிப்பிடும். அடிநிலை மாற்றம் நிகழ மேனிலையிலும் அதற்கு இயைந்தவாறு மாற்றம் ஏற்படும்.

வடிவங்கள் *(FORMS)* மற்றும் அமைப்புகள் பற்றிய நோக்கு தொன்மையான சிந்தனைகளி லேயே இடம்பெற்றிருந்தது. பொருள்களில் இருந்து தோற்றம் பெற்ற அந்தச் சிந்தனை, எண்ணங்களை வடிவமாக்குதலிலும் நீட்சி கொண்டது.

அமைப்புப் பற்றி விளக்கவந்த அல்துஸ் ஸர் கலை இலக்கியங்கள் சமூக அடிக்கட்டு மானத்தின் தொடர்பின்றி இயங்கக்கூடியவை என்ற கருத்துடன் செயற்பட்டார். பொருளா தாரக் கூறுகளில் இருந்து அவை தனித்தியங் கக்கூடிய சார்புநிலைத் தன்னாட்சி *(RELATIVE AUTONOMY)* கொண்டவை என விளக்கினார்.

ஒவ்வோர் அமைப்பிலும் பல்வேறு கார ணிகள், தொடர்புபட்டு நிற்கும் என மேலும் குறித்துரைத்தார். அடித்தளம் மேலமைந்த தளம் என்ற இறுகிய சாராம்சப்படுத்தலை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. இக்கருத்து பின்னைப் புதுமையியலாளருக்கு உவப்பான தாக அமைந்தது. பின்னைப் புதுமையியல் அல்லது பின்நவீனத்துவம் வரலாற்றைச் சாராம்சப்படுத்தலை ஏற்றுக்கொள்ளாது மார்க் சியத்தோடு முரண்பட்டுக் கொள்கின்றது.

சுரண்டும் வர்க்கம், சுரண்டப்படும் வர்க்கம் என்ற சாராம்சப்படுத்தலை அல்லது ஒன்று திரட்டிப் *(TOTALISING)* பார்த்தலை நிராகரிக்கும் பின்னைய நவீனத்துவம், முதலாளியத்துக்கு உவப்பான கருத்தை முன்வைத்துள்ளது.

அடிநிலைக் கட்டமைப்பும் மேலமைந்த வடிவமும் பற்றிய நோக்கில் மொழியியலாளரே அதீத கவனம் செலுத்தி வருகின்றனர்.

மொழிபற்றி ஆழந்து சிந்தித்து, மொழியே மனித அறிவு, சிந்தனை, வளப்படுத்தும் செயல்முறை, நினைவு, உணர்ச்சி வெளிப் பாடு, கலை வெளிப்பாடு அனைத்தையும் தீர்மானிக்கின்றது என்ற கருத்தியலை அவர்கள் முன்வைத்துள்ளனர். அது மொழி நிறுவலியம் *(LINGUISTIC DETERMINISM)* என்று அழைக்கப்படுகின்றது.

அனைத்து விதமான கற்றலும் மொழியை அடிப்படையாகக் கொண்டே நிகழ்கின்றது. அந்நிலையில் இயல்பான பழக்கத்துக்குரிய தாய்மொழியே கலையாக்கத்துக்கும், கற்ற லுக்கும் உகந்த மொழியாகின்றது. தாய் மொழியை நிராகரித்து நிகழும் கற்றல் மட்டுப் பாடுகொண்ட கற்றலாகவே அமையும்.

மொழியின் முக்கியத்துவத்தை அறியா தோர் அதனை ஒலியின் கூட்டமாகவோ, எழுத்துகளின் கூட்டமாகவோ மலினப்படுத்தி விடுகின்றனர். மொழி என்பது அதீத பல முள்ள சாதனமாக இருப்பதனால் அது அடக்கு முறைக்கும் ஒடுக்குமுறைக்கும், மேலாதிக்க நிறுவலுக்கும் உரிய சாதனமாகப் பயன் படுத்தப்படுகின்றது. குறிப்பிட்ட மொழியை அழித்தல் அந்த இனத்தின் அழிப்புக்கு ஒப் பானதாகும்.

மொழியியல் ஆய்வில் நிகழ்ந்த ஆழ்ந்த கட்டமைப்பு மற்றும் மேலமைந்த கட்டமைப்பு என்ற கருத்து வடிவம் ஆழ்ந்த திறனாய்வை கலை இலக்கியங்களிலே முன்னெடுப்பதற்குத் துணை செய்தது.

மாறுநிலை இலக்கணம் அல்லது மாற்றத் துக்குத்துணை செய்யும் இலக்கணம், மாற் றத்துடன் இணைந்த தோற்றுவாய் இலக்கணம் *(TRANSFORMATIONAL GENARATIVE GRAM MAR)* முதலிய கருத்து வடிவங்கள் இலக் கியத் திறனாய்வை மொழி நிலையில் வளம் படுத்துவதற்குரிய ஏற்பாடுகளாகின்றன.




**கலை இலக்கியங்கள் உணர்ச்சிகளோடு உறவாடும் நிலையில் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதில் மொழியின் மட்டுப்பாடும் போதாமையும் அறியப்படுகின்றது. எடுத்துக்காட்டாக மகிழ்ச்சி என்ற மன வெழுச்சிக்கு ஒத்த சொற்கள் உள்ளன. ஆனால், மகிழ்ச்சி எந்த அளவில், எந்தப்பாகையில் உள்ளது என்பதற்குரிய சொற்கள் இல்லை.**

அதீத பலத்துடன், பல மட்டுப்பாடுகளையும் மொழி கொண்டுள்ளது. அந்த மட்டுப்பாடு இலக்கியங்களிலும் நீட்சி கொள்கின்றது. மொழியை அடிப்படையாக வைத்தே ஒவ்வொருவரும் அறிவை உள்வாங்குவதற்குரிய மனச் சட்டகத்தை (FRAME) அல்லது அறிவை உள்வாங்கும் அமைப்பை உருவாக்கிக் கொள்கின்றனர். அதனோடு பொருந்தாதவற்றை விடுகின்றனர்.

மொழியில் பால்நிலை ஆதிக்கம், ஆணாதிக்கம் மேலோங்கியிருத்தல் சுட்டிக் காட்டப்படுகின்றது. அது மொழியின் தவறு அன்று சமூக இயல்பின் தவறு என்பதும் நோக்குதற்குரியது. ஆண் - பெண், அவன் - அவள், தலைவன் - தலைவி என்றவாறு பிரிக்கும் சொற்கள் மேலோங்கிய நிலையில் உள்ளன. விளிம்பில் ஆண்களே முதன்மைப்படுத்தப் படுகின்றனர். கலை இலக்கியங்கள் உணர்ச்சிகளோடு உறவாடும் நிலையில் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதில் மொழியின் மட்டுப்பாடும் போதாமையும் அறியப்படுகின்றது. எடுத்துக்காட்டாக மகிழ்ச்சி என்ற மனவெழுச்சிக்கு ஒத்த சொற்கள் உள்ளன. ஆனால், மகிழ்ச்சி எந்த அளவில், எந்தப்பாகையில் உள்ளது என்பதற்குரிய சொற்கள் இல்லை. அத்தகைய பாசை அளவீடு தேவையற்றது என்ற கருத்தும் உண்டு அளவீட்டுக்குக் கொண்டுவரும் பொழுது அது கலை என்ற செயற்பாட்டிலிருந்து நீங்கி அறிவியல் என்ற நிலைக்குப் பெயர்ச்சி கொள்கிறது.

இத்துறையில் இமோஜி (EMOJI) என்ற மனவெழுச்சி வெளிப்பாட்டு வடிவம் ஜப்பானில் உருவாக்கப்பட்டுள்ளது.

மொழிபற்றிய ஆய்வில் புனைக்கதைக்குரிய மொழி (FICTIONAL LANGUAGE) என்பது தனித்துவமானது. அது ஆக்குனரால் கட்டுமை செய்யப்பட்ட மொழி (CONSTRUCTED LANGUAGE) என்று சொல்லப்படும் புனைவில் செறிவும், கலைகனதியையும் ஏற்படுத்தும் வகையில் ஆக்குனரால் மொழி தெரிவு செய்யப்படுகின்றது. சுவையூட்டும் செயற்பாட்டில் மொழியின் இலக்கண விதிகள் இறுகப் பின்பற்றப்படுவதில்லை. எழுத்தாளரால் கண்டு பிடிக்கப்பட்ட தனித்துவமான மொழியாக அது அமையும் வரன்முறை ஒழுங்கை மீறிய சொற்களும் வசன ஒழுங்கும் அவற்றில் இடம் பெறுதல் சிறப்புப்பண்பாகும்.

ஆக்கமலர்ச்சி மற்றும் கற்பனைவீச்சு ஆகியவற்றுடன் இணைந்த மொழி, புனைவில் பரவலுற்றிருக்கும். அறிவளவை சார்ந்த உரையாடலையும் கடந்தது கற்பனை. கற்பனையை இயக்குவதற்கு காட்சிப்படிமங்கள் முனை செய்தவண்ணமிருக்கும்.

கற்பனை என்பது அடிமனத்தின் அல்லது நனவிலிமனத்தின் மொழியென்று உளப்பகுப்பியலாளர் குறிப்பிடுவர். நனவிலிமனம் மொழி போன்று கட்டமைக்கப்பட்டுள்ளதாக ***லகான்*** குறித்துரைத்துள்ளார்.

இவற்றை எல்லாம் தொகுத்து நோக்கும் பொழுது, கலை மொழியும் தேடல்நீண்டு செல்வதைக் காணலாம். மொழியின் தவிப்பு நிலையோடு கலை இலக்கியங்கள் மேலெழுகின்றன என்பது மீள்நோக்குதலுக்கு உரியது.

❍❍❍

## தேய்ந்து போனது வாழ்வு

மானிடா விடியலில்லா வாழ்க்கைக்காக
மாண்டுழைத்து
எதைக் கண்டாய்?
விடியும் பொழுதுதனிலே
மண்வெட்டி தூக்கி
இதுதான் விதியென நினைந்து
உனது கனவைப் புதைத்து
குருதி வியர்வை வழிய
புதையலைத் தேடுகிறாயோ நீ
எதற்காக?

தை பிறந்தாலே வழி பிறக்கும்
என்பார்களே ஆன்றோர்
ஆனால் இங்கோ
மாதம் பிறந்தாலே
மாறாட்டம் தானே?
வீட்டு வாடகை
வங்கிக் கடனென
வரிசையாய் நிற்கையிலே
உன் கனவு கலைந்ததை
நானும் நீயும் அறிய மாட்டோமா?

விடிவை எண்ணி கடைக்கண்கொண்டு
பாராயோ பாராயோ என்றெண்ணி
ஒரு மூலையில் சிறை கிடக்கின்ற
உன் மணவாட்டியையும்
காக்கையின் எச்சம்
தடவியது போன்ற
நரையையும் கூன் உடம்பையும்
கண்டும்கூட
கோயிலின் உச்சியில் குடிகொண்ட
கல்நெஞ்சக்காரக் கல்லான்
உனக்கிரங்கலையோ?

- E.A.G. **மிலானி**
**(தமிழ்த்துறை, பேராதனைப்
பல்கலைக்கழகம்)**

## "ஒழிப்பு" ஒழிந்ததா?

**கலாநிதி செ.ஞானராசா**

இலஞ்சம் வாங்குதல்
ஊழல் செய்தல்
போதைப்பொருள்
பொய்ச்சாட்சி
சேதம் ஏற்படுத்தல்
சேறு பூசுதல்
காலை வாரிவிழுத்தல்
காட்டிக் கொடுத்தல்
கோள் சொல்லுதல்
குடும்பங்களைப் பிரித்தல்
எது ஒழிந்தது?

ஒழிந்து இருந்து
ஒழியாமல் வெளிவரும்
அநீதி ஒழிந்ததா?
அடக்குமுறை ஒழிந்ததா?
அரிசி, பருப்பு, மாவு, சீனி
அடிப்படைத்தேவை
அறாவிலையேற்றம்
பட்டினிச்சாவு
பசிப்பிணி
வட்டிக்குக் கொடுத்தல்
வாங்கியதைப் பதுக்கல்
குற்றம் சுமத்துதல்
குறை காணல்
பழிக்குப் பழி
பாரபட்சம் பார்த்தல்
இடம் பிடிக்க
இடம் பறித்தல்
கடன் வாங்குதல்
அடகு வைத்தல்
மீளச் செலுத்துதல்
மிகவும்
திண்டாடுதல்
வீண் செலவு
விபரீத முடிவு
சாண் ஏற
முழஞ் சறுக்கல்
எல்லாம் இங்கே
எந்நாளும் பொழுதும்
வெளிப்படையாகவே
இருக்கும்–ஒழிந்ததா ?



சிறுகதை

# ம(னி)தனின் கணக்கு


யே. கிறித்துறாஜா
4ஆம் வருட மாணவன், தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.


காத்திருப்பு நிலையத்தினுள் அமர்ந்திருந்த வாறே வெளியில் நிற்கும் பொலிஸாரது வாக னத்தையும் அதற்குள் இருக்கும் பொலிஸ் அதிகாரியையும் தனது சிவந்த கண்களால் பார்த்துக்கொண்டிருந்தான், மதன். தனது நிலைமையினைச் சாதகமாகப் பயன்படுத்தி தன்னிடமே சுரண்ட நினைத்தவர்களை, தனது விட்டுக்கொடுக்காத மனதால் வென்றவனாக இருந்தாலும், இன்றைய பயணம் தந்திருக்கும் சிக்கல்களை எண்ணி வேதனைப்பட்டான், அவன்.

முதல் படகில் சென்றுவிடலாம் என்ற எதிர்பார்ப்புடன் பேருந்திலிருந்து வேகமாக இறங்கியிருந்தாலும் நூறு பேருக்கு பின்னரே வரிசையில் இடம் கிடைத்தது. முதல் படகில் போவதற்கு முட்டிமுரண்டு அனை வரும் போகும்போது பின்னுக்கு அகப் பட்டுக்கொண்ட இவனால் ஏதும் செய்து கொள்ள முடியவில்லை. பின்பக்கத்தால் ஓடிச்சென்று, தன்னிடம் அடிக்கடி பொருள் வாங்கிச் செல்லும் பொலிஸாரைச் சந்தித்து விடயத்தைக் கூறி உதவிசெய்யும்படி கேட் டான். அதற்கு பொலிஸ்காரன் கேட்ட கூலி இன்றைய பயணச் செலவைவிட அதிக மானதால் நீங்களும் வேண்டாம், உங்கள் உதவியும் வேண்டாம் எனக்கூறி திரும்பி வந்து வரிசையின் இடையில் புகுந்து கொண்டான்.

வடதாரகைப் படகில் ஏறியவர்களின் தொகை சரியாக நூறாகவே,

“சீயதெனெக் னெகபு நிசா வோட்டெக்க பிரிலா. ஒகே யன்ன பே, ஒய பேனவனே, அனித் வோட்டெக்க எனகம் இன்ன”

என்றபடி செல்லும் வழியை அடைத்தனர், கடற்படையினர். அவர்கள் சொல்லுகின்ற மொழி விளங்கவில்லை என்றாலும் நடக்கின்ற விடயங்களைக் கொண்டு நிலைமையைப் புரிந்துகொண்டனர், மக்கள். மதனும் அதனை விளங்கிக்கொண்டவனாக சென்று அமர்ந்து கொண்டான். அடுத்த படகு புறப்படும் வரையும் இங்கேயே காத்திருக்கவேண்டிய நிலை ஐம்பது பேருடன் சேர்த்து மதனுக்கும் ஏற்பட்டுவிட்டது. அவன் சோர்ந்து அமர்ந்து கொண்டான். எனினும் அவனது கண்கள் சோரவில்லை.

“ஒரு உதவிதானே கேட்டன். அதிகாரமுள்ள நீங்க அவசரத்துக்கு உதவுவிங்க எண்டு கேட்டா எங்கிட்டயே பேரம்பேசுறிங்க” என்று தனக்குள்தானே பொலிஸாரைத் திட்டிக் கொண்டான்.

கடலலைகளைக் கிழித்துக்கொண்டு வட தாரகைப் படகு பயணப்பாதையின் அரை வாசிக்குச் சென்றுவிட்டது. துறைமுகக் காத்திருப்பு நிலையத்தில் இருப்பவர்கள் ஒருவர் மாறி ஒருவர் குசுகுசுத்தபடியே இருந்தனர். அவர்களால் ஏதும் செய்ய முடியவில்லை. துறைமுகத்திற்கு வந்து ஒரு மணித்தியாலயத்திற்கு மேலாகவும் காத்திருக்கின்ற கடினமான மனநிலையை அடைந்திருக்கின்றனர். அனைவரும் அடுத்த கட்ட நடவடிக்கைகளும் ஆயத்தப்பாடுகளும் ஒருபக்கம் நிகழ்ந்த வண்ணமே இருந்தன. எரிபொருள் கொள்கலனோடு ஒருவர், அதை சரியாக ஊற்றுகின்றாரா என்று பார்க்க இன்னொருவர் என துறைமுகத்தில் துரித

வேலை இடம்பெற்றுக்கொண்டிருந்தது. காத்திருப்பு நிலையத்தில் இருப்பவர்கள் நடப்பவற்றைப் பார்த்துக்கொண்டிருந்தனர். வீண் ஊர்க்கதைகள் அங்கு இடம்பெறவில்லை. எனினும், தவறவிட்ட படகினையையும் செல்லவேண்டிய படகினையும் பற்றி தாறுமாறாகப் பல கதைகள் இடம்பெறாமலுமில்லை.

மத்தியில் நடந்த கலியாண வீட்டிற்கும் மேற்கில் நடந்த பூப்புனித நீராட்டு விழாவுக்குமாக வந்திருந்த சனம் முழுவதும் துறைமுகக் கட்டடத்தை நிறைத்து நின்றனர்.

"இதானப்பா ஊருக்கு வாற இல்ல, வாறதிலயும் போறதிலயுமே மனுசன் படாதபாடு படவேண்டிக் கிடக்கு" முல்லைமணியின் ஆதங்கம் இப்படியிருந்தது.

"இவக நேவிக்காறர் எல்லாம் தங்கட இஸ்ரப்படிதான் செய்வினம். சிலவேளை நூறு சனத்துக்கும் அதிகமா ஏத்துவினம். சிலவேள இப்பிடி மறிச்சுப்போடுவினம். இதே தங்கட இனஞ்சனம் எண்டவுடன எப்பிடியாச்சும் சமாளிச்சு ஏத்தி அனுப்பிப்போடுவினம். இஞ்ச பிறந்தது பிழையா இல்ல இப்பிடிப் பிறந்தது பிழையா எண்டுதான் தெரியல" என்று தன் கருத்தையும் சேர்த்துக்கொண்டாள், அகிலாண்டேஸ்வரி.

"மழையெண்டாலும், மலையடிக் காத்தெண்டாலும், நனையாமப் போகக்கூடிய படகில வசதியானவங்களும், போறபோக்கிலேயே தண்ணிய வாரி வைக்கிற இந்த சமுத்திரதேவாவில நம்மளப்போல சனங்களும் போறது எவ்வளவுகாலம் நீடிக்குமோ?" இப்படி தனது ஆதங்கத்தைப் பேசினார் வன்னிச் சண்முகம்.

"இந்த வள்ளம் எப்ப வெளிக்கிட்டு நாம எப்பபோய் வீடு வளவ சேர்றதோ" என்றபடி சலித்துக்கொண்டான், மாங்குள மருதன்.

இப்படியாக சனங்கள் தங்கள் தங்கள் பிரச்சினைகளைப் பேசிக்கொண்டிருக்கின்றனர். என்னதான் நாடென்றாலும் ஊரைப்போல வருமா? என்னதான் ஊரென்றாலும் வீட்டப்போல வருமா? என்ற வார்த்தைகள் இவர்களுக்கும் பொருந்தும்தானே.

ஏனையவர்களும் தங்கள் அருகில் இருப்பவர்களுடன் கதைகளைத் தொடர்ந்தனர்.

தற்போது வரிசையில் பத்தாவதாக அமர்ந்திருந்தான் மதன். வெள்ளை மேற்சட்டை, கறுத்த நீளக்காற்சட்டை என வழமைக்கு மாறாகக் கோலம் பூண்டிருந்தான். இன்று முதலாவது வழக்குநாள். சரியாக 9.30க்கு வந்துவிடுவேன். அந்த நேரமே வழக்கை நடத்தித்தருமாறு கேட்டு முற்பணமும் கட்டி சட்டத்தரணியுடனான எல்லா ஏற்பாடுகளையும் முடித்துவிட்ட நிலையில் இன்றைய பயணம் இப்படி சிக்கலில் வந்துநிற்கிறது. சட்டச்சிக்கல் ஏற்படக்கூடாது என்பதற்காக முதல் படகில் செல்வதற்கு எடுத்த முயற்சியும் இவனுக்குப் பயன்தரவில்லை.

வாகனத்திற்கான உதிரிப் பாகத்தை வாங்கச் செல்லும் நந்தன் போலவோ, மகனை அழைத்துவரச் செல்லும் ஆஸ்பத்திரி சாந்தன் போலவோ உத்தியோக அடையாள அட்டையைப் பயன்படுத்தி முதல் படகில் செல்லும் பாக்கியமோ, தகுதியோ இவனிடம் ஏது. பெரியாஸ்பத்திரிக்கு செல்லவேண்டும் என்று கூறி லாவகமாக அனுமதியைப் பெற்றுக்கொண்ட யுவானிஸ் போல சிங்களமும் அறிந்திருக்கவில்லை. நீதிமன்றத்தில் சரியான நேரத்தில் நின்றாக வேண்டும் என்ற தகவலைச் சரியாக எடுத்துச் சொல்வதற்கேற்ற யாரையும் இவனுக்கு தெரியவுமில்லை. வாடிக்கைக்கு வரும் ஒரு சில பொலிஸாரோ கதைத்துவிடவேண்டுமானால் நான்கு பொருள் தருமாறு பேரம்பேசினர். இப்படியிருக்க குறிப்பிட்ட தொகையினரை மட்டும் ஏற்றும் படகில் இவன் எப்படி ஏறிச்செல்லமுடியும்.

ஒருபக்கம் கடலையும் மறுபக்கம் கற்பகிர்களையும் மாறிமாறிப் பார்த்தவாறே இன்றைய நாளின் ராசியின்மையைப் பற்றி யோசித்தபடி இருந்தான், இவன். "மதன், எங்கப்பா போறாய்" என்று கொன்ஸ்ரைன் கேள்வி எழுப்பியவாறே மதனின் அருகில் வந்து அமர்ந்துகொண்டான்.

"ஊர்காவத்துறைக்குப் போவம் எண்டு வந்தன். முதல் லோஞ்சியில சனம் கூட எண்டதால மிச்சப்பேர மறிச்சுப்போட்டாங்க, அதான் மற்ற வள்ளம் வெளிக்கிடுற வரைக்கும்...." என்றான் மதன்.

"அது சரி" என்றபடி கொன்ஸ்ரையின் தன் கதையையும் நிறுத்திக்கொண்டான்.

கொன்ஸ்ரைனுக்கு மதனைப் பற்றி நன்றாகவே தெரியும். அவனது குலம், கோத்திரம் மட்டுமல்ல, குந்தியிருக்கும் இடத்தில்

எதை யோசிப்பான் என்பது வரைக்கும் தெரியும். இப்போது மதன் எங்கு பயணம் போகிறான் என்பதும் நன்றாகவே தெரியும். அதனால்தான் ஊர்காவற்றுறைக்குப் போவ தாகச் சொன்னவனிடம் ஏன்? எதற்கு என்ற கேள்விகளைக் கேட்கவில்லை.

ஐந்து நாளைக்கு முன்னால் பத்திரிகையில் வெளிவராத சிறப்புச் செய்தியாக வலம் வந்தது மதன் பற்றிய செய்திதானே. பிறகு எப்படி அவனிடமே விசாரிக்க மனம் உந்தும்.

பொலிஸார் வலை விரித்து தேடுகிறார்கள் என்று தெரிந்தும் பயமின்றி சாராயம் கடத்தும் தைரியம் தன்னிடம் மட்டுமே உள்ளதாகப் பீத்திக்கொள்வான், மதன். தன்னைப்போல் பலர் இத்தொழிலைச் செய்தாலும் தானே இத்தொழிலில் சக்கரவர்த்தி என்று பெருமை கொள்வான். ஒரு போத்தலுக்கு அறு நூறு அல்லது எழுநூறு ரூபாய் என்றால் நாள் வருமானம் ஆறாயிரத்துக்கு மேலாக கிடைக்குமல்லவா. வருமானம் கிடைக்கின்றது என்றாலும் போத்தல்களைக் கொண்டுவந்து சேர்ப்பதில் படாதபாடு படவேண்டியிருந்தது. பிடிபட்டால் வேறு கதையின்றி வழக்குப் பதிந்து விடுவார்கள். இந்தச் சிக்கலைச் சமாளித்து வியாபாரம் செய்கிறவனுக்கு இந்த வருமானம் போதுமானது இல்லையென்றுதான் கூறவேண்டும். சாராயம் விற்பனை செய் கிறவர் என்று அறிந்தாலே பொலிஸார் அடிக்கடி வீட்டுப்பக்கம் வருவதும், வெருட்டி லஞ்சம் கேட்பதும், நாளுக்கு ஒரு போத்தல் தட்சணை கேட்பதும் பெருவழக்காக இருந்தன. இவற்றையெல்லாம் சமாளித்து லாபம் அரைவாசி நட்டம் அரைவாசி என்று வியாபாரம் செய்தாலும் இடையிடையே பொலிஸாரிடம் மாட்டிக்கொள்ள வேண்டியிருந்தது.

கைநீட்டி வேண்டிய சாராயத்திற்குக்கூட விசுவாசமாக வேலைசெய்யாத பொலிஸ் காரர்களை மதன் வெறுத்தான். அரசாங்கம் வழங்குகின்ற மாதச் சம்பளத்திற்கு ஏற்ற வேலையை செய்யாவிட்டால்கூட தான் கொடுத்த போத்தல் சம்பளத்திற்கு ஏற்ற வேலையை செய்திருக்கலாமே என்று கேள்வி எழுப்புவான். தனக்குப் பாதுகாப்பாய் இருந்து என்ன பிரச்சினை வந்தாலும் பார்த்துக்கொள்வதாக வாக்குத் தந்துவிட்டு தன்னையே சாராயத்தோடு கைதுசெய்து வழக்கெழுதிய பொலிஸார் மீது அவனுக்கு



மிகுந்த கோபம்.

ஊருக்குள் அடிக்கடி கொண்டாட்டங்கள் இடம்பெறுவதனால் வியாபாரம் நல்ல வண்ணமே போய்க் கொண்டிருந்தது. விற்பனைக்கு ஏற்ற கொள்வனவை செய் வதற்குப்போய் கையும்மெய்யுமாக அகப் பட்டுக்கொண்டான். அன்று. வலை மூட் டைக்குள் இருந்தவை, கைப்பைக்குள் இருந்தவை என மொத்தம் பன்னிரெண்டு போத்தல்கள். மாவிலித் துறைமுகத்திலேயே பொலிஸார் மடக்கிப்பிடித்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச்சென்றனர். ஐந்து நாட்களில் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் வழக்கு என முடிவைப் பெற்றுக்கொண்டு வீடுதிரும்பும்போது இரவு பன்னிரெண்டு மணியாகிவிட்டது. இந்தச் செய்தியை அறி யாத ஆட்களில்லை. அதனால்தான் ஊர் காவற்றுறைக்குப் போவதற்கு வந்ததாகக் கூறியவனிடம் ஏன் என்று கொன்ஸ்ரையின் திரும்பக்கேட்கவில்லை.

ஏற்கனவே ஏழுமணிப் படகினைத் தவறவிட்டாகியது. இப்போது எட்டு மணியாகி விட்டது. இனிப் புறப்பட்டால்கூட உரிய நேரத்திற்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தை அடைவது சாத்தியமா என்ற யோசனையிலும் அவனை இன்னொரு யோசனை வெகுவாக அமைதிப்படுத்தியது.

ஊரில் மதுக்கடை அமைப்பதற்கு தனியார் விடுதி ஒன்றிற்கு அனுமதி அளிக்கப்பட்ட செய்தி ஊர் முழுவதும் பாரிய பேசுபொருளாக

இருந்தது. மதுபானசாலையோ சினிமாத் தியெட்டரோ இல்லாத ஊர்: எங்கள் ஊர் என மார்தட்டிய ஊர்மக்கள் இந்த அனுமதியின் பின்னர் கிளர்ந்தெழுந்து போராட்டங்களில் ஈடுபட்டனர். மதுபானசாலை அமைப்பதற்கு எதிராக நடைபெறுகின்ற போராட்டங்களில் கலந்துகொண்டு அதற்கெதிராகப் போராடுமாறு தனது மகனிடமும் மகளிடமும் கூறியிருந்தான். அவர்களும் போராட்டங்களில் கலந்துகொண்டு **"நற்குடியை அழிக்கும் குடி நம் தீவிற்கு வேண்டாம்"** என உரக்கக் கத்தி அப்பாவின் கட்டளைக்கு ஏற்றபடி நடப்பவர்கள் என்பதை நிரூபித்தனர். எனினும், அனுமதி அளிக்கப்பட்ட விடயத்தில் மாற்றம் ஏற்படவில்லை. ஊரை உறங்கவிடாமல் அனுதினம் பேசப்பட்ட இந்த விடயம் மதனின் உறக்கத்தையும் கலைத்தெறிந்தது. மதுபானசாலை ஒன்று திறக்கப்பட்டால் தன்னுடைய வியாபாரம் சரிந்துவிடும் என்ற பயம் அவனை ஆட்கொண்டது. இருக்கின்ற பிரச்சினைகளோடு இந்தப் பிரச்சினை வேறு அனுதினம் இவனை அதீத யோசனைக்குத் தள்ளுவதுமுண்டு.

கண்களை மூடி ஆழ்ந்த யோசனையில் இருந்தவனை, நித்திரை கொண்டுவிட்டான் என்று நினைத்து "மதன் வள்ளம் வெளிக்கிடப் போகுதாம், எழும்பு தம்பி" என்று சண்முகத்தார் தட்டிவிட்டு நடந்தார். சமுத்திரதேவா வள்ளம் தயார்நிலையில் இருந்தது. அருகில் குமுதினிப்படகு நங்கூரமிடப்பட்டிருந்தது.

அனைவரது கண்களும் குமுதினிப் படகினை நோக்கியிருக்க சமுத்திரதேவா படகு தனது பயணத்தை ஆரம்பித்தது. வள்ளத்தில் இருப்பவர்கள் கேட்டு ரசிக்கும் வண்ணம் நாற்பது வருடத்திற்கு முன்னர் நடைபெற்ற சம்பவங்களை சுவாரஸ்யமாகக் கூறினார், முருகேசு அண்ணன். குமுதினி என்று அந்தப் படகிற்கு பெயரிட்டது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த க.பொ. ரத்தினம் என்பதிலிருந்து அது, அவரின் மனைவியின் பெயர் என்பது வரைக்கும் எத்தனை கதைகள். இக்கதை சொல்கின்ற வாக்கிலேயே கிளிநொச்சி, முல்லைத்தீவு வாழ் சொந்தங்கள் பண்டைய கதைகளை இணைத்துவிட மறக்கவில்லை. நடைபெற்ற கதைகளை நகைச்சுவையோடு சொல்வது ஊரவர்களுக்கே இருக்கும் விசேட பண்பு. இவை அனைத்தையும் கேட்டவனாய் மதனும் அமர்ந்திருந்தான்.

ஒவ்வொரு அலைமேவலுக்கும் கடல்நீர் படகுடன் மோதுண்டு விளையாடவே மதன் உட்பட பலர் பகுதியளவில் நனைந்துவிட்டனர். வள்ளக்காரரிடம் ரூபா இருநூறைக் கொடுத்த பின்னர் சில்லறையாக ரூபா நான்காயிரத்து எண்ணூறு மதனின் கையில் இருந்தது. அதை சட்டைப்பையில் இட்டுக்கொண்டு இறங்குதுறையில் சட்டெனக்குதித்து பேருந் தில் ஏறினான். ஒரு மணித்தியால பேருந்துப் பயண முடிவில் ஊர்காவற்றுறை நீதிமன்ற வளாகத்தை அடைந்தான் மதன்.

"அடேய் மதன். ரெண்டாவது லோஞ்சியில வந்தியோ. இங்கதான் நீயும் வெளிக்கிட்டனி எண்டு சொல்லி இருந்தா நேவிக்காரனோட கதைச்சு முதல் லோஞ்சியில வாறமாதிரி செய்திருப்பேனேடா"

என்றபடி தனது வீரப்பிரதாபங்களோடு யுவானிஸ் முன்னுக்கு வந்துநின்றான்.

"நான் உங்கள மாவிலியில காணல, கண்டிருந்தா சொல்லியிருப்பேன்" என்றபடி தன்வேலையைப் பார்க்க விரும்பினான். அவனது கண்கள் சட்டத்தரணியைத் தேடும் பணியில் மும்முரமாக காணப்பட்டது.

ஒருவழியாக சட்டத்தரணியைக் கண்டு பிடித்துப் பேசும்போதுதான் அவனுக்குத் தெரிந்தது, கூடிய விரைவில் மீண்டும் ஒரு பயணம், அதே மக்களுடன், அதே படகில் பயணிக்க வேண்டும் என்று.

வழக்குக்கு வராததற்கு ஒரு கட்டணம், சட்டத்தரணிக்கு ஒரு கட்டணம், பயணச் செலவு என்று கூட்டிப்போட்டான் மனதில். அந்தப் பொலிஸ்காரனுக்கு நான்கு போத் தல்கள் கொடுத்திருந்தால் இதனைவிட செலவு அதிகமாக வந்திருக்கும் என்று எண்ணிய படியே தனது தற்போதைய முடிவுக்கு வந்தான். இன்றைய பயணச் செலவை ஈடுசெய்து அவனது வியாபாரம் சீர்பெற வேண்டுமானால் கட்டாயம் இன்று நான்கு சாராயப் போத்தல்களை இறக்குமதி செய்தே ஆகவேண்டுமாம். இதுதான் இப்போதைக்கு ம(னி)தனின் கணக்காக இருந்தது.

○○○



# புலவர் பெருமக்கள் வறுமை கொடுமையை பாடியது



நாட்டிய கலாநிதி
**கார்த்திகா கணேசர்**
அவுஸ்திரேலியா

## நாரை விடு தூது

புலவர் பலர் ஏழ்மையில் வாடியபோதும் அவர்கள் பட்ட கஷ்டத்தை கவிதையாக வடிப்பதால், அவர்கள் கவி உள்ளத்திற்கு அது ஒரு வடிகாலாக அமைந்ததோ என எண்ணத் தோன்றுகிறது. இவர்கள் வாழ்ந்து பல நூற்றாண்டுகள் கடந்தபோதும் அந்த கவிதைகளை இரசித்த பெருமக்கள் அவற்றை பாதுகாத்து எமக்கு கையளித்துள்ளனர் என்றால் அதில் உள்ள கவிநயமே காரணம். இவ்வாறு எம்மை வந்தடைந்த கவிதைகளால் அன்றைய புலவர்களின் வாழ்வை அறிய முடி கிறது. வாழ்வில் ஏழ்மை மிகவும் கசப்பானது. உண்ண உணவும் உடுக்க உடையும் இல் லாது தவிக்கும் வாழ்வு வருந்தத்தக்கது. ஆனால் அந்த வாழ்வையே கலைக்கு பொருளாக்கி பாட்டாக வடித்தால் அதை ரசிக்கிறோம். இந்த பாடல்களிலிலோ புல வர்கள் எம்மையும் தன்னுடன் இணைந்து வருந்த வைத்துவிடுகிறார்.

வறுமையில் வாடும் தன் மனைவி, தன் வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருப்பாள். பாண்டியனிடம் பொருள் பெற்று வருவார் வறுமை நீங்கிவிடும் என காத்திருப்பாள். ஆனால் பாண்டியன் அரண்மனைக்கு அவரால் போக முடியவில்லை. நள்ளிரவு நேரம். அப்போது வீட்டு ஞாபகம் வருகிறது. மனைவிக்கு தன்னிலை சொல்ல நாரையை தூது விடுவது போல பாட்டை பாடினார்.

நாரையே! நாரையே!
சென்நிறக் கால் படைத்த நாரையே!

பழம் பழுக்கும் இயல்புடைய பனைமரத்தின் கிழங்கை இரண்டாக பிளந்தது போன்ற பவள நிறத்தில் கூர்மையான வாய் படைத்த செங்கால் நாரையே, நீயும் உன் மனைவியும் தென்திசையில் உள்ள தென்குமரி கடலில் நீராடிவிட்டு வடதிசை செல்வீரானால், எங்கள் ஊரான சத்திமுற்றத்தின் குளத்தில் தங்கி இருந்து, எங்கள் வீட்டில் நனைந்துபோய் ஈரச் சதுப்பேறி இருக்கும் சுவரின்மேல் நிற்கும் கூரையில் உள்ள பல்லி எப்போ (நாயகன் வருகையை அறிவிற்கும் முறையில்) ஒலி செய்யுமா என்று காத்திருக்கும் என் மனைவியை கண்டு, ஆடையில்லாமல் வாடை காற்றில் ஒடுங்கி, கையினால் உடம்பை பொற்றி, காலினால் தேகத்தை அணைத்து, பெட்டிக்குள் இருக்கும் பாம்புபோல் மூச்சு விட்டுக் கொண்டிருக்கும் தரித்திரனாகிய என்னை கண்டதாக சொல்லுங்கள்.

நாராய்! நாராய்! செங்கால் நாராய்!
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!
நீயும் நின் மனைவியும்தென்திசைக் குமரி
ஆடி வடதிசைக் (கு) ஏகுவீர் ஆயின்,
எம்ஊர் சத்திமுற்ற வாவியுள் தங்கி,
நனைசுவர்க் கூரை கனைகுரல் பல்லி
பாடுபார்த்(து) இருக்கும் எம் மனைவியைக் கண்டு
எம்கோன் மாறன் வழுதி கூடலில்,
ஆடையின்றி வாடையின் மெலிந்து,
கையது கொண்டு மெய்யது பொத்தி,
காலது கொண்டு மேலது தழிஇப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழையாளனைக் கண்டனம் ஏனுமே.

இந்த நாரை விடு தூதைக் கேட்கிறான் மாறுவேடத்தில் நகர் சோதனைக்கு வந்த பாண்டிய மன்னன். கவிஞனை அரண்மனைக்கு

அழைத்துச் சென்று உண்டி, உடை முதலியன வும் மேலும் பொன்னும் பொருளும் கொடுத்து அவனை ஊருக்கு அனுப்பி வைக்கிறான் மன்னன். ஏழை கவிஞனின் வறுமையை போக்கியது இப்பாடல். இந்தப் புலவர் பெயர் தெரிய வில்லை. இவர் ஊர் சத்திமுற்றத்தில் என பாடலில் வருவதால் ***சத்திமுற்ற புலவர்*** என்றே பெயர் பெறுகிறார். இப்புலவர் அரசனிடம் பொன்னும் பொருளும் பெற்றபின், இப்போ எனக்கு மன்னன் பொன் பொருள் எல்லாம் கொடுத்தான், அதற்குமுன் தன்வீட்டு நிலை கூறுகிறார்.

வெறும்புற் கையும் அரி
தாம்: கிள்ளை சோரும்என்
வீட்டில் வரும்
எறும்புக்கும் ஆற்பதம்
இல்லை முன் னாள்:என்
இருங்கலியாம்
குறும்பைத் தவிர்த்த
குடிதாங்கி யைச்சென்று
கூடியபின்
தெறும்புற்கொள் யானை
கவளம்கொள் ளாமல்
தெவுட்டியதே!

முன்பெல்லாம் வீட்டில் வெறும் கஞ்சியும் இராது. கிளி வயிற்றிற்கு சோறு கிடையாமல். அது பசியோடு வாடும். அதுமட்டுமா எறும்புக்கு கூட அரிசி நொய் அகப்படாது. பெரு வறுமை நிலவியது. குடிதாங்கும் அரசனை பார்த்த பின், சாதாரண புல்லை கண்டாலும் எடுத்து தின்னும் யானை, இப்போது சோற்றுக்கவளத்தை விளுங்க முடியாது திணறுகிறது, அதுதான் இன்று என் வீட்டில் நடைபெறுகிறது என மன்னனால் தன் வாழ்வு செழித்தமையை கூறுகிறார் புலவர்.

## பாக்குவெட்டி பறக்குமா?

ஒரு புலவர் வீட்டில் பாக்குவெட்டி காணாமல் போய்விடுகிறது. பாக்குவெட்டிக்கு என்ன சிறகா இருக்கிறது. யாராவது எடுத்திருந்தால் அவர்களை குற்றம் சாட்டும் துணிவு ஏழை புலவருக்கு இல்லை. அந்த பாக்குவெட்டி தன் குடும்பத்தாரிடம் உள்ள ஒரே பொருள் அதன் முக்கியம் யாவற்றையுமே பாட்டாக அவர் வீட்டு சுவரில் எழுதிவிடுகிறார். எடுத்தவர் திரும்பி கொடுத்துவிடுவார் என்ற நம்பிக்கையில்.

விறகு தறிக்க, கறிநறுக்க,
வெண்சோற்றுற் றுப்புக்(கு )அடகுவைக்க,
பிறகு பிளவு கிடைத்ததென்றால்
நாலா றாகப் பிளந்து கொள்ள,
பறகு பறகென் றேசொறியப்
பதமாய் இருந்த பாக்குவெட்டி
இறகு முளைத்துப் போவதுண்டோ?
எடுத்தீ ராயின் கொடுப்பீரே!

பாக்குவெட்டியால் தறிகக்கூடிய அளவு விறகே புலவர் வீட்டில் உண்டு. கோடாலியும் கிடையா. அப்படி கோடாலி கொண்டு தறித்தால் கூலி கொடுக்க பணம் இல்லை, அத்தனையையும் வாசிப்போர் புரிய விறகு தறிக்க என்ற ஒரே வார்த்தையில் கூறிவிட்டார் புலவர். கறி நறுக்க வீட்டில் அரிவாள்மணை கிடையாது. வெறுமே சோறுதான் நீர் ஆகாரம் ஆனாலும் அதற்கு உப்பு வாங்கிப் போட அடகு வைக்க இருப்பதும் அந்த பாக்குவெட்டியேதான். பாக்கும் வாங்க சக்தி இல்லாத புலர். புலவராயிற்றே என எப்போதாவது யாராவது ஒரு பாக்கை கொடுத்தால் அதை நாலாக, ஆறாக பிளந்து தடவைக்கு ஒன்றாக வாயில் போட்டுக் கொள்வதும் அந்த பாக்குவெட்டி தேவை.

உடம்பில் ஏழ்மையால் எண்ணெய்பதம் கிடையாது. அதனால் உடல் ஒரே சொறி. அதனால் பாக்குவெட்டியால் சொறிய வேண்டி இருக்கிறது. இத்தனை ஏழ்மையிலும் புலவரின் நகைசுவை போய்விடவில்லை. பாட்டு முளுவதுமே நகைசுவை நிரம்பி உள்ளது. அதிலும் "இறகு முளைத்துப் போவதுண்டோ?." என்ற இடத்தில் சிரிக்காமல் இருக்க முடிவதில்லை.

எழுதியவர் ***ராமச்சந்திர கவிராயர்***.

## காளமேக புலவர் பட்ட துயர்

சிவபெருமான் என்னை ஏன் திரும்ப திரும்ப உலகத்தில் வாழும்படி படைத்து விடுகிறார்? பிறந்து என்ன சுகம் கண்டேன்.? பரம ஏழையாகவல்லவா படைத்து விட்டார். எனக்கு பிறவி அளிப்பதால் அவருக்கு என்ன லாபமோ? காளை வாகனம் போய் யானை வாகனம் கிடைத்துவிட்டதா.? பிக்ஷாண்டியாகக் கோவண ஆடை தரித்தது போய்ப் பட்டாடை உடுத்தாரா.? திருவோட்டில் யாசகம் வாங்கித் தின்னும் நிலைதான் நீங்கியதா? பிக்ஷாண்டியாகதானே இன்னம் இருக்கிறார்.?

திருவிருத்தி நாதர்
திரு அளியா(து) என்னைக்
கருவிருத்தி என்னபலன்
கண்டார்? எருதுபோய்க்
கோட்(டு) இபத்தில் ஏறினரோ?
கோவணம்போய்ப் பட்டாச்சோ?
ஓட்டில்இரந்(து) உண்டதும்போச்சோ?
வாக்கினால் குபேரன் ஆக்கினான்.

காளமேக புலவர் பட்ட துயரை எமக்கு கூறினார், ஒரு மனிதருக்கு எத்தனை வேதனைகள். அவரோ பட்ட கஷ்டம் கேட்போர் மனதை உலுக்கும். ஆயிரம் கண்களை உடையவன் இந்திரன், அவனே என் இடுப்புக்கு வேட்டி ஆகிறான், அத்தனை கந்தல். அக்கினி பகவானோ என்வயிறை விட்டு அகலான். பசி எக்காலமும் வயிற்றில் எரிந்துகொண்டிருக்கும். நித்தம் பிச்சை எடுத்துக்கொண்டு பிஹாடன மூர்த்திபோல் அலைவதால் சிவன் என கருதி எமன் (நிருதி- தென் மேற்கு திசைக்கு அதிபதி) கிட்ட நெருங்கவில்லை. வறுமையின் கொடுமை தாங்காது புலவர் நித்தம் அழுதுகொண்டிருப்பார். அதனால்தான் வருணன் கண்ணை விட்டு அகலவில்லை என்கிறார். சாப்பிடுவதற்கு ஒன்றும் இல்லாமல் காற்றை குடித்து அவரும் பிள்ளைகளும் சீவித்து வாழ்ந்தார்களாம் என்பதை "அனிலமதாகும்". கொள்வோம். என்று குறிப்பிடுகிறார். (அனிலம்) இவ்வாறாக இறைவனோடு இறைவனாக வாழ்ந்த எனக்கு இந்த உலகில் யார் நிகர். இந்த சிறப்புடன் தரித்திர ராஜனை நித்தம் வணங்கி வந்தேன்.

இப்படி வாழ்ந்த எனக்கு மன்னன் திருமலைராயன் கோப்பனுடைய புதல்வன்... தன் பிரதானியை நோக்கி, ஒரே ஒரு கட்டளையிட்டான். அவன் ஓடிபோய் பொன்னை கொண்டு வந்து என் முன் கொட்டினான். திருமலைராயன் என்னை குபேரன் ஆக்கினான். அவன்தான் என் குற்றமற்ற ஈஸ்வரன் ஆவான்.

'இந்திரன் கலையாய் என்மரு(ங்)கு இருந்தான்:
அக்கினி உதரம்விட்(டு) அகலான்:
எமன் எனைக் கருதான் அரன்எனக் கருதி:
நிருதிவந்(து) என்னைஎன் செய்வான்?
அந்தமாம் வருணன் இருகண்விட்(டு) அகலான்:
அகத்தினில் மக்களும் யானும்
அனிலம தாகும் அமுதினைக் கோள்வோம்:
யார்எனை உலகினில் ஒப்பார்?
சந்ததம் இந்த வரிசையைப் பெற்றுத்
தரித்திர ராசனை வணங்கித்
தலைசெயும் என்னை நிலைசெய்கல் யாணிச்
சாளுவத் திருமலை ராயன்
மந்தர புயனாம் கோப்பயன் உதவும்
மகிபதி விதரண ராமன்,
வாக்கினால் குபேரன் ஆக்கினான்: அவனே
மாசிலா ஈசன் ஆவான்.

❍❍❍

---

# திருமணம்

**அநபாய சோழன்**
**(அவுஸ்திரேலியா)**

இரு மனம் இணைவது திருமணம்
இவர் குணம் அவர் குணம்
இயல்பாய் உணர்ந்து
அவர் இவர் குறை நிறை
அனைத்தும் அறிந்து
அக்குறை... நிறை ஆக்க முயன்று
அவர் மனம் இவர் மனம்
மாற்றம் அறிந்து
அகமும் புறமும் அமைதி காத்து

சமத்துவத்தை சமமாய் பேணி
சகிப்புத் தன்மை சரளமாய் கொண்டு
நான் மறந்து நாம் ஆகி
போட்டி பொறாமை புறத்தே தள்ளி
விட்டுக் கொடுப்பை விடாது பற்றி
எதிர்பார்ப்பை இயன்று சுருக்கி
ஏற்றுக் கொள்ளும் எண்ணம் பெருக்கி

தியாக உள்ளம் திடமாய் பெற்று
தீராக் காதல் தீவிரம் கொண்டு
ஈருடல் ஓருயிர் இரண்டறக் கலந்து
இன்பம் துன்பம் இரண்டல என்ற
இயற்கைத் தத்துவத்தை உணர்ந்து
இல்லறத்தை நல்லறமாக்கி
இறைவன் இறைவி.. போல்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல்

சிறுகதை



# இப்படியும் சியானாக்கள்!



-கஸ்ஸாலி அஷ்ரஃப்-

பிலியந்தல பக்கத்திலிருந்து வேரஹெர ஆர்.எம்.வீயைத் தாண்டியதும் வலது பக்கமாக வரும் ரோட்டில் இரண்டு கிலோமீற்றர் அளவில் சென்றால் அபேஷா ஆஸ்பத்திரி வரும்.பொரலஸ்கமுவவுக்குப் போய் ஒரு சுற்றுச் சுற்றி வருவதை விட இது சோட்கட் டிரபிக்கும் குறைவு.

பித்தப்பையில் ஏற்பட்ட புற்றுநோய் ஈரலுக்கும் தாவியிருக்கிறது. இந்த ஆறுமாத காலமாக இரண்டு கிழமைக்கு ஒருமுறை மனைவியுடன் ஆஸ்பத்திரிக்கு அலைய வேண்டி இருக்கிறது. என்னதான் ஸ்கூல் பிரின்ஸிபலாக இருந்தாலும் கணவனெனும் பொறுப்பிலிருந்து விடுபட முடியவில்லை.

வியாழக்கிழமைகளில்தான் கிளினிக். சில நாட்களில் பிள்ளைகள் அழைத்து வருவார்கள். இருந்தாற்போல் ஒருநாள் தங்கச்சி கூட்டி வருவாள். அதிகமான நாட்களில் ஸ்கூலுக்கு லீவு போட்டு நான்தான் வர வேண்டும்.

அடுளுகமை வீட்டிலிருந்து ஹயர் ஆட்டாவில் சென்ற நாங்கள் ஆஸ்பத்திரி வாசலில் இறங்கிக் கொண்டோம்.

அபாயா அணிந்த சுமார் இருபது, இருபத்திரண்டு வயதுப் பெண். கூர்ந்து அவதானித்தேன். சியானாதான். ஊர் ஸ்கூலில் ஆசிரியராக இருந்த போது தரம் எட்டு முதல் ஓஎல் வரை அவளுடைய வகுப்புக்கு நான்தான் வகுப்பாசிரியரும். என்னைக் கண்டும் காணாதது போல் ஒதுங்கிக் கொண்டாள். சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ள கொஞ்சம் அருகே சென்றபோது எங்கோ மறைந்தும் விட்டாள். அங்கு நின்று கொண்டிருந்த அவளது உம்மாவையும் காணவில்லை.

மேல் தட்டில்தான் கிளினிக். கிளினிக் "காட்"டை அதற்குரிய இடத்தில் விரைவாக இட்டால்தான் டாக்டரிடம் காட்ட முந்திக் கொள்ளலாம். படியேறி நடந்து செல்வதற்கான உடல் தெம்பு மனைவிக்கு இல்லை. ஆறுதலாக லிப்ட்டில் வரச் சொல்லிவிட்டு அவசர அவசரமாகப் படியேறினேன்.

அந்தக் காலை நேரத்திலேயே டாக்டர்கள், தாதிகள், ஊழியர்கள், நோயாளிகள், கூட வந்தவர்களென வைத்தியசாலை சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.

"காட்" போடுவதற்கும் நீண்ட கியூ. ஆசனமொன்றில் அமர்ந்து கொள்ளுமாறு மனைவிக்கு சைகை காட்டிவிட்டு நானும் இணைந்து கொண்டேன்.

உம்மாவுக்குத் துணையாக மகள் வந்திருக்கிறாளா? மகளுக்குத் துணையாக உம்மா வந்திருக்கிளாளா? நேருக்கு நேரே சந்தித்தால் கூட அதை விசாரிக்கத்தான் முடியுமா? மனதுக்குள் சங்கடம்.

கடந்த ஐந்தாறு வருடங்களுக்கு முன்னைய எனது வகுப்பை மனது நினைவுக்குக் கொண்டு வந்துது.

"சேர்ட சொந்தப் புள்ள மாதிரி......"

சியானாவையும் என்னையும் வைத்து ஸ்கூலில் அப்படித்தான் கதைப்பார்கள். ஆசிரியர் - மாணவி உறவுக்கும் மேலான உறவு. வகுப்புக்குச் சென்றதும் முதல் வேலையும் அவள் வந்திருக்கிறாளா எனப் பார்ப்பதுதான்.

"சேர் நேத்து எங்கடுட்டில ....." வீட்டில் நடந்ததொன்றைக் கூறி ஆரம்பித்து விடுவாள். இதனால் அவர்களது குடும்ப விடயங்கள் கூட எனக்கும் தெரிந்திருந்தது. அவளுடன் நெருக்கமாகப் பழகுவது ஆசிரியர்கள் சிலருக்குமே எரிச்சலாகத்தான் இருந்தது. அத்தனையையும் தாண்டி எமது உறவு நிலைத்திருந்தது.

எந்நேரமும் கலகலப்பாக இருப்பாள். ஒரு நேரமும் சோர்ந்து கிடக்க மாட்டாள். ஸ்கூலுக்கு வராத நாட்களில் வாப்பாவின் போனிலிருந்து கோலெடுத்தும் சொல்வாள்.

தனது ஒரே இலட்சியம் டாக்டராக வருவதே என அடிக்கடி கூறத் தவறுவதுமில்லை. வீஜீ, சைகாடிஸ்ட், நியுரொலொஜிஸ்ட் ...... இப்படி எல்லாவற்றையும் அந்த வயதிலேயே தெரிந்தும் வைத்திருந்தாள். அதற்கேற்றாற்போல் கணித, விஞ்ஞான பாடங்களில் அதீத திறமையும் காட்டி வந்தாள்.

அதோ! மனைவி அமர்ந்திருக்கும் "பென்ச்" வரிசையின் அடுத்த மூலையில் சியானா. நான் பார்ப்பதை அவதானித்தவள் முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டாள்.

எனது மனம் ஒரு நிலையில் இருக்கவில்லை. கதைக்காமல் விட்டது பெரிதாகப்படவில்லை. "ஐயோ சியானக்கு நோய் இல்லாமலா இருச் சோணும்." மனம் பிரார்த்தித்துக் கொண்டது.

"உம்மக்கு நோயெண்டா வாப்பதானே பொதுவாக வார" இப்படியொரு சந்தேகமும் மனதில் எழுந்தது.

எனது பார்வையிலிருந்து தப்பித்துக் கொள்ள சியானா பெரிதும் முயற்சிப்பது புரிந்தது. நானும் காணாதது போல் தூ ரத்தில் தென்படும் அறிவித்தல் பலகையில் பார்வையைச் செலுத்தலானேன்.

கியூவில் என் பின்னால் இருப்பவர் ஏதோ சொல்ல, திரும்பிப் பார்த்தேன். ஆறேழு பேருக்குப் பின்னால் அவளது உம்மா. நானாகவே தலையைக் கவிழ்த்துக் கொண்டேன்.

"சேர் எப்படீன் எங்கட சியானா?"

ஊட்டில எந்த நேரமும் ஒங்கள பத்திதான் பேச்சி சேர்......"

இப்படியெல்லாம் ஒரு காலத்தில் அடிக்கடி சொல்லிக்கொண்ட அவளது உம்மா றிஸ்மினா எனக்கு தூரத்து உறவும் கூட. ஸ்கூலுக்கு ஏதாவது தேவைகளுக்கென வந்தால் நேரமெடுத்துப் பேசாமல் போக மாட்டாள். கூடவே, ஊர் ஸ்கூலில் நான் ஓஎல் வகுப்பில் இருந்த போது பக்கத்து வகுப்பில், அதாவது ஒன்பதாம் வகுப்பில் இருந்தவள்.

இப்படிப்பட்ட றிஸ்மினா ஒரு வார்த்தை கூடக் கதைக்காதது மனதுக்கு ஒரு மாதிரிதான். கவுண்டரில் "காட்"டைப் போட்டுவிட்டு மனைவியின் அருகில் சென்றேன்.

○○○

அடுத்தது பிளட் டெஸ்டிங். அங்கும் நீண்ட கியூ.

பரிசோதனையை முடித்துக்கொண்டு வெளியே வந்தபோது முகத்துக்கு முகம் உம்மாவும் மகளும். அவர்களுக்கு சங்கடத்தை ஏற்படுத்தக் கூடாதென்பதற்காக காணாதது போல் நானே முகத்தைத் திருப்பிக் கொண்டேன்.

"அன்ன ஒங்களுகிட்ட படிச்ச புள்ள யொண்டு........"

"நாங்க வாழ்ந்து கெட்டதுக. அந்த புள்ளக்கு ஒண்டுமிருச்சபடாது ஆண்டவனே"

மனைவிதான் இப்படிப் பிரார்த்தித்துக் கொண்டாள்.

மூன்று அறைகளில் நம்பர் பிரகாரம் கிளினிக் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

"மிஸிஸ் ஜயதிலக"

"ரேணுகா"

"பெரோஸா"

இப்படி பெயர்களைக் கூப்பிட்டு நோயாளி களை உள்ளே அனுப்பிக் கொண்டிருந்தனர் இருவர்.

தொண்டர்கள் சிலர் இளநீர், தேநீர், பிஸ்கட் எனப் பங்கிட்டுக் கொண்டிருந்தனர். இன்னும் சிலர் இலவச பகலுணவுக்காக ஓர் இஸ்லாமிய அமைப்பின் ஏற்பாட்டில் டோக்கன் வழங்கிக் கொண்டிருந்தனர்.

கொஞ்சம் தூரத்தில் காலியான "பென்ச்"கள் கிடந்தன. அங்கு போய் அமர்ந்து கொண்டால் பெயர் கூப்பிடும் சத்தம் கேட்காது. மனைவி அமர்ந்திருந்த "பென்ச்" ஓரமாக சுவரோடு ஒட்டினாற் போல் நின்று கொண்டிருந்தேன்.

இதற்கிடையில், பிளட் டெஸ்டிங் ரிஸ ல்ட்டுக்காக நம்பரைக் கூப்பிடுவது கேட்கவே போய் அதனை எடுத்து வரும் போதே "ஹஸைனா" என மனைவியை அழைக்கும் சத்தம் கேட்டது.

டாக்டரின் பரிசீலனைக்குப் பிறகு "கியுமோ" வுக்காக அடுத்த கட்டிடத்துக்கு நோயாளியையும் அழைத்துக் கொண்டு ஒரு சுற்றுச் சுற்றி நடக்க வேண்டியிருந்தது. அப்போதும் என் மனதில் சியானாவே. தூரத்தில் உம்மாவும் மகளும் திரீவீலரில் ஏறுவது தென்பட்டது.

○○○

கிளினிக்குச் செல்வதும் சியானாவையும் உம்மாவையும் காண்பதும், என்னைக் கண்டால் அவர்கள் மறைவதுமாக இரண்டு மாதங்கள் கழிந்து விட்டன.

நான் அங்கத்துவம் வகிக்கும் கல்வி வட்டத் தகவலொன்றுக்காக கடந்த வாரம் அவர்களது வீட்டுப் பக்கம் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது ருக்ஸானாவை நீண்ட காலத்துக்குப் பின்னர் வபா மாவத்தையில் சந்திக்கக் கிடைத்தது. பேச்சோடு பேச்சாக



அவள் சொன்ன தகவல் என்னைத் தூக்கிவாரிப் போட்டது.

"சேர் தெரீமோ சியானக்கு ......."

அபேக்'ா ஆஸ்பத்திரி சட்டென நினைவுக்கு வந்தது. "என்தேன் ருக்ஸானா சியானக்கு?"

பிளட் கன்ஸராம் சேர். மாப்பிளேம் உட்டுபோட்ட மாதிரியாம்"

அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி எனக்கு.

ருக்ஸானா தெரிவித்த தகவல்களின்படி சியானா திருமணம் செய்து ஐந்து வருடங்கள். ஓ எல் முடிவடைந்ததும் வாப்பாவின் ஊராகிய கொட்டரமுல்லைக்கு குடிபெயர்ந்து வாழ்ந்த காலத்தில் அங்குள்ள ஒருவருக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டாளாம். நோய் கண்டுபிடிக்கப்பட்டும் ஒரு வருடமாம். கணவனின் அலட்சியப் போக்குக்கு மத்தியில் இருக்கப் பிடிக்காததால் அங்கிருந்து மீண்டும் இங்கு குடியிருக்க வந்ததன் பின்னர் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களுடன் கூட எந்தத் தொடர்பும் இல்லையாம்.

நன்றாக ஞாபகம். ருக்ஸானா, சியானா இருவரையும் கொண்ட அந்த "பட்ச்" ஸ்கூலுக்கு ஓஎல்லில் நல்ல ரிசல்ட் எடுத்துத் தந்தது.பயோ செய்வதற்கென ருக்ஸானா கெகுணுகொல்லைக்குச் சென்று விட்டாள். "ஒன்பது ஏ" எடுத்தும் சியானா ஆட்ஸ்ஸுக்குக் கூட வரவில்லை.

"கொழும்பு சாச்சி ஊட்டிலயாம்"

"மதரஸாக்கு சேரப் போறாம்"

"கல்முனேல படிச்சியாம்"

வந்த தகவல்கள் இவை.கல்முனைக்குச் சென்றிருந்தால் லீவிங் சர்டிபிகேட் எடுக்க வந்திருக்க வேண்டும்! திருமணம் செய்து விட்டதாக சில நாட்களில் ஒரு தகவல் வந்தது. அதன் பின்னர் ஸ்கூலுக்கு வரவழைப்பதற்கான முயற்சியை ஆசிரியர்களாகிய நாங்கள் கைவிட்டு விட்டோம்.

ருக்ஸானா சொன்னவற்றுக்கும் அபேக்ஷா ஆஸ்பத்திரியில் என்னைக் கண்டு மறைந்ததற்கும் இடையிலான தொடர்பை எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்த போது மீண்டும் ருக்ஸானா,

"ரிஸால்ட் வாரதுக்கு முந்தியே சாடசாடயா இருந்தாம் சேர்


"நோயெண்டு சொல்லாம முடிச்சி தந்த தெண்டு மாப்பிளேம் உட்டுட்டாம் பாவம். ரெண்டு வயசு புள்ளயொண்டும் இருச்சிய.. அழும் ருக்ஸானாவுடன் சேர்ந்து கொண்டேன் நானும்.

வறுமைக்குப் பயந்து ஓஎல் முடிவடைந்ததுமே திருமணம் செய்து வைத்தார்களா? நோய் முற்றிவிடுமெனப் பயந்து முந்திக் கொண்டார்களா? - சிந்தித்தால் மூளை குழம்பிவிடும் போலிருந்தது.

"கென்ஸர் மட்டுமில்ல, இப்ப கொஞ்ஜம் கூடக்கொறய அதேம்இதேம் பேசியாம் ......." கடைசியாகச் சொன்னதைக் கேட்டு ஒன்றுமே பேசத் தோன்றவில்லை.

இப்படி எத்தனை சியானாக்களோ! அவளது கணவனைப் போன்ற எத்தனை கணவன் மார்களோ!

ooo



# ஸ்ரீனிவாச இராமானுஜரும் சுவாமி விவேகானந்தரும்


சமரபாகு சீனா உதயகுமார்
(வல்வெட்டித்துறை)


நன்கு நெருக்கமான நண்பர்கள் என்போர் 220, 284 எனும் எண்கள்போல் இருப்பார்கள் என கணிதமேதை ஸ்ரீனிவாச இராமானுஜர் கூறுகிறார்.

“உன்னில் என்னை நான் கண்டேன். உன்னால் இங்கு வாழ்கிறேன்” என்று புலமைப்பித்தன் பாடலாக எழுதியுள்ளார்.

220 இன் காரணிகள் 1, 2, 4, 5, 10, 11, 20, 22, 44, 55, 110 ஆகும். (220 ஐ தவிர்த்து). இவற்றினை 220 இன் இயல்புகள் என்றும் சொல்லலாம். இந்த காரணிகளின் கூட்டுத்தொகை 284 ஆகும்.

இதேபோல, 284 இன் காரணிகள் 1, 2, 4, 71, 142 ஆகும். (284 தவிர்த்து). இவற்றினை 284 இன் இயல்புகள் என்றும் சொல்லலாம். இந்த காரணிகளின் கூட்டுத்தொகை 220 ஆகும்.

முடிவாக: 220 என்ற எண்ணின் இயல்புகளை கொண்டு 284 என்ற எண்ணினை அறிவது போல், 284 என்ற எண்ணின் இயல்புகளை கொண்டு 220 என்ற எண்ணினை அறிய முடிகிறது.

இதைத்தான் சுவாமி விவேகானந்தர், “உன் நண்பனை யாரென்று நீ காட்டு உன்னை யாரென்று நான் சொல்கிறேன்“ என்கிறார்.

❍❍❍

# விழுதாகிய விதை

விழுந்தேன் வீழ்வதற்கல்ல
எழுவதற்காய்
விதையாய் புதைந்தேன்
சிதைவதற்கல்ல
மண்ணுக்குள் வேர் விட்டேன்
விண் நோக்கி எழுவதற்காய்
உன் ஏச்சுக்களும் ஏளனங்களும்
உரமாகின
விதையாய் புதைந்து
செடியாய் எனை நிறுத்தினேன்
வாழ்க்கை வாழ்வதற்கே
வீழ்வதற்கல்ல
வீரம் கொண்ட நெஞ்சோடு
வீற்றிருப்பேன் வீரமகவாய்

**கீதா கணேஷ்**

# பிணைப்பு

என் மென் விரல்
சீப்புக்கொண்டு
மெதுவாக
உன் தலைகோதி
ஆடைகளைச்சரி செய்து
தன் அழகனை
அழகுபடுத்தி
திருப்தியாயிருந்தாலும்
திரும்ப திரும்ப
சீர்செய்து ரசித்து
நொடிக்கொருதரம்
அதட்டி.
இறும்பூதெய்தும்
கணம்தோறும்
வழிப்படுத்தும் தலைவியாய்
மிளிர்பவள்
உன் கைவிரல் கோர்த்து
நடக்கையில் மட்டும்
ஏனோ
நடை பயிலும்
மழலையாகிறாள்!

# மேரு மாத்திரை சந்தம் - எண்ணொழுங்கு (Fibonacci Sequence)




**கோ**டிக்கணக்கான வருடங்களாக இயற்கையில் ஓர் ஒழுங்கு காணப்பெறுகிறது.
இயற்கையின் ஒழுங்குக் கட்டமைப்பில் மேரு மாத்திரை சந்த எண்ணொழுங்கு அல்லது
பிபனாசி (Fibonacci) எண்ணொழுங்கு விரவியுள்ளதைக் காணலாம்.
ஈராயிரம் வருடங்களுக்கு முன்னர், பிங்கலர் என்பவர் கவிகளுக்கான சந்த அமைப்பில் எடுத்துக்காட்டிய இந்த எண்ணொழுங்கினை பிற்காலத்தில் இத்தாலிய நாட்டைச் சேர்ந்த பிபனாசி எனும் கணித அறிஞர் பிரபல்யப்படுத்தினார்.
மேரு மாத்திரை சந்த எண்ணொழுங்கானது இயற்கை, உயிரியல், கணிதம், இலக்கியம், வானியல், சங்கீதம், வணிகம், மெய்யியல் என, பல துறைகளில் தாக்கம் செலுத்தியுள்ளது.
இவ்வெண்ணொழுங்கைப் பற்றிய ஓர் அறிமுகத்தை முன்வைப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

◎ ஞானம் பாலச்சந்திரன்

## 1 - அறிமுகம்

கோடிக்கணக்கான வருடங்களாக இயற்கையின் இயக்கங்களானவை குறித்த ஒழுங்குகளில் நடைபெற்றுவருகின்றன. கோள்கள் அனைத்தும் ஏன் கோள வடிவில் உள்ளன? கோள்கள் ஏன் நீள் வட்டப் பாதையில் சுழல்கின்றன? பிறந்த உயிர்கள் ஏன் இறக்கின்றன?

இவ்வாறாக **ஏன்** குறித்த ஒழுங்குகளில் இயற்கை இருக்கிறது, இயங்குகிறது? என்பதை **மெஞ்ஞானமும் விஞ்ஞானமும்** காலங் காலமாக விளங்க முற்பட்டும், விளக்க முற்பட்டும் வந்துள்ளன; வருகின்றன.

இது ஒருபுறம் இருக்க, **இயற்கையின் அமைப்புகளுக்கிடையில் ஏதும் கட்டமைப்பு முறையிலான** (Pattern) **தொடர்பு உண்டா**? என்பதைக் காணமுயலும் முயற்சிகளும் நடைபெற்றவண்ணம் உள்ளன. இயற்கைக் கட்டமைப்பு முறைகளில் காணப் பெறும் ஓர் ஒழுங்குதான் **மேரு மாத்திரை சந்த எண்ணொழுங்கு** அல்லது Fibonacci Sequence. என்பதாகும். இதைப் பற்றிய ஓர் அறிமுகத்தை முன்வைப்பதே இக் கட்டுரையின் நோக்கம்.

## 2 - பிபனாசி எண்ணொழுங்கு

எண்களில் ஒற்றை எண்கள் (1,3,5,7,9,..), இரட்டை எண்கள் (2,4,6,8,..), முதன்மை எண்கள் (1,2,3,5,7,11,13,..) போன்ற **எண்ணொழுங்குகள்** உள்ளமையை பலரும் அறிவர். இதேபோன்ற ஓர் எண்ணொழுங்குதான் பிரபல்யமான பிபனாசி (Fibonacci) எண்ணொழுங்காகும்.

இத்தாலி நாட்டைச் சேர்ந்த Fibonacci என்பவர், இந்த எண்ணொழுங்கைப் பற்றி விபரமாக கி.பி. 1200களில் எழுதியுள்ளதால் அவரின் பெயரால் இவ்வெண்ணொழுங்கு பிரபல்யம் அடைந்துள்ளது. இந்த எண்ணொழுங்கில், அடுத்தடுத்து வருகின்ற இரண்டு எண்களின் கூட்டுத்தொகையானது அதற்கு அடுத்துவரும் எண்ணாக அமையும். அதாவது பூச்சியம் தொடங்கி,

0, 1, 1, 2, 3, 5, 8, 13, 21,...

என்பதாக இவ்வொழுங்கு அமைகிறது. இத்தொடரில் முதல் இரண்டு எண்களாக 2, 3 ஆகியவற்றை எடுத்துக்கொண்டால் அடுத்து வரும் மூன்றாவது எண், முதலிரண்டின் கூட்டுத் தொகையான 5 ஆகும். அதன்பின்னர் முதல் இரண்டு எண்களாக 3, 5 ஆகியவற்றை எடுத்துக்கொண்டால் அடுத்துவரும் மூன்றாவது எண், முதலிரண்டின் கூட்டுத்தொகையான 8 ஆக அமையும். இவ்வாறாக முடிவிலி வரை இத்தொடர் நீண்டு செல்லுகிறது.






'பிபனாசி'
இத்தாலிய
கணிதவியலாளர்
(கி.பி. 1170 – 1250)

**பிபனாசி எண்ணொழுங்கு**

0 1 1 2 3 5 8 13

0 + 1 = 1
1 + 1 = 2
1 + 2 = 3
2 + 3 = 5
3 + 5 = 8
5 + 8 = 13



*இந்த எண்ணொழுங்கானது 1200களில் **பிபனாசி** என்பவரால் பிரபல்யமானாலும் இந்தத் தொடரை அதற்கு 1500 வருடங்களுக்கு முன்னர் (கி.மு. 2-3 நூற்றாண்டுகளில்) இந்திய அறிஞரான **பிங்கலர்** முன்வைத்துள்ளார் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.*

## 3 - பிங்கலரின் சந்தஸ் சாத்திரம்

*வடமொழி அறிஞர் **பாணினி**யின் சகோதரராக **பிங்கலர்** அடையாளப்படுத்தப்பெறுகிறார். இவர், வடமொழி உரைநடை, சந்த அமைப்பு, கணித வியல் போன்ற துறைகளில் பங்காற்றியவர். **துவித எண் அடி**யை (0,1) முதன்முதலில் அறிமுகப் படுத்தியர் எனும் பெருமையை ஆய்வாளர்கள் இவருக்கு வழங்கியுள்ளனர்.*

*இவர் **சந்தஸ் சாஸ்திரம்** அல்லது **பிங்கல சூத்திரம்** எனும் வடமொழி நூலைத் தந்துள்ளார். தமிழில் பிங்கல நிகண்டு எழுதிய பிங்கல முனிவரும், வட மொழியில் சந்தஸ் சாத்திரம் எழுதிய பிங்கல ஆச்சாரியாரும் இருவேறு அறிஞர்கள் என்பது இவ்விடத்தில் கவனத்தில் கொள்ளத்தக்கது.*

*வடமொழியிலுள்ள சந்தஸ் சாத்திர நூலிலே இங்கு எடுத்துக் காட்டப்பட்ட பிபனாசி எண் ணொழுங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.*


*__ஒலி கட்டமைப்பை__ கவனத்தில்கொண்டு கவிதை களை **சந்தம்** அழகுபடுத்துகிறது. கவிதையின் **யாப்பு** இலக்கணத்துடன் தொடர்புடைய சந்தம் பற்றிய விபரங்களை, தொல்காப்பியம் உட்பட தமிழ் இலக்கண நூல்கள், **வண்ணம்** எனும் வகையில் விளக்கியுள்ளன.*



பிங்கலர்
(கி.மு. 2–3 நூற்)

*இலக்கியங்களில் சந்த அமைப்பை முதன்முதலில் கையாண்டவர் **வால்மீகி** எனப் பொதுவாக கூறப்பெறுகிறது. இவர் ஒவ்வொரு பாடல் அடிகளிலும் (பாதம்) 8 எழுத்துகள் கொண்ட அமைப்பைக் கையாண்டு நான்கு அடிகளில் மொத்தமாக 32 எழுத்துகள் கொண்ட கவிதைகளால் வடமொழி இராமாயணத்தைப் பாடினார். வால்மீகி கையாண்ட இந்த சந்த அமைப் புக்கு **அனுஷ்டுப் சந்தம்** என்று பெயர்.*

*பிங்கலர்முதலானமொழியியலாளர்கள் இவ்வகையான சந்தங்களுக்கு இலக்கணங் களை வகுத்துள்ளனர்.*




வடமொழி
சந்தஸ்
சாத்திரம்
(அட்டைப்படம்)

இதனாலேயே **கம்பன்,**

வாங்க அரும் **பாதம் நான்கும்**
**வகுத்த வான்மீகி** என்பான்.
தீங்கவி. செவிகள் ஆரத்
தேவரும் பருகச் செய்தான்
ஆங்கு. அவன் புகழ்ந்த நாட்டை.
அன்பு என்னும் நறவம் மாந்தி.
மூங்கையான் பேசலுற்றான் என்ன
யான் மொழியல் உற்றேன்.

*என சந்த அமைப்பு வகுத்து இராமாயண காவ்யம் பாடிய வான்மீகியை உயர்த்துகிறான்.*

*இங்கு கூறப்பெற்ற அனுஷ்டுப் சந்தம் போன்று பல சந்தங்கள் வடமொழி இலக்கியங்களில் உள்ளன.*

***அருணகிரிநாதர்*** *பாடிய திருப்புகழ்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சந்தங்கள் இருப்பதாக தமிழ் ஆய்வாளர்கள் கணித்துள்ளனர். அதேபோன்று சந்தங்கள் பற்றி,* ***வண்ணத்தியல்பு*** *எனும் நூலை எழுதிய* ***வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்,*** *சந்தங்களில் அமைந்த பாடல்களை பாடுவதில் மிகுந்த ஆளுமை உள்ளவராக அடையாளம் பெறுகிறார். ஈழத்து இஸ்லாமிய இலக்கியத்தின் கொடுமுடியான* ***அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர்*** *பாடிய* ***சந்தத் திருப்புகழ், எண்கலை வண்ணம், எண்கலை வன்மெல்லிசை வண்ணம்*** *போன்ற நூல்களும் இவ்விடத்தில் ஞாபகத்தில் கொள்ளத்தக்கது.*

*இத்தகைய சந்தங்களில் ஒன்றுதான் பிங்கலர் தமது சந்தஸ் சாத்திர நூலில் கூறியுள்ள* ***மேரு மாத்திரை சந்தம்*** *ஆகும்.*



கம்பர்



அருணகிரிநாதர்



ஈழத்து
அப்துல் காதிர் புலவர்

## 4 - மேரு மாத்திரை சந்தம்

***சந்தஸ் சாஸ்திரம்*** *நூலிலே எட்டு அத்தியாயங்களில் 315 சூத்திரங்கள் உள்ளன. எட்டாம் அத்தியாயத்தில் கணிதத்துடன் தொடர்புடைய மிகவும் நுணுக்கமான விடயங்கள் கலந்துரையாடப்பெற்றுள்ளன.*

*பிற்காலத்து உரையாசிரியர்கள் இவற்றை விளக்கி எழுதியுள்ளனர்.*

*பிங்கலரின் மேரு மாத்திரை சந்த அமைப்பினை இயலுமானவரை இலகுபடுத்தி இவ்விடத்தில் நோக்குவோம்.*



தண்டபாணி சுவாமிகள்

# ஈழத்து ராசா வண்ணம்

## அந்தகக்கவி வீரராகவ முதலியார்



அந்தகக்கவி வீரராகவப் புலவர் (17ஆம் நூற்றாண்டு) அவர்கள், யாழ்ப்பாணத்து இராச்சியத்தை ஆட்சி செய்த பரராசசேகரன்மீது பாடிய வண்ணப் பாடலாக **ஈழத்து ராசா வண்ணம்** அமைகிறது.

பரராசசேகரனை உலாவில் கண்ட தலைவி, அவன் மேல் காதல் கொள்கிறாள். காதல் நிறைவேறாததால் பெருந்துயரம் கொள்கிறாள். தலைவியின் துயரத்தை அரசனுக்கு எடுத்துக்கூறி அவளுக்கு கருணை செய்யவேண்டும் எனத் தோழி வேண்டுவதாக இந்த **வண்ணப்பாடல்** அமைந்துள்ளது. அதில் ஒரு பாடல் இங்கு தரப்பெற்றுள்ளது.

**தனனத் தனனதனா தனதன**
**தனன தனனதன தானன**
**தனனத் தனதன தனன தனனதன**
**தனன தனனதன தனதனதான**
**(தொ) தனதான தந்தனா தனனா**

மதுரக் கவிரசமே! அபிநவ
வசன கனஉசித னே! வெகு
மகரச் சலதியில் உலமு சலமதிட
அசுரர் அமரர்நடு வரும்ஒரு மாலே!
திகிரிச் செயதரனே! கருதலர்
திமிறி அனிகமுடி னேவரு
செருவிற் பிரமனும், வெருவிட வருபவர்
சிரமும் உருளவிடு தெரிகணையோனே!
வனகற் பகஇனமே! குறுகலர்
வயிறு பிசையும்அன லே! கடும்
அமரிற் கருநடர், கவுடர், குடகர், குரு
வடுக நிருபர் முடி வருடியஏறே!
கவினார்**இ லங்கைகா வலனே**!





பிங்கலரின் சந்தம் பற்றிய கலந்துரையாடலில் ஒரு மாத்திரை கொண்ட எழுத்து (லகு), இரு மாத்திரை கொண்ட எழுத்து (குரு), ஆகிய இரண்டும் அடிப்படையாக எடுக்கப்பட்டுள்ளன. ஒரு மாத்திரையை 0 என்றும் இரு மாத்திரையை 1 எனவும் எடுத்துக் கொள்வோம். (அடுத்த பக்கம் காண்க)

இதன் அடிப்படையில் ஒவ்வொரு **மாத்திரை கூட்டங்களையும்** உருவாக்க எத்தனை **தனித்துவமான ஒழுங்குகள்** உள்ளன எனக் கணிக்கலாம். இதற்கமைய,

ஒரு மாத்திரை உருவாக்கத்தில் **ஒரு (1)** தனித்துவமான ஒழுங்கும்,

இரு மாத்திரை உருவாக்கத்தில் **இரு (2)** தனித்துவமான ஒழுங்குகளும்,

மூன்று மாத்திரை உருவாக்கத்தில் **மூன்று (3)** தனித்துவமான ஒழுங்குகளும்,

நான்கு மாத்திரை உருவாக்கத்தில் **ஐந்து (5)** தனித்துவமான ஒழுங்குகளும்,

ஐந்து மாத்திரை உருவாக்கத்தில் **எட்டு (8)** தனித்துவமான ஒழுங்குகளும்,

ஆறு மாத்திரை உருவாக்கத்தில் **பதின் மூன்று (13)** தனித்துவமான ஒழுங்குகளும்

வருவதைக் கணிக்கலாம். இந்தத் தொடர்ச்சியானது,

1, 1, 2, 3, 5, 8, 13, 21, 34,55,89..

எனச் செல்வதை அவதானிக்கலாம். இவ்வெண்ணொழுங்கே பின்னர், பிபனாசி எண்ணொழுங்கு என அடையாளம்பெற்றது.

இவ்வெண்ணொழுங்கு அமையும் விதத்தினை மலை (மேரு) - பிரமிட் - Pascal’s triangle எனும் அமைப்பில் எழுதிக் காட்டவும்முடியும். இதனால் பிங்கலர் கண்டுகொண்ட இவ்வெண்ணொழுங்கு, **மேரு மாத்திரை** எனக் குறிப்பிடப்படுகிறது.

| ஒரு மாத்திரை (1 தனித்துவமான ஒழுங்கு) | |
|---|---|
| 0 | (ஒரு மாத்திரை எழுத்து) |


| இரு மாத்திரை (2 தனித்துவமான ஒழுங்குகள்) | |
|---|---|
| 1 | (இரு மாத்திரை எழுத்து) |
| 00 | (ஒரு - ஒரு) |

| மூன்று மாத்திரை (3 தனித்துவமான ஒழுங்குகள்) | |
|---|---|
| 000 | (ஒரு - ஒரு - ஒரு) |
| 01 | (ஒரு - இரு) |
| 10 | (இரு - ஒரு) |

| நான்கு மாத்திரை (5 தனித்துவமான ஒழுங்குகள்) | |
|---|---|
| 0000 | (ஒரு - ஒரு - ஒரு - ஒரு) |
| 11 | (இரு - இரு) |
| 001 | (ஒரு - ஒரு - இரு) |
| 010 | (ஒரு - இரு - ஒரு) |
| 100 | (இரு - ஒரு - ஒரு) |

| ஐந்து மாத்திரை (8 தனித்துவமான ஒழுங்குகள்) | |
|---|---|
| 00000 | (ஒரு - ஒரு - ஒரு - ஒரு - ஒரு) |
| 0001 | (ஒரு - ஒரு - ஒரு - இரு) |
| 0010 | (ஒரு - ஒரு - இரு- ஒரு) |
| 0100 | (ஒரு - இரு - ஒரு - ஒரு) |
| 1000 | (இரு - ஒரு - ஒரு - ஒரு) |
| 011 | (ஒரு - இரு - இரு) |
| 101 | (இரு - ஒரு - இரு) |
| 110 | (இரு - இரு - ஒரு) |

| ஆறு மாத்திரை (13 தனித்துவமான ஒழுங்குகள்) | |
|---|---|
| 000000 | (ஒரு - ஒரு - ஒரு - ஒரு - ஒரு - ஒரு) |
| 00001 | (ஒரு - ஒரு - ஒரு - ஒரு - இரு) |
| 00010 | (ஒரு - ஒரு - ஒரு - இரு - ஒரு) |
| 00100 | (ஒரு - ஒரு - இரு - ஒரு - ஒரு) |
| 01000 | (ஒரு - இரு - ஒரு - ஒரு - ஒரு) |
| 10000 | (இரு - ஒரு - ஒரு - ஒரு - ஒரு) |
| 0011 | (ஒரு - ஒரு - இரு - இரு) |
| 0110 | (ஒரு - இரு - இரு - ஒரு) |
| 1010 | (இரு - ஒரு - இரு - ஒரு) |
| 1001 | (இரு - ஒரு - ஒரு - இரு) |
| 1100 | (இரு - இரு- ஒரு - ஒரு) |
| 0101 | (ஒரு - இரு - ஒரு - இரு) |
| 111 | (இரு - இரு - இரு) |




உதாரணம்:
நான்கு மாத்திரைகளில் வரவேண்டிய ஒலிக்கூட்டத்தை (சொல்லை) அமைக்க எத்தனை தனித்துவமான மாத்திரை ஒழுங்குகள் உள்ளன என இங்கு நோக்குவோம்.

ஒரு மாத்திரை கொண்ட 'த' எனும் எழுத்தையும் இரு மாத்திரைகள் கொண்ட 'னா' எனும் எழுத்தையும் உதாரணத்துக்கு எடுத்துக் கொள்வோம்.

த (0), னா (1)

| | |
|---|---|
| 0000 | (த - த - த - த) |
| 11 | (னா - னா) |
| 001 | (த - த - னா) |
| 010 | (த - னா - த) |
| 100 | (னா - த - த) |


நான்கு மாத்திரை உருவாக்கத்தில் இவ் ஐந்து ஒழுங்கைத் தவிர வேறு ஒழுங்குகள் இல்லை என்பதை அவதானிக்க.













## 5 - இயற்கையில் பிபனாசி எண்ணொழுங்கு


இயற்கைக்கும் இந்த எண் ஒழுங்கிற்கும் மிக நெருங்கிய தொடர்பு உள்ளதை அவதானிக்கலாம். உதாரணமாக **பூக்களினுடைய இதழ்களின் எண்ணிக்கைகள்,** *1,2,3,5,8,13,* ஆகிய எண்களில் அமைவதை இயற்கையில் காணலாம். *4,7,9,10* இதழ்களைக்கொண்ட பூக்களை காண முடியாது. ஒருவேளை தற்காலத்தில் செயற்கை முறையில் உண்டாக்கிய தாவரங்களில் பிபனாசி எண் ஒழுங்கில் வராத இதழ்களைக் கொண்ட மலர்களைக் காண வாய்ப்புண்டு.

அதேபோன்று ஆணிவேர்த்தொகுதி கொண்ட மர மொன்றில் கிளைவிடும் கிளைகளின் எண்ணிக்கையானது இவ்வெண்ணொழுங்கில் அமைவதையும் இயற்கையில் அவதானிக்கலாம்.


பழங்களின் விதைகளின் எண்ணிக்கையும் இவ்வெண்ணொழுங்கை ஒற்றி அமைந் திருக்கும். இவ்வாறான பல உதாரணங்கள் இயற்கையில் உள்ளன.




























## 6 - **சுழி அமைப்பு**

மேரு மாத்திரை சந்த எண்ணொழுங்கிலிருந்து (பிபனாசி எண்ணொழுங்கிலிருந்து) **ஓர் ஒழுங்கமைப்புடைய சுழியை** (Spiral) அமைக்கமுடியும். இவ்வமைப்பில் 2X2 சதுர அமைப்பானது, 3X3 சதுர அமைப்பையும், அதனைத் தொடர்ந்து முறையே 5X5, 8X8, 13X13 ஆகிய சதுர அமைப்புகளையும் அடுக்க முடிவதைக் காணலாம். இந்தச் சதுர அமைப்புகளைத் தொடர்ந்து **வளைந்த பரிதிகளை வரையும்போது அது சுழிபோன்ற அமைப்பைத் தரும்.**

இந்த சுழி அமைப்பை இயற்கையில் மிகச் சாதாரணமாக அவதானிக்க இயலும். **கருவிலுள்ள குழந்தை தொடங்கி பால்வீதி வரையில் இந்த சுழி அமைப்பைக் கண்டுகொள்ளலாம்.**


















55=(34+21)
34=(21+13)
21=(13+8)
13




## 7 - பொன் விகிதம்

இவ்வெண்ணொழுங்கில் ஓர் அற்புதமான விகிதமும் புதைந்துள்ளது. இதனை **பொன் விகிதம்** (Golden Ratio) என கணிதவியலில் அழைப்பர். இவ்விகிதத்தை இலகுபடுத்திக் கூறுவதாயின் தொடரில் வருகின்ற அடுத்தடுத்துள்ள பெரிய எண்ணுக்கும் சிறிய எண்ணுக்கும் **இடையிலான விகிதம் ஏறத்தாழ 1.6** என அமைந்திருத்தலாகும்.

*1, 1, 2, 3, 5, 8, 13, 21, 34,55,89..*

*89 / 55 = 1.618*


*55 / 34 = 1.617*


*34 / 21 = 1.619*


*21 / 13 = 1.615*




மனித உடலமைப்பின் பல பகுதிகளானவை இந்த ***1:1.6*** எனும் விகிதத்தில் அமைந்துள்ளதைக் காணலாம். இந்த விகிதத்தில் அமையாவிடில் உடலமைப்பு சாமுத்திரிய இலட்சணத்தில் அமையாது, சீரற்ற தோற்றத்தைத் தரும் என்பதை நன்கு அவதானிக்கமுடியும். இயற்கையிலும் மனிதனால் உருவாக்கப்பெற்ற பொருட்களிலும் கவனத்துக்குட்படாமலே - அறியாமலே இந்த விகிதம் பொதிந்துள்ளமை ஆச்சரியத்துக்குரியது.



















## 8 - பிரயோகங்கள்

மேருமாத்திரைசந்தஎண்ணொழுங்கானது (பிபனாசி எண்ணொழுங்கானது) பல துறைகளில் பயன்பாட்டில் உள்ளது. உதாரணத்துக்கு **கணிதம், இலக்கியம், உயிரியல், கலை, சிற்ப சாத்திரம், சங்கீதம்** போன்ற துறைகளில் பரவலாகக் கண்டுகொள்ளலாம்.

**வணிகத்துறை**யின் பங்குச்சந்தை எதிர்வு கூறலில் (Fibonacci Retracement) இவ்வெண்ணொழுங்கு பயன்பாட்டில் உள்ளமை கவனிக்கத்தக்கது.

அத்துடன் **கணினித்துறை** உட்பட பல் வேறு **தொழில்நுட்பத்துறை**களில் அண்மைக் காலமாக இவ்வெண்ணொழுங்கு பரவலாக உபயோகப்படுகிறது. கணினியின் தேடல் முறைகள், சேமிப்பு முறைகள், மென்பொருள் உருவாக்கல் எனும் பல செயற்பாடுகளில் இவ்வெண்ணொழுங்கு தாக்கம் செலுத்தி வருகிறது.

பால்வீதியின் கட்டமைப்பானது இவ்வெண்ணொழுங்கின் அடிப்படையான சுழி அமைப்பில் உள்ளதால், பால்வீதிகளின் (Galaxies) அளவை மற்றும் அண்டத்தின் அளவை - விரிவை கணித முறையில் கணிப்பதற்கும் **வானியல்** கணித அறிஞர்கள் பயன்படுத்துகின்றனர்.


முன்னுள்ள இரண்டு எண்களின் கூட்டுத் தொகையானது அடுத்து வரப்போகும் (பின்னால் வரப்போகும்) எண்ணைத் தீர்மானிக்கிறது. இதனை **மெய்யியல்** அறிஞர்கள், நுட்பமாக நோக்குகிறார்கள். நாம், தற்பொழுது செய்யும் கருமங்களானவை, எமக்கு பின்னால் வரப்போகும் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் தாக்கம் செலுத்தும் என்பதை இதனைக்கொண்டு மெய்யியலாளர்கள் வலியுறுத்துகிறார்கள்.

நாம் செய்யும் செயல்களினாலேயே எமக்குரிய தீதும் நன்றும் அமைகின்றன எனும் சிந்தனையை இவ்வெண்ணொழுங்கு வலியுறுத்துகிறது.


**தீதும் நன்றும் பிறர் தர வாரா**


**சங்கீதம், கணினி, வர்த்தகம் போன்ற துறைகளில் இவ்வெண்ணொழுங்கு பயன்பாட்டில் உள்ளது**












## 9 - நிறைவாக

இயற்கை, அனேக அற்புதங்களை தன்னகத்தே புதைத்து வைத்துள்ளது. இவற்றை அறிவதும், அறிந்து அவற்றைப் புரிவதும் தனித்துவ ஆனந்தம் தரும் பயணமாகும். அத்தகைய ஒரு பயணமே ‘மேரு மாத்திரை சந்த எண்ணொழுங்கு’ ஆகும். இவ்வெண்ணொழுங்கு, அதனுடன் தொடர்புடைய சுழியமைப்பு, பொன் விகிதம் என்பனவற்றை புரிந்துகொண்டால், இயற்கையமைப்பில் இவை விரவியுள்ளதை தினந்தோறும் காணமுடியும்.


இவ்வெண்ணொழுங்கைப் புரிந்துகொள்ள முயலும் பயணமானது, எமக்குள்ள இயற்கை பற்றிய புரிதலையும் இயற்கையுடனான எமக்குள்ள நெருக்கத்தையும் அதிகப்படுத்தும்.

பொதுவெளியில், இத்தாலிய நாட்டு அறிஞரான பிபனாசி என்பவரால் முன்வைக்கப்பட்டதாக அறியப்பெறும் இவ்வெண்ணொழுங்கை, இந்திய நாட்டு பிங்கலர் அறிமுகப்படுத்தியுள்ளமை பலரும் அறியாத விடயம். அதுவும் கவிகளுக்கான சந்த இலக்கணத்தை வரையறை செய்யும்போது இவ்வெண்ணொழுங்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

ஈராயிரம் வருடங்களுக்கு முன்னர் பிங்கலரால் கண்டுகொள்ளப்பட்ட இந்த எண்ணொழுங்கானது அண்மைக்காலத்து கணினித்துறை உட்பட பல் துறைகளில் தாக்கம் செலுத்தி வருகின்றமை ஆச்சரியத்துக்குரியது.

தமிழிலும், வடமொழியிலும் ஆயிரக்கணக்கான சந்தங்கள், இலக்கணங்களில் வரையறுக்கப்பட்டுள்ளன. சந்தங்கள் அனைத்திற்கும் கணிதவியலும் முக்கியமாக எண்ணொழுங்குகளும் அத்திபாரமாக அமைகின்றன. மொழி இலக்கண இலக்கியங்களில் கூறப்பெற்றுள்ள ஆயிரக்கணக்கான சந்தங்களில் இதுபோன்று இன்னும் எத்தனையெத்தனை அற்புதங்களும் ஆச்சரியங்களும் மறைந்துள்ளனவோ!

இவை பற்றிய ஆய்வுகள் விரிவாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.



❍ ❍ ❍



# அவுஸ்திரேலியா - மெல்பேண் மேடையில் எல்லோரையும் கவர்ந்த 'சிலப்பதிகாரம்' !





பாடும்மீன்,
சட்டத்தரணி,
சு. ஸ்ரீகந்தராசா



அவுஸ்திரேலியாவில், விக்ரோறிய மாநிலத்தில் உள்ள ***பாரதிபள்ளி*** தயாரித்து வழங்கிய, "சிலப்பதிகாரம்" நாடக ஆற்றுகையின் அரங்கேற்ற நிகழ்ச்சிகள் கடந்த 2024 டிசெம்பர் 6ஆம், 8ஆம் திகதிகளில் விக்டோரியாவில், டண்டினோங்க் நகரத்தில் அமைந்துள்ள, ட்றம்ப் எனப்படும் அழகிய உள்ளரங்கில் நடைபெற்றன. இந்த நாடக ஆற்றுகை பற்றிய எனது பார்வையைப் பதிவுசெய்வதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

குறிப்பிட்டபடி, சரியாக பி.ப. 5.30 மணிக்கு, நிகழ்ச்சியை ஆரம்பிக்கும் அறிவித்தல் கம்பீரக் குரலில் ஒலித்தது. மங்கல விளக்கேற்றும் சம்பிரதாயமான நிகழ்ச்சி சில நிமிடங்களில் நிறைவு பெற்றதும்,

"திங்களைப் போற்றுதும்! திங்களைப் போற்றுதும்!
கொங்கு அலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்று இவ்
அம்கண் உலகு அளித்த லான்"

என்று தொடங்கும், சிலப்பதிகாரத்தின் மங்கல வாழ்த்துப் பாடல், பின்னணிப் பாடகர்களின் கணீரென்ற குரலும், பக்கவாத்தியங்களின் இசையும் கலந்து இனிமை ததும்ப மண்டபத்தில் எழுந்து, பார்வையாளர்களை இருக்கைகளில் நிமிர்ந்து உட்கார வைத்தது. பாடலுக்குப் பொருத்தமாக மேடையின் பின்னணியில் தோன்றிய அழகான காட்சி, இது நடப்பது திரையிலா அல்லது தரையிலா என்று அடையாளம் காண்பதற்கு அரியதாக, இனிமையான பாடலுக்குப் பொருத்தமாக இருந்தது. முறையான நல்ல தொடக்கம்!

மேடையில் அடுத்ததாக என்ன நடைபெறவிருக்கிறது என்பதைச் சொல்வதற்காகக் காட்சிகளுக்கு இடையே கதைசொல்லியாக பேச்சுக் கலையில் திறமைமிக்க இரண்டு இளம் பெண்கள், ஒருவர்மாறி ஒருவர் தோன்றி, தமிழிலும் ஆங்கிலத்திலும் விளக்கம் கொடுத்துக் கொண்டிருந்தனர். இடையிடையே, கூத்தில் கட்டியங்காரன் வருவதுபோல, நடனமணிகளின் நடனம் நிகழ்ச்சியின் ஒரு பகுதியாகவே, பின்னணிப் பாடல்களுடன் அழகிய காட்சிப்படுத்தலாக இடம்பெற்றுக்கொண்டிருந்தது.

சிலப்பதிகாரம் உண்மையில் ஒரு நாடகக் காப்பியமே. அதன் ***முதலாவது அங்கம் கோவலன் கண்ணகி திருமணமே!*** அவ்வாறே, இந்த நாடகமும், இனிய பாடல்களின் பின்னணியோடு அழகாக நடனம் ஆடியவாறு நடனமணிகள் அந்தத் திருமண அறிவித்தலைப் பூம்புகார் நகர மக்களுக்கு அறிவிப்பதில் இருந்து தொடங்கு

கிறது. திருமண அறிவிப்பு சிறப்பாக நடந்தது.

"கோவலன் வந்தான் அவைக்குக் கோவலன் வந்தான் என்றும், கண்ணகி வந்தாளே அவை முன்னே கண்ணகி வந்தாளே" என்றும் கோவலனும் கண்ணகியும் முதன் முதலில் மேடையில் தோன்றும்போது, கூத்து மரபின் அடிப்படையில், பாடிக்கொண்டே தம்மை அறிமுகம் செய்து ஆடிவருகின்ற காட்சி மிகவும் அற்புதமாக இருந்தது.

திருமணத்தின் பின்னர் கோவலனும் கண் ணகியும் மங்கல மன்றலில் மகிழ்ந்திருக்கும் வேளையில், கோவலன் கண்ணகியைப் புகழ் மொழிகளால் பாராட்டுவது சிலப்பதிகாரத்தில் மிகவும் சிறப்பான பகுதி. அப்போது கோவ லன் சொல்வதாகச் சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ள பாடல், "மாசறு பொன்னே வலம்புரி முத்தே..." என்று தொடங்குகின்றது. முதலிரவன்று கோவலனும் - கண்ணகியும் கதைபேசி மகிழ்ந்து குலாவியிருக்கும் இந்தக் காட்சி, கூத்துப்பாடல் போலத் துள்ளல் இசையில் பாடலும், அதற்குரிய அபிநயமும் இடம்பெற்றிருந்தது.

இற்றைக்கு 1800 வருடங்களுக்கு முன்னர், காவிரிப்பூம் பட்டினம் என்று சொல்லப்படும் பூம்புகார் என்ற துறைமுக நகரத்தில், இந்திர விழா எப்படி நடைபெற்றது என்பதை, சிலப் பதிகாரத்தை நன்கு படித்தறிந்தவர்களும் கூடக் கற்பனை செய்திருக்க முடியாத அள வுக்கு, மேடையிலே அழகாக, கச்சிதமாக, என்றுமே மனதைவிட்டு அகலாத வகையில் நம் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்தி யிருக்கிறது இந்த நிகழ்ச்சி. இந்திரவிழாக் காட்சியைப் பார்க்கிறோமா அல்லது அதில் கலந்துகொண்டிருக்கிறோமா என்ற மயக்க உணர்வில் சிலநிமிடங்கள் நம்மை நாமே மறந்திருந்தோம்.

இந்திரவிழா, மாதவி தாழம்பூவின் மடலில் கோவலனுக்குக் கடிதம் எழுதி வசந்த மாலையிடம் கொடுத்து அனுப்பும் காட்சி, கோவலன் - கண்ணகி மதுரைப் பயணம், காளி கோவில் காட்சி, கோவலனை அடை யாளம் காண்பதற்காகக் கௌசிகன் மாதவிக் கொடியிடம் பேசுவதும், அடையாளம் காண லும், குரவைக்கூத்து, கண்ணகி அரண் மனை செல்லல், பாண்டிய மன்னனின் அரண் மனைக் காட்சிகள், எல்லாம் மிகவும் நேர்த்தி யாக அமைந்திருந்தன.

கோவலனுக்குச் சோறு படைக்கும்போது, "பனை ஓலையிலே செய்யப்பட்ட பாயிலே கோவலனை அமரவைத்து, நிலத்தின் வெப் பத்தைப் போக்க நீர் தெளித்து, அதில் வாழை இலைபோட்டு, அந்த வாழை இலையிலே சோறு படைத்தாள்" என்று சிலப்பதிகாரத்தில் சொல்லியிருப்பதை அப்படியே காட்சியாகக் காட்டியிருப்பது அற்புதம். ஆம்! பாயிலே கோவலன் அமர்ந்திருக்கிறான், அந்தப் பாயிலே இலை போடப்படவில்லை. இலை தரையிலே போடப்பட்டிருந்தது!

***இவ்வளவு நுணுக்கமாக சிலப்பதிகாரத்தின் நிகழ்ச்சிகளைக் காட்சிப்படுத்தியிருப்பதை எண்ணும் போது எப்படிப் பாராட்டுவது என்று வார்த்தைகளைத் தேடவேண்டியிருக்கிறது.***

கொலைக்களக் காட்சி மிகவும் தத்ரூப மாக அமைந்திருந்தது. கோவலன் கொல் லப்பட்டபோது பார்வையாளர்களைப் பரி தவிக்க வைத்துவிட்டது. கோவலனும், பொற்கொல்லனும், காவலர்கள் அத்தனை பேரும் அற்புதமாக நடித்திருந்தார்கள். யாரா வது ஒருவரின் செயற்பாடு கண் இமைக் கும் பொழுதாயினும் முந்திப் பிந்தி ஆகி விட்டிருந்தால் முழுக் காட்சியுமே நகைப் புக்கு இடமாகிவிடக்கூடிய, சவாலான விட யங்களை, மிகவும் வெற்றிகரமாக நிறை வேற்றியிருந்தார்கள். கோவலனை வெட்டிய காவலனை மறக்க முடியவில்லை. (கண்டால் யாரும் வரச்சொல்லுங்கள்!)

கோவலன், கண்ணகி பாத்திரங்களை ஏற்று நடித்தவர்கள் இருவரும் மிகச் சிறப்பாக நடித்திருந்தார்கள். அதிலும், இந்த நாடகத்தின் கோவலனைப் பார்த்த பின்னர், இதுவரையில் கற்பனையாக நம் உள்ளத்தில் நீண்டகாலமாக இருந்த கோவலனின் உருவமும், பூம்புகார் திரைப்படத்தில் கோவலனாக நாம் பார்த்த எஸ்.எஸ்.இராஜேந்திரன் அவர்களது தோற்ற மும் நம் மனதை விட்டு மறைந்து விட்டதுடன் இந்தக் கோவலனின் உருவமே அழுத்தமாகப் பதிந்துவிட்டது. சற்றுக் குனிந்தவாறான நடையும், பக்கவாட்டில் தலை சாய்ந்து நோக்கும் சுபாவமும் கொண்ட இந்த நடிகரின் தோற்றமும், அவரது இயல்பான அழுத்தமான நடிப்பும், அந்தக் கோவலனும் இப்படித்தான் இருந்திருப்பானோ என்ற உணர்வை நாடகத்தைப் பார்க்கும்போது தந்தது மட்டுமன்றி இப்போது நிலையாகவும் நம் நெஞ்சத்தில் பதிந்துவிட்டது.

கண்ணகி பாத்திரத்தை ஏற்றிருந்தவரை, கண்ணகியைத் தவிர்த்துத் தனியாக நினைத் துப் பார்க்க முடியவில்லை. மாதவியிடம்



**நாடகத்தின் காட்சிகள் நகரும்போது, ஒரு திரைப்படத்தைப் பார்ப்பதுபோல இருந்தன. சிலப்பதிகாரத்தில் வர்ணிக்கப்பட்டுள்ள கதைக் களங்கள் நமது மனக்கண்களில் தோன்றுவதைப்போலவே அப்படியே மேடையில் காட்சியமைப்புகள் அமைந்திருந்தன. இன்னும் சொல்லப்போனால் அதைவிடச் சிறப்பாக என்றுகூடச் சொல்லலாம்.**

இருந்து மீண்டு திரும்பிவரும் கோவலனை விரும்பி உபசரிக்கும் போதும், ஏதும் அறியாதவளாகக் கோவலன் பின்னால் மதுரைக்குச் செல்லும்போதும், கோவலன் கொலையுண்ட செய்தியை அறிந்து, வெம்பி வெடித்து, வெகுண்டெழுந்து ஆர்ப்பரித்த போதும், சின்னச் சின்ன உடல் மொழிகளைக்கூட அற்புதமாக அவர் வெளிப்படுத்தியிருந்தமை, இந்தச் சிறிய வயதில் இப்படியோர் அசாத்தியத் திறமையா என்று வியந்து பாராட்டவைத்தது. மதுரையை எரித்த காட்சியின்போது, கண்ணகியோடு கையிலே எரிதழல் கொண்டு நாமும் உடன் செல்வதுபோன்ற உணர்வில் காட்சியிலும் கானத்திலும் கலந்துவிட்டிருந்தோம்.

இந்த இடத்தில் ஒரு தகவலைச் தர வேண்டியது சொல்லவேண்டியது அவசியம் என்று நினைக்கின்றேன். அதாவது, கோவலன் பிரிந்து சென்ற பின்னர், “மங்கல நாண் மட்டுமே இருக்க மற்றெல்லா நகைகளையும் கண்ணகி துறந்தாள்” என்று நாடகத்தில் பாடலில் சொல்லப்படுவதை ”மங்கல அணி மட்டுமே” என்று மாற்றுவது நல்லது. “மங்கல அணியின், பிறிது அணி மகிழாள்..........” என்றுதான் சிலப்பதிகாரம் சொல்கிறது. மங்கல நாண் என்றால் அது தாலி என்று பொருள்படுகிறது. திருமணத்தில் கண்ணகிக்குத் தாலி கட்டப்பட்டதாகவோ, வேறெந்த ஒரு சமயத்திலாவது அவள் தாலி அணிந்திருந்ததாகவோ செய்திகள் இல்லை.

மாதவி சிலப்பதிகாரத்தில் பெரிதும் பேசப்படவேண்டிய தனித்துவம் மிக்கதொரு பாத்திரப் படைப்பு. இந்த நாடகத்தில் இடம் பெற்றிருந்த மாதவிக்கான பகுதிகளை, அந்தப் பாத்திரத்தை ஏற்றிருந்தவர் சிறப்பாகப் பூரணப்படுத்தியிருந்தார். அதிலும், கோவலனின் பாடலைக் கேட்டு, மாதவி சந்தேகப்படும் போது அவரது நடிப்பு மிகவும் சிறப்பாக இருந்தது. இந்த நாடகத்தில், மாதவியின் நாட்டியப் பகுதி போதுமானதா என்ற கேள்வி என் மனதில் எழுகிறது. இந்திர விழாவில் மாதவி ஆடிய நடனம் சிலப்பதிகாரத்தில் இடம்பெற்ற ஆடற்கலைச் சிறப்பின் உச்சம். எனவே, பார்வையாளர்கள், மண்டபத்தை விட்டு வெளியேறும்போது கண்ணகியின் சீற்றத்தை மட்டுமல்லாமல், மாதவியின் ஆட்டத்தையும் நெஞ்சில் சுமந்து செல்லக்கூடியதாக விறுவிறுப்பான ஒரு நடனத்தைக் குறைந்தது ஐந்து நிமிடங்களுக்காவது அதில் இடம் பெறவைத்திருக்கலாமே என்ற அங்கலாய்ப்பு நமக்கு வருகிறது.

பாண்டிய மன்னனும், பாண்டிமாதேவியும் அரண்மனையில் நடன நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும் காட்சியிலும், கண்ணகி வழக்குரைக்கும் போதும், பாண்டியன் உயிர் துறக்கும் போதும், பாண்டிய மன்னனின் நடிப்பு அருமையாக இருந்தது. பாண்டிமாதேவியின் கண் அசைவும், முகபாவமும், நடையழகும் மிகச் சிறப்பாக இருந்தன. இரண்டு பாத்திரங்களையும் ஏற்றிருந்தவர்கள் அந்தப் பாத்திரங்களின் கனதியை நன்கு உணர்ந்து, உள்வாங்கி, வெளிப்படுத்தியிருந்தார்கள்.

சிலப்பதிகாரத்தில் ***வில்லன் பாத்திரம்*** ஒன்றே ஒன்றுதான். ***அரண்மனைப் பொற் கொல்லனே*** அந்த ஒரேயொரு வில்லன். அந்தப் பாத்திரத்தில் நடித்தவர் மிகவும் பொருத்தமானவராகவே இருந்தார். தனக்குள்ள சிறப்பான திறமையை வெளிப்படுத்தியிருந்தார்.

நாடகத்தின் காட்சிகள் நகரும்போது, ஒரு திரைப்படத்தைப் பார்ப்பதுபோல இருந்தன. சிலப்பதிகாரத்தில் வர்ணிக்கப்பட்டுள்ள கதைக் களங்கள் நமது மனக்கண்களில் தோன்றுவதைப்போலவே அப்படியே மேடையில் காட்சியமைப்புகள் அமைந்திருந்தன. இன்னும் சொல்லப்போனால் அதைவிடச் சிறப்பாக என்றுகூடச் சொல்லலாம். ஏனென்

றால் மேடையில் பின்னணிக் காட்சிகள் அழகான வண்ணங்களில் மிகவும் நேர்த்தியாக இருந்தன. இசையமைப்பு இதைவிடச் சிறப் பாகச் செய்ய முடியாது என்னுமளவுக்கு அருமையாக இருந்தது. காட்சியமைப்பும், இசையமைப்பும் பெரும்பாலும் எல்லாக் காட்சிகளிலுமே, உயிரோட்டத்துடன், மிகவும் அருமையாக இருந்தமை பார்வையாளர்களின் உள்ளங்களைக் கவர்ந்தது.

இன்றைய சமூகத்திற்கு, சிலப்பதிகாரத்தை, அதன் உண்மைத் தன்மைகளை அப்படியே உணர்த்தும் வகையில், உயிரோட்டமுள்ள காட்சிகளாக வெளிக்கொணர்ந்தமை ஒரு சாதனையே!

சிலப்பதிகாரம் என்ற அந்தச் சிறப்பான காப்பியத்தில் உள்ள முக்கியமான எந்த காட்சியும் நழுவி விடக்கூடாது என்றும், மூலக் காப்பியத்தின் செய்திகளுக்கு எந்த வழுவும் ஏற்பட்டுவிடக் கூடாது என்றும் மிகவும் கவனமாகவும், ஆழ்ந்த ஈடுபாட்டுடனும், இயன்றவரையில், அக்கறையெடுத்து இரண்டே முக்கால் மணி நேரத்திற்குள் அடங்கியதாக இந்தப் படைப்பை ஆக்கியளித்திருக்கிறார்கள். அத்துடன், எண்பதுக்கு மேற்பட்ட கூத்து மெட்டுப் பாடல்களின் ஊடாக, இந்நாடகம் நகர்த்திச் செல்லப்பட்டிருகிறது என்பதும் ஒரு வியத்தகு செயற்பாடாகும்.

நாற்பதிற்கும் மேற்பட்ட நடிகர்களும், இருபதிற்கும் அதிகமான இசை, வாத்திய மற்றும் தொழில் நுட்பக்கலைஞர்களும் இந்த நாடகத்தில் அங்கம் வகித்திருக்கிறார்கள் என்பதை அறியும்போது வியப்பின் உச்சத்தில் முக்கில் விரல் வைத்து நிற்கின்றோம். இத்தனை பேரையும், அதுவும் இந்தநாட்டில்..... எப்படி? இதுவும் ஒரு சாதனையே.....உண் மையில் இதுதான் பெரிய சாதனை!

இந்த நாடகத்தில், பங்குபற்றி, தமது பாத்திரங்களை உணர்ந்து, அதற்கான பயிற்சி களிலும், ஒத்திகைகளிலும், ஆர்வத்துடன் கலந்து கொண்டு, இறுதியில் எல்லோரும் பெருமைப்படும்படியாக நடித்த நடிகர்கள், பண்பட்ட பின்னணிப் பாடகர்கள், திறமையான இசைக் கலைஞர்கள், மிகச் சிறந்த காட்சியமைப்பு விற்பன்னர்கள், கைதேர்ந்த ஒப்பனைக் கலைஞர்கள், அனுபவம் மிக்க ஒலி, ஒளிக் கலைஞர்கள் என்போருடன், அக்கறையோடு செயற்பட்ட ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகிய எல்லோரும் விருப்புடன் உவந்தளித்த பங்களிப்பின் பெறுபேறாகவே இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த காப்பியத்தை, மேடையிலே வெற்றிகரமாக உலவவிட்டுச் சாதனை நிகழ்த்த முடிந் திருக்கிறது என்பதை இதன் வெற்றி நமக்கு வெளிப்படுத்தி நிற்கிறது.

இதனை எழுதித் தயாரித்தவரான பாரதி பள்ளி நிறுவனரும், பிரபல நாடகச் செயற் பாட்டாளருமான ***மாவை நித்தியானந்தன்*** அவர் களையும், இதனை நெறியாள்கை செய்திருந்த ***பகீரதி பார்த்திபன்*** அவர்களையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இத்தகைய சிறப்பான படைப்புக்காக அவுஸ்திரேலியத் தமிழர்கள் மட்டுமல்லாமல் உலகத் தமிழர்கள் எல்லோரதும் நன்றி கலந்த பாராட்டுக்கு இவர்கள் எல்லோரும் உரித்துடையவர்கள்.

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்,
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்

ஆகிய மூன்று பெரும் அறக்கருத்துகளின் அடிப்படையில் எழுந்த, சிலப்பதிகாரத்தின் கதை, சோழ நாட்டிலே தொடங்குகிறது. பாண்டிய நாட்டிலே உச்சம் பெறுகிறது, சேர நாட்டிலே நிறைவு பெறுகிறது.

இவ்வாறு, முடியுடை மூவேந்தர்களின் ஆட்சிகளோடும், பூம்புகார், வஞ்சி, மதுரை ஆகிய மூன்று நகரங்களோடும், பேரியாறு, காவிரி ஆறு, வைகை ஆறு ஆகிய மூன்று பெரும் நதிகளோடும் தொடர்புபட்டதாக வும், இயல், இசை, நாடகம் என்னும் மூன்று தமிழையும் தன்னகத்தே கொண்ட தாகவும் விளங்குகின்ற ஒப்பற்ற செந்தமிழ் காப்பியமான சிலப்பதிகாரத்தை நாடகமாக்கி மேடையேற்றிய இந்தப் பாரிய முயற்சியில், அவுஸ்திரேலியாவின் மூன்று மாநிலங்களைச் சேர்ந்த கலைஞர்கள் பங்குபற்றியிருக்கிறார்கள் என்பதை அறியும்போது, இது தற்செயலா அல் லது தமிழ் அன்னையின் அருட்செயலா என்று வியந்து, நினைந்து, மகிழ்ந்து நிற்கிறோம்.

இந்த நாடகத்தைப் பார்த்தவர்கள் தங்கள் வாழ்வில் நல்லதொரு கலைப் படைப்பைப் பார்க்கக் கிடைத்த பாக்கியசாலிகள். பார்க்காத வர்கள், பார்க்கக்கூடிய இடத்தில் மீண்டும் இந்த நாடகம் மேடையேற்றப்படுமானால், தவறாமல் சென்று பார்த்து மகிழுங்கள் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

வாழ்க தமிழ், வாழ்க சிலம்பின் புகழ்!

○○○

# ஒன்றே குலம்

கலாபூஷணம் உடப்பூர் வை. இராமச்சந்திரன்

கல்விக்கு அழிவில்லை அதனால் கருத்துடன் கற்றிடுவோம்
கல்லார்க்கு நாமும் என்றும் கற்பதற்கு வழி சமைப்போம்
எல்லோரும் ஓர் குலம் எண்ணெண்ணிக் கழித்திடுவோம்
நல்லாரும் தீயாரும் நம் தோழர் என நினைத்திடுவோம்

ஆயிரம் நூல்கள் கற்றாலும் அகந்தை நீ கொள்ளாதே
முயற்சி என்ற ஒன்றை மட்டும் ஒரு நாளும் மறவாதே
தோல்விகள் தான் உன் வெற்றிக்கு முதற்படிகள் ஆகிவிடும்
துவண்டு விடாதே தோழனே துணிந்து நீ வென்றிடு

சாதிகள் இல்லையென்று தரணியில் வாழ்ந்திடுவோம்
சமத்துவம் நிலைத்திடவே ஓரணியில் திரண்டிடுவோம்
பல்லினம் வாழும் நாட்டை பார் போற்றச் செய்திடுவோம்
நலிவான மக்கள் நலம் ஓங்க நற் பணிகள் புரிந்திடுவோம்

ஏரினைப் பூட்டி வயல் உழுது நாம் உழைத்திடுவோம்
கொடும் போரினை விரட்டிக் குவலயத்தைக் காத்திடுவோம்
பாரினை வாட்டிடும் கொடிய நோய்களை ஒழித்திடுவோம்
ஊரினில் மக்கள் ஒற்றுமையாய் வாழ ஒன்று சேர்ந்திடுவோம்

முதலாளி தொழிலாளி வர்க்க பேதம் தனை ஒழிப்போம்
முழு மூச்சாய் உழைத்து வறுமையை நாம் விரட்டிடுவோம்
மனித குலம் தலைத்தோங்க மானிடர் நாம் முயன்றிடுவோம்
மக்கள் நலம்தனை மனதில் கொண்டு நாம் வாழ்ந்திடுவோம்

# பிறந்த நாள் !

– என். நஜ்முல் ஹுசைன்

உன் பிறந்த நாள்
உனக்கான நாளா ?

இல்லை அது
உன்
அன்னைக்கான நாள் !

தன்
வயிற்று மாளிகைக்குள்
உனக்கு
மெத்தைப் போட்டு

அவளோ
சிறையில் இருந்தாள் !

உன் இருட்டறையை
அவள்
வெளிச்சம் போட்டு
வைத்திருந்தாள்
அவள்
பிரசவித்ததால்தான்
நீ பிறந்தாய் !
அவள் பிரசவம்
முதலாமிடத்தில்
உன் பிறப்பு
இரண்டாம் இடத்தில்தான் !

இன்றைய உனது
மகிழ்ச்சிக்கு மூலதனம்
அவளது வேதனைதானே !

ஒவ்வொரு முறை நீ
பிறந்த நாள்
கொண்டாடும் போதும்

முதலில்
உன் அன்னையைக்
கொண்டாடு !




# செங்கையாழியானின் கங்கைக்கரை ஓரம் நாவல் உணர்த்தும் சீதனப் பிரச்சினை (ஒரு விமர்சன நோக்கு)



சி.ரஞ்சிதா

ஈழத்துத் தமிழ்ப் புனைகதைப் புலத்தில் நாவல் இலக்கியத்திற்குத் தனியான வரலாறு உண்டு. 1885ஆம் ஆண்டு ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம் முகிழ்ந்தாலும் ஈழத்து மக்களையும் மண்ணையும் களமாகக் கொண்டு நாவல் படைத்த **இளங்கீரனு**டனேயே கலையழகோடு நாவல் இலக்கியம் புதிய பாதையில் பயணிக்கத் தொடங்கியது. 1950ஆம் ஆண்டுகளிலிருந்து தமிழ்ச் சூழலுக்குள் வருகை தந்த மார்க்சிய சிந்தனைகளும் வர்க்கம், சாதி பற்றிய சமூக அழுக்குகள் குறித்தும் நாவல் இலக்கியங்கள் பேசத் தொடங்கின. கால மாற்றத்திற்கு ஏற்ப இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களையும் தன்னுள் ஈர்த்துக்கொண்டு ஈழத்துத் தமிழ் புனைகதைகள் வளர்ந்த காலப்பகுதியில் தான் ***செங்கையாழியான்*** ஈழத்துத் தமிழ்ப் புனைகதை உலகத்திற்குள் கால் பதித்தார்.

செங்கையாழியானின் நாவல்களில் ஈழத்து மக்களையும் அவர்கள் வாழ்ந்த சூழலையும் அவர்களது சமூகப் பிரச்சினைகளையும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகின்றது. 1978ஆம் ஆண்டு வீரகேசரி பிரசுரமாக வெளிவந்த ***கங்கைக்கரையோரம்*** நாவலும் இவரது சமூகக் கூர்மையையும் அதற்குள் மறைந்து மாற்றங் காணமுடியாத பிரச்சினைகளையும் யதார்த்தப்பூர்வமாகச் சொல்கின்றது.

பல்கலைக்கழக வாழ்க்கையையும் அங்கு கல்வி கற்க வரும் மாணவர்கள் வறுமைச் சுமையோடு கல்வியை முடித்துக்கொண்டு பொருளாதார ரீதியாக எவ்வித பாதுகாப்புமின்றி காதலையும் இதயத்தில் கனமாக்கிக் கொண்டு செல்வதையும் மிக அற்புதமாக யதார்த்தம் சிறிதும் சிதையாமல் இந்த நாவலில் ஆவணப்படுத்தியுள்ளார், செங்கையாழியான். யாழ்ப்பாணத்தையும் பேராதனைப் பல்கலைக்கழகத்தையும் கதைக் களமாகக் கொண்டு விரியும் இந்த நாவலின் கதாநாயகன் சிவராசா. கதாநாயகி கங்கா. இவர்களைத் தவிர சிவராசாவின் பெற்றோர், சகோதரிகள், பல்கலைக்கழக நண்பர்கள், மாமாவின் மகள் சரோஜா எனக் கதையின் நோக்கத்திற்கு ஏற்ப பாத்திரங்கள் விரிந்து செல்கின்றன.

பல்கலைக்கழகத்திற்குக் கல்வி கற்க வந்த சிவராசன் கங்கா என்னும் ஏழைப் பெண்ணைக் காதலிக்கின்றான். சொந்தக் காணியை அடகு வைத்து பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கப்படும் சிவராசனைப் பற்றிய அவதூறுகளை அறிந்த சிவராசனுடைய அக்கா அவனுக்குக் கடிதம் ஒன்றை எழுதி அவனுடைய படிப்பு முடிந்த பின்னர் நல்ல உத்தியோகம் ஒன்றிற்குச் சென்று தங்களுடைய குடும்பத்தை வறுமைச் சுமையிலிருந்து காப்பாற்றுவான் என்றும், அவனைப் பற்றியும் கங்காவைப் பற்றியும் பல்கலைக்கழகத்தில் பேசப்படும் விடயங்களைத் தான் நம்பவில்லை என்றும் கூறுகின்றாள். இந்தக் கடிதத்தைச் சிவராசனுக்குத் தெரியாமல் கங்கா வாசிக்கின்றாள். தன்னிடம் சீதனம் கொடுத்து சிவராசனை மணந்து கொள்ளும் அளவிற்கு பணம் இல்லாததால் கங்கா தன்னுடைய காதலைத் தியாகம் செய்கின்றாள். சிவராசனின் மாமா வசதி படைத்தவர் என்பதால் அவரது மகள் சரோஜா சிவராசனை விரும்புவதைத் தெரிந்து சிவராசனை விலைக்கு வாங்கி சரோஜாவைத்

திருமணம் செய்து வைக்கின்றார். சிவராசனின் குடும்பமும் மகிழ்ச்சியாக வாழ்கின்றது. கங்கா சிவராசனை விரும்புவதைத் தெரிந்த சரோஜா கங்காவிற்குக் கடிதம் எழுதி சிவராசனை தனக்குவிட்டுக் கொடுக்கவேண்டும் என்று கூறுவதைக் கங்கா - சரோஜா இருவருக் குள்ளும் பரிமாறப்பட்ட கடிதத்தின் மூலம் அறிந்து கவலை அடைகின்றான் சிவராசன். இவ்வாறாக இந்த நாவல் முடிவடைகின்றது.

பெற்றோர்களால் வறுமையின் கோரப் பிடியில் கற்பிக்கப்படும் ஒரு பிள்ளை அதற்கு நன்றியைச் செலுத்த வேண்டும். அவர்களின் வாழ்க்கைத் தரத்தை தன்னால் இயன்ற அளவு முன்னேற்ற வேண்டும். ஆனால் ஒருவருடைய தனிப்பட்ட விருப்பு - வெறுப்புகளுக்கு மதிப்பளிக்காமல் பணத்தையே குறிக்கோளாக மட்டும் எண்ணுவது எள்ளளவும் ஏற்றுக் கொள்ளமுடியாது. சிவராசனுக்கு அவனது அக்கா எழுதிய கடிதத்தில் “எங்கள் குடும்பம் உன்னால் உயர்வடைய இருப்பதை எண்ண பூரிப்பாக இருக்கிறது” உன்னை நம்பி இங்கே ஒரு குடும்பமே இருக்கிறது என்பதை நீ மறக்கக்கூடியவன் அல்ல. சரோசா கல்யாணம் செய்தால் உன்னைத்தான் செய்வேன் என்று பிடிவாதமாக நிற்கிறாளாம். எவ்வளவு சீதனம் வேண்டுமானாலும் தாறாராம். ஒண்டுக்கை ஒண்டு குமருகளுக்கெல்லாம் தானே சீதனம் கொடுத்து நல்ல இடத்தில் கலியாணம் செய்து வைக்கிறாராம் என்று எவ்வளவோ சொன்னார்.. என்று கூறியிருப்பது சுயநலத்தின் உச்சக்கட்டம் என்பதையும் திருமணத்திற்கும் ஒரு குடும்பம் செழிப்பாக வாழ்வதற்கும் சீதனம் எவ்வளவு முக்கியம் பெற்றிருந்தது என்பதையும் இங்கு அறியமுடிகின்றது.

இந்த நாவலில் சிவராசனை விரும்பும் ஏழைப் பெண் கங்காவும் வசதிபடைத்த சரோஜாவும் இருவேறு சமூகப் பின்புலத்தில் வைத்துக்காட்டப்படும் அதேவேளை, கங்கா வின் காதல் தோல்வியைத் தழுவவும் சரோஜாவின் காதல் வெற்றி வாகைச்சூடவும், பணமே அளவுகோளாக இருந்துள்ளது. இந்த இடத்தில் பெண்ணடிமைப் பற்றி எம்மால் சிந்திக்கமுடியாது. “என்னைக் கேட்காமலேயே ஆறு மாதங்களுக்கு முன் என் தந்தை எனக்கு விவாகம் முற்றாக்கிவிட்டார். என் சம்மதத்தை ஆர் கேட்டார்” எனக் கங்கா சிவராசனிடம் கூறி அழுவது வறுமையே தவிர பெண்ணடிமை என்று கூறமுடியாது. ஏனெனில் சரோஜா ஏழை சிவராசனை விரும்புவதை அவளது தந்தை ஏற்றுக்கொள்ளும்போது கங்கா தன் காதலை தன் தந்தையிடம் சொல்ல திராணி யற்றவளாகப் போனது ஏன்?, இதற்குக் காரணம் பணம். ஒருவகையில் சீதனம் என்னும் பதத்திற்குள் பெண்ணுரிமையும் பெண்ணடிமையும் மறைந்திருப்பதைக் கங்கா - சரோஜா ஆகிய இரு பெண்களினூடாகவும் அடையாளப்படுத்தியிருக்கின்றார், செங்கை யாழியான் என்றும் எண்ணத் தோன்றுகின்றது.

இலங்கையில் குறிப்பாக வட பகுதியில் வசிக்கின்ற தமிழ் மக்களிடையே சீதனம், சாதி அவர்களுக்குரிய சட்டமாக இருப்பதை அனைவரும் அறிவர். வட பகுதியைக் களமாகக் கொண்டு வெளிவந்த பல்வேறு புனைகதைப் படைப்புகளில் இந்தச் சாதியம், சீதனம் பற்றிய பிரச்சினைகளை மிக இலகுவாக இனங்காணமுடிகின்றது. கங்கைக்கரையோரம் என்னும் நாவலில் சாதியம் பற்றிய எந்தவொரு விடயங்களும் பதிவாகவில்லை. ஆனால் சீதனம் தொடர்பான கருத்துக்களும் காதலுக்கு சீதனமும் முக்கியம் என்பதையும் நாவலாசிரியர் சிவராசன் - கங்கா ஆகிய இருவரது காதலையும் முன்வைத்துச் சுட்டியிருப்பதன் மூலம் அறியலாம்.

சீதனம் என்பது மணமகன் - மண மகளை வாழ வைப்பதற்கு அன்றி மணமக னின் ஒட்டுமொத்த குடும்பத்தையும் நல்ல நிலையில் வைப்பதற்காக வழங்கப்படுவதை இந்த நாவலினூடாக இனங்கண்டுகொள்ள முடிகின்றது. வட பகுதி தமிழர்கள் பெண் களைப் பெற்றுவிட்டால் வயிற்றில் நெருப் பைக் கட்டிக்கொண்டு தன்னுடைய பெண் ணிற்காகச் சொத்து சேர்க்க வேண்டும் என்பதை இந்த நாவலை வாசிப்பவர் புரிந்துகொள்ளலாம். மேலும் சீதனம் என்பது பெண் தரப்பிலிருந்து ஆணுக்கு வழங்கப்பட வேண்டிய கட்டாயமான இலஞ்சம் என் பதையும் இது பெண்ணடிமையின் ஒரு பாகம் என்பதையும் இன்றைய பெண்ணியச் சிந்தனைவாதிகள் விமர்சிப்பது நிதர்சனம். சீதனம் கொடுக்கும் தகுதி ஒரு பெண்ணிற்கு இருந்தால் மட்டுமே அவள் காதலிப்பதற்கும் திருமணம் செய்வதற்கும் தகுதியானவள் என்பதை கங்கா என்னும் பாத்திரத்தின் மூலம் முன்வைக்கின்றார் செங்கையாழியான்.

இதனை "உங்கள் குடும்பத்தை நன்னிலைப் படுத்தக்கூடியளவிற்கு விலை தந்து வாங்க எங்களிடம் சக்தியில்லை.. சிவா, நாங்கள் ஏழைகள்.. என் தந்தை தமிழ் ஆசிரியர்.. நான் உழைத்துத்தான் எனக்குச் சீதனம் தேடிக்கொள்ளவேண்டும்.. வெட்கம் கெட்ட சமூகம்" எனக் கங்கா சிவராசனை நோக்கிக் குறிப்பிடுவதன் மூலம் சீதனம் திருமணத்தைத் தீர்மானிக்கின்றமையையும் ஆண்களை விலை தந்து வாங்க முடியாத நிலையையும் வெளிப்படுத்துகின்றது. மேலும் கங்கா இறுதியாக இந்தச் சமூகத்தை வெட்கம் கெட்ட சமூகம் என்று கூறுவதன் மூலம் சீதன முறையை அவள் வெறுப்பதையும் உணரக்கூடியதாகவுள்ளது.

இந்த நாவலின் எந்தவொரு பகுதியிலும் புரட்சிகரமானப் பாத்திரங்கள் படைக்கப் படவில்லை. குறிப்பாக சீதன முறைமையால் ஏழைப் பெண்கள் அனுபவிக்கும் இன்னல்களைக் கங்கா என்னும் பெண் மூலமாகவும் மனதில் சிறிதும் விருப்பமின்றி தன் குடும்பத்திற்காகத் தன் ஆசைகளைத் தியாகம் செய்யும் சிவராசன் என்னும் ஆணையும் இயல்பாகவே நாவலாசிரியர் சித்திரித்துள்ளார். சிவராசனின் சகோதரி எழுதிய கடிதத்தின் மூலம் தன் வாழ்வு, சுகபோகம், சுபீட்சமான எதிர்காலம் ஆகியவற்றிற்கு இன்னுமொருவரின் கல்வி, தொழில், திருமணம் தேவைப்படுவதை அறியமுடிவதோடு நாவலில் கங்கா - சிவராசன் தவிர்ந்த அவர்களைச் சார்ந்த அனைவரும் சுயநலமான பாத்திரங்களாகவே படைக்கப்பட்டுள்ளனர். செங்கையாழியான் செதுக்கியுள்ள இந்தப் பாத்திரங்கள் வட பகுதி தமிழர்களில் மட்டுமல்ல கீழைத்தேய கலாசாரத்தைப் பின்பற்றுகின்ற மக்களின் வாழ்வில் ஊறிப்போன ஒன்றே. பெற்றோரும் சுற்றத்தாரும் சுட்டி நிற்கும் வாழ்க்கைத் துணையை வாய்மூடி ஏற்றுக்கொள்ளும் பொருத்தமற்ற சிந்தனைகள் இன்றும் எம் மத்தியில் உள்ளன.

கங்கைகரையோரம் என்னும் இந்த நாவலைச் செங்கையாழியான் பல்கலைக்கழக அனுபவங்களை முதன்மைப்படுத்திச் சொல்வதற்காக படைத்திருந்தாலும் ஈழத்துத் தமிழர்களிடையே இன்றும் மாற்றம் காணாமல் இருக்கின்ற சீதனத்தையும் கதையின் போக்கிற்கு ஏற்ப படைத்திருக்கின்றார். சீதனப் பிரச்சினையைப் பற்றி பேசுவதை பிரதான நோக்கமாக இந்த நாவல் கொண்டிருக்கவில்லை என்பதை நாவலை வாசிக்கும்போது புரிந்து கொள்ள முடிகின்றது. நிறைவேறாமல் போன காதலுக்குச் சீதனமும் ஒரு காரணம் என்பதையும் கங்கா என்னும் பெண்ணின் தியாகத்தைச் சிறப்பிக்கவேண்டும் என்பதையும் அடையாளப்படுத்துவதில் இந்நாவலாசிரியர் தனிக்கவனம் செலுத்தியிருப்பதாகவும் எண்ணத்தோன்றுகின்றது. செங்கையாழியான் தன்னுடைய நூலான **"நானும் எனது நாவல்களும்"** என்னும் நூலில் "ஆக்க இலக்கியம் இந்த மண்சார்ந்த பிரச்சினைகளையும் பேசுவதாக அமையவேண்டும். அத்துடன் அப்பிரச்சினைகளின் விடிவிற்கு ஒரு மார்க்கம் காட்டுவதாகவும் அமைதல் வேண்டும்" என்று கூறியுள்ளார். ஆனால் கங்கைகரையோரம் என்னும் நாவலில் சிவராசன் - கங்கா இருவரது காதலும் நிறைவேறாமல் போனதற்குச் சீதனம் ஒரு காரணம் என்பதை மட்டும் குறிப்பிட்ட நாவலாசிரியர் அந்தச் சீதன முறையை எதிர்த்துப் போராடி காதலில் வெற்றிபெறும் பாத்திரங்களாக அவர்களைப் படைக்காமல் போனது ஏன் என்னும் வினா எம்முள் எழுகின்றது. செங்கையாழியான் குறிப்பிடுகின்ற மண் சார்ந்த பிரச்சினையும் அதற்கான விடிவு கிடைக்கவேண்டும் என்று கூறியமையும் கங்கைக்கரையோரம் நாவலில் தோற்றுவிட்டது என்றே கூறவேண்டும். ஆனாலும் இந்த நாவல் யதார்த்தப்பூர்வமான வாழ்வியலை வெளிப்படுத்தி வட பகுதியையும் மத்திய மலைநாட்டுப் பகுதியையும் இருவேறு சூழலில் பதிவுசெய்து பல்கலைக் கழகம் என்றால் இதுதான் என்பதை இன்றைய பல்கலைக்கழகச் சமூகத்திற்கு எடுத்துக் காட்டியதில் வெற்றிகண்டுள்ளது என்றே கூறவேண்டும். பல்கலைக்கழகம் என்றால் இதுதான் என்பதை உலகிற்குச் சொல்லிவிடும் முயற்சியால்தான் இந்தப் புதினத்தைத் தான் படைத்திருப்பதாகச் செங்கையாழியான் இந்த நாவலின் முன்னுரையில் கூறியிருப்பதையும் இங்கு மனங்கொள்ளவேண்டும்.

❍❍❍

சிறுகதை



# எனைச் சுமந்த தந்தை



கு.யர்சினி
(தமிழ்க் கற்கைகள் துறை, தமிழ் சிறப்புக் கற்கை
மூன்றாம் வருடம் - கிழக்குப் பல்கலைக்கழகம்)

தூங்கிக்கொண்டிருக்கிறேன் அப்போது 'கணீர் கணீர்..' என்ற சத்தம். என்ன சத்தம் என்று எழும்பி குசினிக்குள் சென்று பார்த்தேன். அம்மா சட்டி, பானை, கோப்பை, என எடுத்து வைத்துக்கொண்டிருந்தார்.

"என்னம்மா செய்கிறீர்கள் இந்த காலை வேளையில" என்று கேட்டபோது, "பிள்ள உனக்கு தெரியாதா இன்றைக்கு நம்மட பொருட்களை எல்லாத்தையும் எடுத்துப் போகப்போறம்... நீ போய் உன்ட உடுப்பு எல்லாத்தையும் எடுத்து வை". (அப்போது எனக்கு ஏழு வயதுதான்)

"ஏன்? அம்மா எடுத்துவைக்கணும்."

"மகள் உங்களோட எனக்கு பெரிய கரைச்சல் மகள்."

"ஐயோ! சரிம்மா எடுத்துவைக்கின்ற விடுங்க. ஆமா.. அப்பா எங்கம்மா?"

"அப்பாவா அவர் நம்மட ஆடு கோழியெல்லாம் கட்டிக்கிடக்காம்... அத அவிட்டுவிட போகிறார். மகள் நீ போய் நான் சொன்னதை செய்."

"அம்மா நீங்கள் பேசுற ஒன்றும் எனக்கு விளங்கல சரி, நான் போய் எடுத்து வைக்கிறேன்."

"மகள்" என்று அப்பா அழைத்துக் கொண்டு வந்தார்.

"என்னப்பா கூப்பிடுறீங்க என்ன விசயம்."

"மகள் உனக்கு திரிபோச பிடிக்கும் தானே."

"ஆமாம் அப்பா பிடிக்கும் அதை எடுத்து வைக்கின்றேன். அப்பா இங்க என்ன நடக்குது நீங்களாவது சொல்லுங்களேன் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை."


"பிள்ள நாம இந்த இடத்தில் இருக்கிறது ஆபத்தா அமையுமாம்.. வேறு இடத்துக்கு போக வேண்டுமாம்.. அதான் நாம எல்லாரும் போகப்போறோம்.. மகள் இப்ப யுத்தகாலம் என்டதால, என்ன நடக்கும்.. எது நடக்கும்.. என்று தெரியாது மகள்.. அதான் நாமளும் மக்களோடு மக்களா போயிடனும் அதான் இந்த ஆயத்தம்."

"ஏன் அப்பா போகணும் நாம..? நான் வரல... நான் வறேன்டா என்ட மாடு கோழி எல்லாத்தையும் எடுத்துக்கொண்டுதான் நான் வருவேன்.. இல்லாட்டி நான் வரமாட்டேன் அப்பா."

"மகள், அப்பா சொல்றத கேட்கணும்... நானும் எல்லாத்தையும் விட்டுத்து போகணும்.. என்டு நினைக்கல மகள். இருந்தாலும் என்ன செய்ற நம்ம, நிலைமை அப்படி.." என பெரு மூச்சுவிட்டார்.

"இவள் என்ட பேச்ச கேட்கிறதே இல்ல.. போய் நான் சொன்னத செய்யலையா இப்ப" என்று அம்மா கோபமாக சொன்னார். அப்போது மாமியார் வந்து, அம்மாவுடன் கதைத்தபோது "அப்போ... அம்மா சொல்ற, நாம இரவோடு இரவா போகணும் பகல்ல போனா பிரச்சனையாம்.." என்று மாமியார் கூற "நீ சொல்றது சரிதான்.." என்று சொல்லுறா.

இரவு ஆறு மணிக்கு போல் பயணத்தை ஆரம்பித்தனர். என்டப்பா என்னை அவரின் தோளின்மேல் தூக்கி வைத்துக்கொண்டு "பத்திரமாக அப்பாட தலையை பிடித்துக் கொள் மகள்" என்றார். நானும் அப்பாவின் தலையை நன்றாகப் பிடித்துக்கொண்டு அப்பாவோட நல்லா போகப்போகிறேன்



**“இன்னும் எத்தனை நாள் நான் இப்படி இருப்பது?” என்று அப்பாவிடம் கேட்டேன். “மகள் நான் உயிருடன் இருக்கும்வரை உன்னை என்றுமே சுமப்பேன் மகள் பேசாமல் இரு.” என்றார்.**

என்று ஆனந்தம் அடைந்தேன். ஆனால் பயணம் எவ்வளவு தூரம் என்று அறிய மறந்துவிட்டேன்.

இரண்டு மூன்று நாட்களாக பயணம் தொடர்ந்து. “அப்பா நீங்கள் என்னை இறக்கி விடுங்கள் நான் நடந்து வாறேன் உங்களுக்கு சிரமம்தானே அப்பா.”

“மகள் அதெல்லாம் சிரமம் இல்லை. நீ பேசாமல் இரு... இந்த திரிபோசவை சாப்பிட்டு பிடி” என்றார் அப்பா.

“சீனி இல்லாம எப்படி சாப்பிட்றப்பா?”

“அது இனிப்பாத்தான் இருக்கும் மகள்” என கூறிக்கொண்டு தூக்கமின்றி நிம்மதியின்றி களைத்துபோய் வாடிய முகத்துடன் சென்றார்.

இரவு பகலென இருபது நாட்கள் கடந் தன. அப்பாவும் என்னை தோளிலே சுமந்து கொண்டு வந்தார். அப்பா என்னை கீழே இறக்கி விடவில்லை

“இன்னும் எத்தனை நாள் நான் இப்படி இருப்பது?” என்று அப்பாவிடம் கேட்டேன். “மகள் நான் உயிருடன் இருக்கும்வரை உன்னை என்றுமே சுமப்பேன் மகள் பேசாமல் இரு.” என்றார்.

பக்கத்தில் வந்த மாமி, “என்ன குமார் உன்ட பிள்ளையை இறக்க மாட்டாய் போல.”

“இல்லை அவள் சின்னப்பிள்ளை நம்மளப் போல நடக்கமாட்டாள் என்ன, அதான்.”

“கொஞ்சம் அவளை இறக்கி விடுங்க ளம்பா அவள் நடக்கட்டுமே” அம்மாவும் அப்பாக்கிட்ட சொல்லுறா. அதற்கு அப்பா “இன்னும் கொஞ்ச தூரம்தான் பரவாயில்லை” என்று கூறுகினார்.

பயணம் தொடர்ந்து செல்லுகின்றது “அப்பா நீங்கள் சாப்பிட்டீங்களா எனக்கு திரிபோச மட்டும் சாப்பிட ஏலாம இருக்குப்பா. எனக்கு பசிக்கிறது என்ன செய்ய நான்?” எனக் கேட்டேன் எனது அப்பா ஒன்றும் கூற வில்லை. “இன்னும் கொஞ்ச நேரம்தான்” என்று கூறினார். எனக்கு தெரியாது அன்று எனது அப்பா உணவு உண்ணவில்லை என்றும் அவர் உணவு உண்டு ஒரு கிழமையாகிவிட்டது என்று எனக்கு தெரியவில்லை.

அவர் பக்கத்தில் வந்த மாமாவிடம் கேட்டு, ஒரு பிஸ்கட்டை வாங்கித்தந்தார். நான் உண்டுகொண்டு வந்தேன். அடர்ந்த அந்த காட்டுவழி பயணம் பனி பொழிந்த இரவும் பதறிப்போன நாட்களும் மிருகங்களின் சத்தம் வேறு பயத்தினை ஏற்படுத்தியது. நான் அப்பாவிடம் “எனக்கு பயமாக உள்ளது” என்று அப்பாவிடம் கூறினேன்.

அப்பா “ஏன்” என்று கேட்க நான் அப்பாவிடம் “ஏதோ கத்துவது போல் சத்தம் கேக்கிறதுப்பா” என்றேன். அப்பா “அது ஒன்றும் இல்லை மகள், அப்பத்தானே மகளை தூக்கிட்டு வாறன் யோசிக்காதே” என்று என்னை தோளில் சுமந்துகொண்டு வந்தார். நானும் அட்டையை போன்று அப்பாவின் தோளில் ஒட்டிக்கொண்டு வந்தேன்.

கண்விழித்து பார்த்தால் ஒரு கடற்கரை யோரம்.. பக்கத்தில் வரிசையாக வீடுகள் இருந்தன. வேலி இல்லை. கிணறு இல்லை. ஒரு பொதுவான மலசலக்கூடம் இருந்தது.

“நாம் கொஞ்ச நாள் இங்க தான் இருக்க ணும்” என்று கதைத்துக் கொண்டிருந்த சத்தம் கேட்டது. அப்போது அப்பாவிடம் “அப்பா என்னை கீழே இறக்கிவிடுங்க நான் என்ன என்று பார்க்கிறேன்” என்றேன்.

அப்பா சொன்னார் “சிறிது காலம் நாம் இங்குதான் வாழவேண்டும்” என்று கூறினார். “இந்த நாட்டுல யுத்த முடியும் வரைக்கும் இதுதான் நம்ம வீடு.”

“அப்பா, அப்போ இந்த ராணி மாடு அப்பு நாயெல்லாம் எங்கப்பா. அது நம்மட ஊர்ல நம்ம வீட்டு பாதுகாத்துட்டு இருக்கும்.”

“மகள் அங்க போய் பார்ப்போம்” என்று அப்பா உணர்வுகளை அடக்கி கூறினார்.

“புதிய வீடு பிடிக்கவில்லை” என்று அழு தேன். ஆனால் அழுதும் எந்த பிரயோசன மும் இல்லை. கண்களை மூடி கண்களை திறப்பதற்குள் எல்லாம் முடிந்துவிட்டது. அந்த நாளை இன்று நினைத்தால்கூட மனம் வேதனையடைகின்றது.

“காலங்கள் மாறினாலும்
சில காயங்கள் மாறுவதில்லை.”

❍❍❍

# பீரோவின் புலம்பல்



2025 பிறப்பதற்கு 2 நாட்கள்
முன்பாகவே சொர்க்கத்திலிருந்து
அம்மா புறப்பட்டு வந்துவிட்டாள்.

”வீடுமுழுக்க பீடை பிடிச்சுப் போச்சு
எறி எறி தேவையில்லாதவை
எல்லாத்தையும் எறி எறி”
அம்மா மாகாளியானாள்.
வெளியே பனிப்புயல்
டென்மாக் மண் நடுங்கியது.

பழைய பாத்திரங்கள், பழைய
துணிகள்,
காலாவதியான தானியங்கள்
மூட்டைகளில் அடைக்கப்பட்டன.
அம்மா பழைய பேப்பர்க்கட்டுக்
குப்பையைப் பிரித்தாள்.

பழுப்பு நிறத்தில் சுருங்கிக்கிடந்த
காகிதக் கட்டை எடுத்தவள்
கண்களில் ஒற்றினாள்

என்னம்மா என்றேன்?
”என் சீதனக் காணியின் உறுதி எண்டாள்
”நம் பாவனையில் அது இல்லையே விற்றிடலாம் என்றேன்.
“பரம்பரைச் சொத்து விற்றால் பாவம்” அம்மா கத்தினாள்.
கறையான் வீடுகட்டி பாம்பு குடிவந்துவிட்டதே என்றேன்.
இல்லை இல்லை என்ன ஆனாலும் முடியாது என்றாள்.
“கனடா அண்ணண் லண்டன் அக்கா பிரான்சு ஆச்சி
எல்லோரும் என்னைத் திட்டித் தீர்ப்பார்கள்.
பரம்பதைச் சொத்து விற்றால் பாவம்”

“உங்கள் பூமித்தாயை அனாதையாக விடுவதும்
பாம்பு குடிவந்து மனிதரைக் கொல்வதும்
பாவம் இல்லையா? என்று நான் கேட்டேன்.

“இல்லை இல்லை நீ வாயை மூடு
“பரம்பரைச் சொத்து விற்றால் பாவம்”
என்றவள் சொல்லி அதைப் பீரோவில் வைத்தாள்.
நான் ஒன்றும் உன் குப்பைத் தொட்டியல்ல
மௌனமாக முணங்கியது பீரோ.


**– கலாநிதி ஜீவகுமாரன்**

## கண்ணீர் அஞ்சலி

### குழந்தை ம. சண்முகலிங்கம்



ஈழத்துத் தமிழ் நவீன அரங்க வரலாற்றில் குழந்தை ம.சண்முகலிங்கம் (1931.11.15) அவர்கள் நாடகத்துறையினுள் 1950கள் தொடங்கி பாரிய பங்களிப்பை வழங்கிவந்தவர். “மண்சுமந்த மேனியர்”, “எந்தையும் தாயும்”, “அன்னையிட்ட தீ”, “ஆர்கொலோ சதுரர்”, “கூடிவிளையாடு பாப்பா”, “பஞ்சவர்ணநரியார்” முதலானவை இவரது முக்கியமான நாடகங்களாகும். இவரது நாடகப்பணியைப் பாராட்டி கிழக்கு பல்கலைக்கழகம் இவருக்கு கலாநிதி பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது. அன்னார் வயது மூப்பின் காரணமாக உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் தனது 93ஆவது வயதில் கடந்த வெள்ளிக்கிழமை 17-01-2025 அன்று காலமானார். அமரர் சண்முகலிங்கம் அவர்களுக்கு ஞானம் தனது கண்ணீர் அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கின்றது. **– ஞானம்**



# இஸ்லாமிய இலக்கிய விழிப்புணர்வுச் சிந்தனை எழுத்தாளர் அ.ஸ.அப்துஸ்ஸமது



இனியவன்
**இசாறுதீன்**
(கனடா)

கிழக்குமுஸ்லீம்களின் வாழ்வியலை நுட்பமாகப் பதிவுசெய்த இலக்கிய விழிப் புணர்வுச் சிந்தனை ஆளுமைகளில் அ.ஸ. அப்துஸ்ஸமது அவர்கள் முக்கியமானவர். தென்கிழக்கின் தேன்மதுரத் தமிழ் தந்த "ஆனாஸானா" அவர்கள் ஆழ்ந்த புலமையும் அகன்ற சிந்தனையும் கொண்டவர். கிழக்கு முஸ்லீம்கிராம வாழ்க்கையின் அழகியலை கலைத்துவமாய்க் காட்சிப்படுத்துபவர். இலக்கிய ஆர்வலர்களின் இரசனைத் தளத்தை விரிவுபடுத்திய மூத்த நாவலாசிரியர். பொழுதுபோக்குக்காக இலக்கியம் படைக்காமல் பொதுவெளியில் எதிர்கொண்ட அனுபவத்தை அறநெறியோடு இஸ்லாமிய இலக்கியம் படைத்தவர். தமிழிலக்கியச் சூழலில் பிறந்து இஸ்லாமிய பண்பாட்டுப் பார்வையில் வளர்ந்து ஈழத்திலும் தமிழகத்திலும் மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் புகழ் சேர்த்த தன் எழுத்தில் வாழ்பவர்.

எல்லோராலும் "ஆனாஸானா" என அன்பாக அழைக்கப்படும் அ.ஸ.அப்துஸ்ஸமது அவர்கள் ஒரு மனிதநேய மாண்பாளர். பழகுவதற்கு இனிய பண்பாளர். எவரிடமும் சுடுசொல் பேசாத மனிதர். எந்த மாணவன் தன்னைக் கடந்து சென்றாலும் அவரது "மினி சைக்கிளை" விட்டிறங்கி நின்று பேசிவிட்டே செல்வார். எவரிடமும் விசனப்படாத அவர் எப்பொழுதும் திறந்த மனம் கொண்டவர் என்பதனாலோ என்னவோ மனிதர்களை அதிகம் சம்பாதித்திருக்கிறார்.

"ஆனாஸானா" அவர்கள் ஆசியா உம்மா தாய்க்கும் முஹம்மது ஆபூபக்கர் அப்துஸ்ஸலாம் ஆலிம் புலவர் பெருமாக்கள் குடும்பத்தில் *1929*இல் பிறந்தார். தென்கிழக்கு மாகாணத்தில் அழகு கொழித்திருக்கும் அக்கரைப்பற்று அன்னை பெற்ற "ஆனாஸானா" ஆண்டு *2001*இல் மறைந்தார். அவர் மறைந்தாரா? இல்லை!

அவர் நேற்றைய எழுத்தில் இன்று உயிரோடிருக்கிறார். இன்னும் உலகத்தில் வாழ்கிறார் என்பதை உணர்த்திக்கொண்டிருக்கிறார். ஏதோ ஓர் அமைதிக்குள் தனித்து விடப்பட்டதாய் அவர் தகைமையோடு தானிருக்கிறார். அவரது உயர்வுக்குக் காரணம் உழைப்பு. அந்த நேர்மையான உயர்வு நிலைபெறக் காரணம் அவர் எளிமை.

ஆறடி உயரத்தை எட்டாதவர்தான் "ஆனாஸானா". ஆனால் அவர் உயர்ந்த மனிதர். அவரது மனசோ பெரும்சிகரம். கோடி கோடியாய்ப் பெருந்தொகை பெற்றுக்கொள்ள ஆசைப்படும் முதலாளித்துவத்திற்கு அவர் மானுட வாழ்வின் மனித நேயத்தையும் மக்கள் சமத்துவத்தையும் எழுதிக் காட்டினார். சக மனிதர்களோடு சகவாசம் கொண்ட "ஆனாஸானா"விடம் கற்றுக்கொண்டவர்களைவிட அவரது இதயத்தைப் பெற்றுக்கொண்டவர்களே மிக அதிகம்.

"தனிமனித உணர்வுகள் மதிக்கப்படத் தக்கவை. அத்தகைய சுயாதீனங்களும் உணர்வுகளும் சமூகத்தினால் அழிக்கப்படக் கூடாது. சமுதாயம் என்பது சிலவேளை அடிமைத்தனமான ஒரு நெறியில் மக்களை வழி நடாத்திச் செல்வதுமுண்டு. அவர்களுடைய முற்போக்கையும் செயல்முறைகளையும் அழித்து எதேச்சதிகாரம் தலைதூக்கும் சந்தர்ப்பங்களில்தான் இந்த தனிமனித உந்தல்களும் அபிலாஷைகளும் மதிக்கப்பட வேண்டும் (எனக்கு வயது பதின் மூன்று)" என்று குறிப்பிட்டுள்ளார். முஸ்லீம்கள் மத்தியில் எத்தனையோ பிரச்சினைகளும் குறைபாடுகளும் உள்ளன" என்று கிழக்கு முஸ்லீம்கள் வாழ்வின் பலபரிமாணங்களைப் படம்பிடித்துக் காட்டும் பரஸ்பர இதயம் "ஆனாஸானா"வை கிழக்கு முஸ்லீம்களின் பிரதான படைப்பாளியாக முன்னிறுத்துகிறது.

"லெட்சக் கணக்கில் சீதனமும் ஆதனமும் பெற்றுக்கொண்டு மாப்பிள்ளைமார் பத்தாயிரம் "மஹர்" கொடுப்பதில் அர்த்தமென்ன? "முறீது" கொடுக்கும் மௌலானாமார் பெண்களுக்கு சோறு கரைத்துக் கொடுக்கும் சமய நோக்கமென்ன? மக்காவுக்குப்போன ஹாஜிமார் கறுப்புமார்க்கட் தொழில் செய்வதை விடாமல் இருப்பதன் பொருளென்ன? "மிம்பரில்" ஏறிக் "குத்பா" ஓதும் "கதீப்"மார் வட்டிக்குக் கொடுப்பது முறையாகுமா? வங்கியின் வட்டிப்பணம் "ஹலாலா ஹறாமா?" அதன் ஊதியமும் வருமானமும் சிறந்ததா?" என்று கேட்கிறார். தன் சமூகப் பண்பாட்டின் சீரழிவைச் சீர்திருத்துவதற்காக தன் சமயத்தலைவர்களிடமும் சமூகத்தலைவர்களிடமும் இப்படிக் கேட்கிறார்.

"இந்த நாட்டில் இரண்டுமொழி பேசுவோர் உள்ளனர். அந்த இருசாராரும் மனங்கொண்டால் இரண்டு மொழிகளையும் கற்றுக்கொள்வது சிரமமான காரியமல்ல. ஒருவரை ஒருவர் மதித்து நடந்தால் நம் மரகதத்தீவு சொர்க்கபூமியாக மாறிவிடும். பௌத்த சாத்வீகமும் இஸ்லாமிய சகோதரத்துவமும் இந்து சகிப்புத் தன்மையும் கிறிஸ்தவ அன்பும் இங்கே பரிணமித்துவிடும்" என்று அவரது "தர்மங்களாகும் தவறுகள்" நாவலில் (பக்கம்: 25) இனநல்லிணக்கத்தை எடுத்தியம்புகிறார்.

பல்லின சமயங்களின் ஒருமைப்பாட்டையும் பண்பாடு - கலாசாரம் என்பவற்றின் உணர்வுகளையும் பரஸ்பரத்தோடு வலியுறுத்தும் இலக்கியமே மனித ஒருமைப்பாட்டிற்குற்கு உகந்தது" என்ற நோக்கோடு மொழி - சமயம் - சமூகம் - பண்பாடு - மனித விழுமியம் - அறவியல் - அறிவியல் என்ற பொருண்மைகளில் எழுதிய "ஆனாஸானா"வின் இஸ்லாமிய ஆக்க இலக்கியங்களுக்கெதிராக "விஷயமறியாமல் அ.ஸ. எழுதுகிறார்" என்று எதிர்மறையாய் முரண்பட்டெழுதிய மூத்த கவிஞர் சண்முகசிவலிங்கத்தின் எதிர்க்கருத்திற்குக் கோபப்படாமல் "உங்கள் சொந்த எண்ணத்தால் என்னை மதிப்பீடு செய்ததற்கு நன்றி" என்று இஸ்லாமிய சமத்துவக் கொள்கைக் கோட்பாட்டை "சசி" அவர்களுக்கு "பூவிழி"யில் "ஆனாஸானா" எழுதிய அறிவுபூர்வமான விளக்க உரை அவரது உயர்ந்த நாகரீகத்திற்கு ஒரு நற்சான்று.

தமிழ்க் கலைப்பட்டதாரி ஆசிரியர் "ஆனாஸானா" அறிவியலை அழகுறச் சொல்பவர். அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சிபெற்று அதே கலாசாலையில் ஆண்டு 1979 முதல் 1989வரை தமிழ் விரிவுரையாளராய் பதவி வகித்தார். தன்பள்ளி மாணவர்களை வைத்தியராகவும் பொறியியலாளராகவும் அரச உத்தியோகத்தர்களாகவும் சமூகத் தலை வராகவும் உருவாக்கிவிட்டவர் அவர். அக்காலகட்டத்தில் விடுமுறை தினங்களில் இலங்கைவங்கி நிறுவனத்தின் பரீட்சைக்குத் தோற்றவேண்டிய வங்கி உத்தியோகத்தர்களுக்கு தமிழ் இலக்கிய இலக்கணப்பாடம் நடத்திய "ஆனாஸானா" தன்னிடம் கற்றோர் யாவரையும் சித்திபெறச் செய்தார் பின் பலரை சிரேஷ்ட முகாமையாளர்களாகவும் ஆக்கிவிட்டுச் சென்றார்.

"கல்வியின் சிறப்புக் குறித்து நாம் சிந்திக்க வேண்டிய நூற்றாண்டு இது. காற்று இல்லாமல் எப்படி உயிர்வாழ முடியாதோ அப்படி கல்வியில்லாமல் உயிர்வாழ இயலாது. மனித வாழ்வை முக்கால் சதவிகிதம் அறிவியல் ஆட்கொண்டுவிட்டது. கல்வி இருந்தால்தான் வாழ்க்கையை வாழ்க்கையாக எதிர்கொள்ள முடியும். வெளியிலிருந்து ஒரு மனிதனுக்குள் கொண்டுபோய்க் கொட்டுவதன்று கல்வி. அவனுக்குள் இருக்கும் ஆற்றல்களை அடையாளப்படுத்துவதே கல்வி" என்பதை அடையாளம் காட்டியவர் "ஆனாஸானா".

ஒரு மனிதனுக்கு அகத்தேவை - புறத்தேவை என இருபெரும் தேவைகள் உணரப்படுகின்றன. அகத்தேவை என்பது அன்பு - அறிவு - ஆற்றல். புறத்தேவை என்பது உணவு - உடை - உறைவிடம். இந்த இருபெரும் தேவைகளை நிறைவு செய்வதற்கான கருவியாகவும் துணையாகவும் எந்த கல்விமுறை செயலாற்றுகிறதோ அதுதான் மகத்தான கல்வி. அப்படியான ஒரு கல்விமுறையைக் கற்பிதம் செய்த கல்விவேந்தனாக "ஆனாஸானா" கற்றலின் பலனை அதன்வழி நிற்கச் செய்தார். இணையத்தளம் - "டிஜிட்டல்" - இலத்திரனியல் தொழில்நுட்பம் இல்லாத அக்காலத்தில் "தமிழிலக்கிய வினாவிடை" எனும் பல்வேறு பாடநூல்களை அச்சிலிட்டு மாணவர் சமுதாயத்துக்குப் பகிர்ந்தளித்தார்.

கிழக்கு முஸ்லீம்களின் வாழ்க்கையை இஸ்லாமிய இலக்கியத் தளத்தில் இயக்கிய "ஆனாஸானா" பத்திரிகைகளில் தன் பயணத்தைத் தொடங்கி மக்கள் எழுத்தாளராய் மலர்ந்தார். கதைகளில் தொடங்கி கட்டு

ரைகளில் நிறைந்தார். கட்டுரைகளில் நிறைந்து நாவல்களில் நிலைபெற்றார். கதை - சிறுகதை - கவிதை - நாவல் - ஆய்வுக்கட்டுரை - உருவகக்கதை - உரைநூல்கள் - மேடைநாடகங்கள் - வானொலிநாடகங்கள் - நகைச்சுவை எனப் பன்முகத்துறையில் தன் ஆளுமையைச் செலுத்தினார். “தீன்மாலை - சீறாஇன்பம் - பிறைப்பூக்கள் - கனவுப்பூக்கள் - முற்றத்துமல்லிகை - பனிமலர் - இலக்கியப் பொய்கை - இலக்கிய நோக்கு - இஸ்லாம் வழிகாட்டி - சுலைமான் பல்கீஸ் - தமிழிலக்கியம் - தர்மங்களாகும் தவறுகள் ஆகிய அவரது நூல்களால் அதிகம் பேசப்படலானார்.

அவரது முதலாவது கட்டுரையை 1947 பெப்ரவரி தினகரன் பிரசுரித்தது. தனக்கு வயது இருபதாயிருக்கும்போதே 1950இல் தினகரன் வாரமஞ்சரி பிரசுரித்த அவரது “நூர்ஜஹான்” எனும் முதலாவது சிறுகதை மூலம் அதிர்வுகளை உருவாக்கினார். ஆண்டு 1977இல் “எனக்கு வயது பதின்மூன்று” எனும் சிறந்த சிறுகதைத்தொகுதிக்கு இலங்கை சாகித்தியமண்டலப் பரிசு பெற்றார். “ஆனா ஸானா” இலங்கை வானொலியில் “இலக்கிய மஞ்சரி” எனும் நிகழ்ச்சியை நடாத்தி அதை காற்றின் அலைவரிசையில் ஏற்றுமதி செய்தார். 1982இல் “பனிமலர்” நாவலுக்கு வீரகேசரி பிரதேச நாவல் பரிசும் - 1984இல் “கனவுப்பூக்கள்” நாவலுக்கு கொழும்பு முஸ்லீம் எழுத்தாளர் பேரவையின் பரிசும் - 1989இல் முஸ்லீம் காலசார அமைச்சின் “தாஜுல் அதீப்” விருதும் - 1990இல் மலேசிய கவிதைமாலை இயக்கத்தின் “இலக்கிய திலகம்“ விருதும் 1996இல் தேசிய கலைஞர் பேரவையின் “இலக்கிய மாமணி“ விருதும் “ஆனாஸானா“வுக்கு இலக்கிய நிறுவனங்களும் ஊடக அமைப்புக்களும் வழங்கிய அதி கௌரவங்கள்.


அட்டாளைச்சேனை தினகரன் வாசகர் வட்ட நண்பர்களாக நாங்கள் மாதந்த பௌர்ணமி “நிலவிலே பேசுவோம்” கலை இலக்கிய நிகழ்வுகளில் சிறப்பித்த “ஆனா ஸானா” அவர்களுக்கும் அதிக பங்குண்டு. 1983 “நிலவிலே பேசுவோம்” நிகழ்வில் 1977சாகித்திய மண்டலப்பரிசு பெற்ற “ஆனாஸ ானா“வின் இலக்கியப்பணியைப் பாராட்டி அட்டாளைச்சேனை பொதுநூலக வளாகத்தில் நிகழ்த்தப்பட்ட “ஆனாஸானா” வின் நூல் கண்காட்சியும் கருத்தரங்கும் 2001இல் ஆசுகவி அன்புடீன் தலைமையில் அட்டாளைச்சேனை கலை இலக்கியப்பேரவை இலக்கிய மாமணி அ.ஸ. நினைவுக் கருத்தரங்கு சிறப்பாக நடத்தப்பட்டதும் அவரது காலவரலாற்று நிகழ்வுகளுக்குச் சான்று.

தென்கிழக்குப் பல்கலைக்கழகம் “ஆனா ஸானா”வின் வரலாற்று ஆவணங்களை பட்டப்படிப்பு மாணவர்களுக்குப் பயன்படுத்திக் கொண்டிருப்பது ஒரு பெரும்பேறாகும்.

**இலக்கிய மாமணி**
**அ. ஸ. அப்துஸ்ஸமதுவின் நூல்கள்**

1. சீறா இன்பம்
2. சுலைமான் பல்கீஸ்
3. கனவுப் பூக்கள்
4. தீன் மாலை
5. முற்றத்து மல்லிகை
6. பிறைப் பூக்கள்
7. இலக்கியப் பொய்கை
8. தமிழ் இலக்கியம்
9. தமிழ் இலக்கிய வினாவிடை
10. எனக்கு வயது பதின் மூன்று
11. தர்மங்களாகும் தவறுகள்
12. இஸ்லாம் வழிகாட்டி
13. இஸ்லாமிய இலக்கிய நோக்கு
14. பனிமலர்



பல்கலைக்கழக அரும்பொருட்சாலையில் அவரது படைப்புக்கள் யாவும் பாதுகாக் கப்படுவதற்குப் பல்கலைக்கழக நிர்வாக சபைக்கு நாம் நன்றி நவில்கிறோம்.

எனக்கும் இஸ்லாமிய கலாசாரத்தின் இலக்கிய பரிமாணம் “ஆனாஸானா” ஐயாவுக் குமான நட்பை இன்று நினைத்தாலும் “அது எப்படி சாத்தியமானது?” என்று இவரை மீட்டிப் பார்க்கையில் நான் வியந்தும் மகிழ்ந்தும் போகிறேன். நான் மகிழ்ந்தேன் என்பதை விட நெகிழ்ந்தேன் என்பதே பொருத்தம். நானும் ஆசுகவி அன்புடீனும் பாவேந்தல் பாலமுனை பாறூக்கும் வாசகர் வட்டத் தலைவர் சிறாஜ் அகமத் அவர்களும் இனம் புரியாத இதய நட்போடும் இலக்கிய தாகத்தோடும் “ஆனா ஸானா” அவர்களை வாரந்தோறும் அவரது வீட்டிலேயே சந்திப்பதுண்டு. குறைந்தது இரண்டு மணிநேரமாவது அவரோடு பேசினால் இதயநிறைவோடு திரும்பிடலாம். அந்த சந்திப்புகள் இலக்கியம் கவர்ந்து வந்த அற்புத அனுபவமாய்த்தான் இருந்தது அப்போது. அவரோடு பேசினால் இன்றைக்கெல்லாம் கேட்டுக்கொண்டேயிருக்கலாம் எனப் பழகிப் போயிருந்தது எங்களுக்கு.

அப்படி “ஆனாஸானா” ஐயாவின் சாதனை கம்பீரமானது. அத்தோடு அவர் கருத்தின் கம்பீரம் யாருக்கும் வராது என்று பல விழாக்களிலும் பேசக் கேட்டிருக்கிறோம். ஈழத்தின் தமிழ் வளர்ச்சிக்கு அவர் வழங்கிய இரத்ததானம் அதிகமானது. அதனால்தான் கிழக்கில் தாய்மொழி தமிழ் செழித்திருக்கிறது. தாய் வாழைக்குக் கீழே கன்றுவாழை வளர்ந்தால்தான் வாழைமரத்திற்கு மரி யாதை. அவர் கொடுத்த உற்சாகத்தில் நாங்களும் இத்தனை இலக்கிய இயக்கமாய் கிழக்கில் வளர்ந்திருக்கிறோம் என்பதுதான் எங்களுக்கிருக்கும் தனிமரியாதை.

சக மனிதர்களைத் தன்வயப்படுத்த காலப்பெருவெளியில் காத்திரமான சத்தியக் கருத்துக்களைத் தந்த “ஆனாஸானா” போல் லெட்சிய வேட்கையை - தனிமனித ஆளுமையை - உள்ளார்ந்த நன்னம்பிக்கையை - உன்னத மனித நேயத்தை சொல்லிலும் செயலிலும் எழுத்திலும் வெளிப்படுத்தும் உயர்ந்த ஆன்மாக்கள் இன்னும் நமது சமுதாயத்தில் உருவாக வேண்டும்.

○○○

# வீழ்ந்தது வாழை வழிவிட்ட

வாழை மரம் ஒன்றை
வீட்டுத் தோட்டத்தில்
வளர்க்க விரும்பினார்
வீட்டின் எசமானர் ஒருநாள்

கதலி வாழைக் குட்டியொன்று
கிடைத்தது நியாய விலையில்
எதிர்பாரா வகையில் அவருக்கு
அன்றைய எதிர்பார்த்த நாளில்

கொண்டுவரப்பட்ட அந்தக் குட்டி
தாயைப் பிரிந்த துயரத்துடன்
அடிமை போன்று வந்தது அங்கே
புதிய நாட்டில் புகுந்தது போல

ஆசைப்பட்டு ஏங்கிய குழந்தையொன்று
கிடைத்தது போன்ற மகிழ்ச்சி அவருக்கு
ஆழக்குழி தோண்டி நாட்டிய அவர்
கொடுத்தார் நல்ல நீரும் பசளையும்

அடிமை உணர்வை மறந்தது குட்டி
எசமானரின் அன்பான உபசரிப்பால்
ஆனந்தம் கொண்ட வாழைக்குட்டி
வாழிப்பாக வளர்ந்து நின்றது

தன்னை அரவணைத்துக் காத்த புதிய
எசமானருக்கு நன்றிக் கடனாக
ஈன்றது பல குட்டிகளை மட்டுமல்ல
சுவைத்து மகிழ வாழைப்பழங்களையும்

வாழைக்குலை முற்றிப் பழுக்கும் வரை
அமோகமான உபசரிப்பில் அகமகிழ்ந்தது
வாழைமரம் தனது முடிவினை உணராமல்
பழம் பழுத்தது அதன் வாழ்வும் சரிந்தது


வாழையின் மூலம் மனிதர்களுக்கு
தருகிறது இயற்கை இனியபாடமொன்று
உனது உன்னத சேவையை உலகிற்கு
அர்ப்பணம் செய்தபின் வழிவிடு சந்ததிக்கு

**- குப்பிளான் குமரன்**

# நம்பிக்கை

அசோகதாசன்





சிறுகதை

வானத்து வெய்யோன் தாழிறங்கிக் கொண்டிருக்கிறான். பறவைகள் தமது இருப்பிடங்களை தேடிக் குஞ்சுகளின் பசியைத் தணிப்பதற்காக விரைந்து கொண்டிருக்கின்றன. அண்டங்காக்கையொன்று திடீரென்று வந்து பக்கத்தில் கரைந்து விட்டு பறந்ததைக் கண்டு திடுக்கிட்டு எழுந்தாள் செல்லம்மா.

வயது அறுபதைத் தாண்டியிருக்கும், சுருக்குகள் விழுந்த கன்னங்கள், வெடித்துப் போய் உருக்குலைந்திருக்கும் உதடுகள், கண்கள் உள்விழுங்கி கறுப்பு விழிகள் எட்டிப் பார்க்கின்றன் ஒன்றிரண்டு கறை படிந்த பற்கள் என அவள் உடலமைப்பு மணிவிழா கண்ட மாக்களுக்கு உள்ளது போலவே இருந்தது. வீட்டு மேல் மாடியில் ஓர் ஓரமாக இருந்த சாய்நாற்காலியில் முழுவதுமாக நரைத்த கேசத்தை வாரிக்கொண்டிருந்தாள் செல்லம்மாள். அண்டங்காக்கைகள் அலறும் ஒலியை கேட்டு திடுக்கிட்ட அவள் யாரோ ஒருவன் வரப்போகிறான் என எதிர்பார்த்து வீட்டு படலையையே வழி மேல் விழி வைத்து அவதானித்துக் கொண்டிருந்தாள்.

“என்ர மூத்த மகன் கேசவன தவிர வேற யார் என்ன பாக்க வரப்போயினம் சிலவேள குமாரி தன்ர புருசனோட வருவாள் அதும் சொல்லேலா” என்று தன் கையறுநிலையை எண்ணி சலித்துக் கொண்டாள்.

அவளது எண்ணம் வீண்போகவில்லை. படலையில் கேசவனின் கார் பலமாக சத்தமிட்டது. அதைக் கேட்ட காவலாளி படலையை இழுத்து விட்டான்.கேசவனின் கார் வீட்டிற்குள் நுழைந்தது. தன் தவப்புதல்வனின் சத்தம் கேட்டு செல்லம்மாள் தனது இருக்கையில் இருந்து எழும்ப முயன்றாள். ஆனால் அவளால் எழுந்திருக்க அவளது கால்கள் விடவில்லை. மகனை வரவேற்க வேண்டும் என்ற ஆர்வத்தில் தனதருகில் இருந்த கைத்தடியை எவ்வாறோ சிரமப்பட்டு எடுத்து கைத்தடியை நிலத்தில் ஊன்றியவண்ணம் எழுந்து நின்றாள். அவள் ஒரு அடியெடுத்து வைக்க முற்படும் போது அதற்குள் கேசவன் ஓடிவந்து அவளின் கையைப் பிடித்துக் கொண்டான்.

“எதுக்கு அம்மா எழும்புறியள் தேவையில்லாம நான் வந்தா உங்கள பாக்க வருவன் தானே” என்று தனது தாயை அதட்டினான்.

“இல்ல உன்ன பாக்க அவ்வளவு ஆசையா இருக்கு என்ற செல்லமே” என்று அவனது உச்சியில் தன் உதடுகளைப் பதித்தாள்.

“சரி, வாங்கோ சாப்பிடுவம் ரொம்ப பசிக்குது எனக்கு, இண்டைக்கு ஒபிஸில சரியான வேல நிற்க கூட நேரமில்ல, நீங்களும் என்ன விட்டுட்டு நிச்சயமா சாப்பிட்டிருக்க மாட்டியள் எண்டு தெரியும் வாசுகி சமைச்சிட்டு தானே போனவள்” என்று கொண்டு அவளது கரத்தைப் பிடித்துக்கொண்டு உணவு மேசைக்கு சென்றான். “உன்ன விட்டுட்டு எப்ப நான் சாப்பிட்டிருக்கன் பேரனுக்கு சாப்பாடு குடுத்துட்டு படுக்கவைச்சிட்டு வாசுகி வீட்ட போட்டாள்” என்றாள்.

“சரி சாப்பிடுங்கோ முகுந்தனுக்கு கிளாஸ் இருக்கு அவன கொண்டு போய் விடோணும்” என்று விரைவாக உண்டான். உண்டு விட்டு

முகுந்தனை எழுப்பி தயார்படுத்திக் கொண்டு பிரத்தியேக வகுப்புக்கு அழைத்துச் சென்றான். அவன் மிகப்பெரிய பதவியில் இருந்தாலும் அவனின் வீட்டில் ஒரு வேலைக்காரி கூட இல்லை. ஆனால் வீட்டுப் பாதுகாப்புக்கு வேண்டி ஓர் காவலாளியையும் அம்மாவுக்காக ஒருத்தியையும் வீட்டு வேலைக்கு அமர்த் தினாள். ஆனாலும் அவள் அவன் வருமுன்பே தனது வேதனத்தை வாங்கிக் கொண்டு போய்விடுவாள்.

கேசவன் சேவகர்களை வைத்திருக்காத திற்கும் ஒரு காரணம் இருக்கிறது. அவன் சிறிய வயதிலேயே தனது தந்தையை பறி கொடுத்தவன். செல்லம்மாள் நல்லதொரு அரசாங்க உத்தியோகத்தில் இருந்ததில் அவள் வேலைக்காரிகளை அமர்த்தி கேசவனையும் குமாரியையும் வளர்த்தாள். ஆனால் கேசவன் உயர்தரத்தில் படிக்கும்போது ஒவ்வொரு சிறிய விடயங்களுக்கும் அவனை நம்பாது அவர்களையே நம்பியிருந்தாள். அவள் தனது குடும்பத்திற்கு செய்ய வேண்டிய கடமைகள் எல்லாம் அவர்களால் தடைப்பட்டன. இதனால் கேசவன் அவர்களை அடியோடு வெறுத்தானாயினும் அவர்களை மதிக்கத் தவறவில்லை. செல்லம்மாளுக்கு கேசவனைப் பற்றிய நினைவுகள் தொடர்ந்தன. ”நாப்பது வயசு நாய்க்குணம் எண்டு சொல்லுவாங்களே அது எனக்கும் பொருந்தும். கேசவன் நல்லவன்தான் எதோ அந்த வயசின்ர ஈர்ப்பு மோசமான பழக்கங்களை அவனும் பழகினான். ஆனால் அவன் அதில மூழ்கேல. அதையே சாட்டா வச்சுக்கொண்டு எவ்வளவு அவன கொடுமைப்படுத்தியிருக்கன். அவன் தண்ட குடும்பத்துக்கு செய்ய வேண்டிய கடமைகள எல்லாம் பறிச்சு வேறொருத்திட்ட குடுத்தன் ஒரு தாய் தண்ட மகன பாத்து சொல்லவே கூடாததை எல்லாம் சொன்னன் அவன வெறுத்து ஒதுக்கினான் எத்தின நாள் எண்ட அருமை மகனோட கதைக்காம விட்டு வெந்த புண்ணிலேயே வேல பாச்சினன் அவன் செய்ய நினைச்ச எல்லாக் காரியத்துக்கும் தட போட்டன் சின்னனுல அண்ணன் தங்கச்சி சண்டகளை பெருசா நினைச்சு “இவன் எண்ட மகள வருங்காலத்துல நல்லா கவனிக்க மாட்டான்” எண்டு நினைச்சு அவன நம்பேல இந்தப் பழக்கத்துக்காக அவன் எதையும் செய்யத் துணிவான் எண்டு சொல்லி அவன் கேட்ட தண்ட பொறுப்புக்கள ஒப்படைக்க மறுத்தன். ஆனா கேசவன் குணவான். அவன் இதையெல்லாம் தனது வெற்றிப்பாதையில்



சிறு கற்களாகக் கொண்டு அவற்றை காலால் உதறித்தள்ளிவிட்டு நல்லாப் படிச்சு நல்ல நிலைமைக்கு வந்திட்டான்.

தனக்கு சொத்தொண்டும் வைக்காம எல் லாத்தையும் குமாரிக்கே தாரை வார்த்தான். அதே மாதிரி குணவதிட்ட இருந்தும் ஒரு சதமேனும் சீதனம் வாங்காம கலியாணம் செய்தான். அவளும் நான் பார்த்த மருமகள் தான். அவள் தண்ட பெயருக்கேற்ற மாதிரியே உத்தமி தான். என்ன குமாரி தான் பார்த்துக்கொள்ளுறதெண்டு கேட்டான். ஆனால் கேசவன் “உனக்கு ஏனம்மா வீண் சிரமம் அம்மாவ நான் பார்த்துக் கொள்ளுறன்” எண்டு சொல்லி என்னயும் தண்ட வீட்டையும் கவனமா பாத்துக்கொள்ளுறான். குணவதியும் பிழையில்லை என்ன நல்லாத்தான் பாத்தவா. மாமியார பாக்கிற மாதிரி இல்லாம ஒரு அம்மாவ மாதிரி கவனித்தாள். ஆனா பாவம் விதி செய்த சதிய பாருங்கோ கலி யாணம் செய்யேக்க யாரும் தீர்க்காயுசு எண்டு வாழ்த்தேல போல முகுந்தன பிறக்க வைத்துவிட்டு அவள் வைகுண்ட முகுந்த னிட்ட போய்ச் சேர்ந்திட்டாள். நானும் குமாரியும் அவளது கணவனும் எவ்வளவு தரம் சொல்லியும் அவன் முகுந்தன நல்ல படியா வளர்க்கோணும் எண்டதுக்காக அவன் மறுமணத்தை மறுத்திட்டான். அவன் எப்போதும் ராமன்தான். நான் கைகேயியா இருந்து செய்த மோசடிகளை எல்லாம் நினைச்சு கவலைப்பட்டுக்கொண்டிருக்கன். இப்ப கவலைப்பட்டு என்ன பிரயோசனம்? அப்பவே அவன நம்பி பொறுப்பெல்லாம் அவனிட்ட குடுத்திருக்கலாம். அவன் தண்ட அப்பாவ பாக்கேல ஆனா அவன் தண்ட அப்பாவ மாதிரி தான் இருக்கான். என்று கொண்டு சாய்கதிரையில் சாய்ந்தாள்.

○○○

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்



**பேராசிரியர் துரை மனோகரன்**

**தமிழ் அரசியல் அரங்கம்**

இலங்கையில் தமிழ் அரசியல் அரங்கம் எப்போதும் சுவாரசியமாகவே இருக்கும் கட்சிகளுக்கிடையே பிரச்சினைகள், ஆளுக்காள் தனிப்பட்ட மோதல்கள் என்று தமிழ் அரசியல் என்றும் சூடுபிடித்துக் காணப்படும். ஒரு நல்ல இலட்சிய நோக்கில் கட்டப்பட்ட "வீடு,". இடையிலே அதனுள் புகுந்த சுயநலம் மிக்க சில தனிநபர்களால் குட்டிச்சுவராகிக்கொண்டிருக்கின்றது வெளியில் உள்ள மக்கள், "வீட்டின்"மீது இன்னமும் மதிப்பு வைத்து, எட்டுப்பேரை "வீட்டில்" இருத்திவைத்துள்ளனர். சிலரைத் தேர்தல் திருவிழாவின்போது ஒதுக்கித்தள்ளியிருக்கிறார்கள். அவ்வாறு ஒதுக்கப்பட்ட சிலர், தமது வால்களாக ஆடக்கூடிய சிலரது ஒத்துழைப்புடன் "வீட்டுக்குள்" தாம் விரும்பிய படி ஆடத்தொடங்கியுள்ளனர். "வீட்டின்" நலன் கருதிப் பிறர் தெரிவிக்கும் கருத்துகளையும், விமர்சனங்களையும் அவர்கள் மதிப்பதில்லை. இப்படியே போனால், இன்னும் சில ஆண்டுகளில் "வீடு" இருந்த இடம் தெரியாமல் போய்விடும். அத்தகைய தருணத்தில் குய்யோ முறையோ என்று கத்திக் கூச்சல் இடுவதில் எந்தப் பயனும் இருக்காது.

"தம்வழி தனிவழி" என்று இதுகால வரை தமிழ் அரசியலில் போக்குக் காட்டிக்கொண்டிருந்த ஒரு தமிழ்த்தேசிய அரசியல்வாதி, தேர்தல் திருவிழாவில் பாடம் கற்றுக்கொண்ட பின்னர், தமது தனிவழியை மாற்றிக் கொள்ளத் துணிந்துவிட்டார். முன்னொரு காலத்தில் தமிழ்க்கட்சிகள் பல கூட்டாகச் செயல்பட்டுவந்தபோது சுயநலம் காரணமாகக் கூட்டை உடைத்துக்கொண்டு வெளியே வந்தவர், அவர்தான். தற்போது ஒற்றைத் தனிமரமாக நிற்கிறார். எதிர்காலத்தில் அதுகூடப் பறிபோய்விடுமோ என்ற அச்சத்தில் பிற தமிழ்த்தேசியக் கட்சிகளோடு இணைந்து பயணிக்க முயற்சிகளை மேற்கொள்கிறார். உந்தச் சுடலை ஞானம் முன்னரே ஏற்பட்டிருக்கலாம். வடக்கு - கிழக்குச் சார்ந்த தமிழ்க்கட்சிகளில் இதுவே குடும்பக் கட்சியாகவும் விளங்குகிறது. பாட்டன், மகன், பேரன் என்ற ரீதியில் அதன் தலைமைத்துவம் போய்க்கொண்டிருக்கிறது (மலையகத்தின் பாரம்பரியக் கட்சி ஒன்றும், தற்போதைய சிங்களக் கட்சிகளில் ஒன்றும் குடும்பக் கட்சிகளாக விளங்குகின்றன).

அண்மையில் தமிழ் அரசியல்வாதிகள் சிலர் இந்தியப் பயணம் மேற்கொண்டிருந்தனர். அங்கு போனவர்கள், விருந்துபசாரங்களிலும், கொண்டாட்டங்களிலும் மனமொன்றி மகிழ்ந்துவிட்டு, பேசவேண்டியவற்றைப் பேசாமல் விட்டுவிட்டு, இங்கு வந்து அறிக்கைகள் விடுகின்றனர். மீனவர் பிரச்சினை தொடர்பாகத் தமிழ்நாடு முதலமைச்சருடன் பேசுவதற்கு வாய்ப்புக் கேட்க உள்ளதாக ஒருவர் தெரிவிக்கிறார். தமிழ்நாட்டில் இருந்தபோது அவகாசம் கேட்க வக்கில்லை. இங்கு வந்தபிறகுதான் அவருக்கு ஞானமே பிறக்கிறது. இன்னொருவர், தமிழ்மக்கள் பிரச்சினை தொடர்பாகக் கனிமொழியுடன் பேசியதாகக் குறிப்பிடுகிறார். கனிமொழி கனிவாகப் பேசுவார். அவ்வளவுதான். தமிழர் பிரச்சினை பற்றி இந்திய அரசுடன் பேசவேண்டும். எவ்வளவு காலத்துக்குத்தான் இவர்கள் தமிழ் மக்களை ஏமாற்றப்போகிறார்கள்?

இலங்கைத் தமிழ் அரசியலில் அண்மைக் காலமாக ஒரு புதுவரவு ஏற்பட்டுள்ளது. பஞ்சபாண்டவர்களில் வில்லாற்றலில் சிறந்து விளங்கும் ஒருவனின் பெயரைக்கொண்ட ஒரு புதிய அரசியல்வாதி அரசியலில் அரங்கேற்றம் பெற்றுள்ளார். முதன்முதலாக அநியாயங்கள், அட்டூழியங்களைத் தட்டிக் கேட்டலும் திராணி கொண்ட ஓர் அரசியல்வாதியைத் தமிழ் அரசியலில் காணமுடிகிறது. நமது பாரம்பரிய அரசியல்வாதிகள் பலர், நாட்டின் உயர்சபையில் கதிரைகளுக்குப் பாரமாக இருந்துவிட்டு, அதனால் கிடைக்கும் வரப்பிரசாதங்களையும் அனுபவித்துக்கொண்டு நாட்களைக் கழித்து வருகிறார்கள். பலரின் குரல்களை உயர்சபையில் கேட்கவே முடிவதில்லை. இவர்களும் இருந்தார்கள், இருக்கிறார்கள் என்று வாக்களித்த மக்கள் திருப்திப்பட்டுக்கொள்ள வேண்டியதுதான். ஆனால், குறிப்பிட்ட அரசியல்வாதி, உயர்சபையில் தமக்கான நேரம் ஒதுக்கப்படாமைக்காக வாதாடி, குரல் கொடுத்து வெற்றியும் பெற்றுள்ளார். அவரை ஆரம்பத்தில்

மட்டம் தட்ட, கிண்டல் செய்ய முனைந்த ஆளும்கட்சி, எதிர்க்கட்சித் தரப்பினரும் அவர்பக்க நியாயத்தைப் புரிந்துகொண்டு செயல்படத் தொடங்கியுள்ளனர். மக்களின் வாக்குகளை வாங்கிக்கொண்டு, உயர்சபையில் பேசாமல் இருப்பதே பெரும்தவம் என்பது போல் நடந்துகொள்ளும் தமிழ் அரசியல்வாதிகளுக்கு அவரது செயல்பாடு நல்ல ஒரு பாடமாக அமையவேண்டும்.

வடமாகாண அபிவிருத்திச்சபைக் கூட் டங்களில் துணிச்சலாகக் கருத்துகளை முன்வைத்து, கேட்கவேண்டிய கேள்விகளை உரியவர்களிடம் கேட்டு, விடயங்கள் பற்றிய விழிப்புணர்வை அவர் ஏற்படுத்திவருகின்றமை வரவேற்கத்தக்கது. இதுவரை காலமும் அபிவிருத்திச்சபைக் கூட்டங்கள் என்பன, அரசியல்வாதிகள் வடை, பற்றிஸ் சாப்பிட்டு, தேநீரைச் சுவைப்பதற்கும், மிகுதி நேரத்தைக் கைபேசியை நோண்டுவதற்கும், ஏதாவது கொடுப்பனவுகள் இருந்தால், அவற்றைப் பெற்று அனுபவிப்பதற்கும் நடத்தப்படும் கூட்டங்களே என்ற நிலைப்பாட்டை முதன் முதலாக மாற்றியமைத்தவர், குறிப்பிட்ட அரசியல்வாதியே. அபிவிருத்திச்சபைக் கூட் டங்களில் அவர் அதிகாரிகளைப் பார்த்து, என்ன படித்திருக்கிறீர்கள், என்ன செய்கிறீர்கள் என்றெல்லாம் கேள்விகள் கேட்பது, அவர்களை அவமதிப்பதாகும் என்றெல்லாம் அவர் பற்றிக் கடுமையான கண்டனங்கள், விமர்சனங்கள் எழுந்தன. இது தொடர்பாக முக்கிய தமிழ்த் தேசியக் கட்சி ஒன்றின் அரசியல்வாதி ஒருவர் பின்வருமாறு தெரிவித்துள்ளார்: “அரச அதிகாரிகளாக இருப்பவர்கள் எங் களைவிடக் கூடிய அறிவுத்தரத்திலே இருக்கிறார்கள். அறிவுபூர்வமாக அவர்கள் படித்துத்தான் அந்தப் பதவிகளுக்கு வந் திருக்கிறார்கள்” என்று கூறி, தமது இய லாமையை வெளிப்படுத்தியிருந்தார். அரச அதிகாரிகளைக் கேள்விகள் கேட்கக்கூடாது, அவர்கள் சொல்வதை அரசியல்வாதிகள் நம்பவேண்டும், அவர்களை அனுசரித்துச் செல்லவேண்டும் என்ற கருத்து, பொதுவாக அரசியல்வாதிகள் உட்படப் பலரிடத்திலும் காணப்படுகிறது. ஆனால், இத்தகையவர்கள் ஒன்றை மறந்துவிடுகிறார்கள். யாரும் யாரை யும் கேள்விகள் கேட்பதற்கு உரிமை உண்டு. அதற்கு அரச அதிகாரிகள் மட்டும் விதிவிலக்கல்ல.

இந்துப் புராணக்கதையில் இடம்பெறும் ஒரு சம்பவம் இங்கு நினைவுகூரத்தக்கது. படைப்புக் கடவுளான பிரமதேவர், பால்ய வயது முருகனை அலட்சியம் செய்து செல் கிறார். பாலமுருகன் அவரை அழைத்து, “ஓம் என்பதன் உட்பொருள் என்ன?” என்று கேட்கிறார். பிரமன் பதில்சொல்ல முடி யாமல் தடுமாறுகிறார். அப்போது முருகன், “வேதத்தை மையமாகக் கொண்டு, படைக் கும் தொழிலை மேற்கொண்டுள்ள உமக்கே அதற்கு அர்த்தம் தெரியவில்லை என்றால், மாபெரும் தப்பு” என்று கூறி, அவருக்குத் தண்டனை வழங்குகிறார். இந்தப் புராணக் கதை விடயம், அபிவிருத்திச்சபைக் கூட்டங் களுக்கும் பொருத்தம். அதிகாரிகளைப் பார்த் துக் கேள்விகள் கேட்கக்கூடாது என்பது ஒரு விதியல்ல. இவ்வளவு காலமும் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக எத்தகைய அறிவோ, ஆராய்ச்சியோ இல்லாது, செக்குமாடுகள்போல இருந்து பழகிவிட்ட அரசியல்வாதிகள் மத்தி யில், அரச அதிகாரிகளைப் பார்த்துக் கேள்வி கேட்கும் முதல் குரல், அதிகாரிகளை அச்சமடை யச் செய்துள்ளது அரசியல்வாதிகளை அசடு வழியச் செய்துள்ளது. குறிப்பிட்ட அரசியல் வாதி அரச அதிகாரிகளிடம் கேள்வி கேட்கத் தொடங்கியமையால், ஒரு புதிய விழிப் புணர்வு ஏற்படத் தொடங்கியுள்ளது. அவர் பங்கு பற்றிய அபிவிருத்திச்சபைக் கூட்டம் ஒன்றின்பின், இரண்டு சிங்களக் காவல்துறை அதிகாரிகள் பேசிக்கொண்ட விடயம் ஊடகம் ஒன்றில் வெளிவந்திருந்தது. இவரைப் போல ஒருவர் தென்னிலங்கையிலும் இருந்தால் எவ் வளவு நல்லது என்று அவர்கள் பேசிக் கொண் டார்களாம். இனிமேலாவது மற்றைய தமிழ் அரசியல்வாதிகள், மக்களிடம் வாக்குகள் பெறு வதற்காகத்தான் தாம் பிறந்திருக்கிறார்கள், மக் களுக்குச் சேவை செய்வதற்காக அல்ல என்ற அரசியல் சித்தாந்தத்தை மறந்துவிடவேண்டும்.

புதிதாகத் தமிழ் அரசியல் உலகில் அறி முகமாகிய குறிப்பிட்ட அரசியல்வாதி எதிர் கொள்ளும் சவால்களுக்கும், கண்டனங்களுக் கும், விமர்சனங்களுக்கும் எல்லையே இல்லை. எந்தெந்த முறையில் அவரை அவமானப்படுத்த முடியுமோ, மட்டம் தட்ட முடியுமோ, சிக்கல்களுக் குள் சிக்கவைக்க முடியுமோ, அவை எல்லாம் தங்குதடையின்றி இடம்பெற்று வருகின்றன. அவர் தடம் புரளாமல், தம்மை மேன்மேலும் புடம் போட்டுக்கொண்டால், யாராலும் அவரது அரசியல் உயர்ச்சியைத் தடுக்கவே முடியாது.

❍❍❍

# வாசகர் பேசுகிறார்

புதுவருட தொடக்க இதழ் (296) மனம் மகிழ வந்தது.

நீண்ட காலத்தின் பின்னர் நல்லதொரு சிறுகதையை வாசிக்கும் வாய்ப்பு **கிறிஸ்டி நல்லரெத்தினம்** எழுதிய மனிதரின் நிறங்கள் கதை மூலம் கிடைத்தது. உணர்ச்சிக் குறிகள் ஓர் அறிமுகம் என்ற கட்டுரையும் புதிது தந்தது.

எனது இலக்கியத்தின் மீதான பயணம் வித்தானபோது **மஹாகவி**யின் குறும்பாவும் அதற்கான சௌவின் ஓவியமும் உருப்படியாக நான் மேலெழ உதவின. என்பதை நனவிடை தோய்ந்தேன்.

ஞானம் குழுவினருக்கு எனது வாழ்த்துகள். **– இரண்டாம் விசுவாமித்திரன்**

❍

ஞானம் இதழ் 296இல் நான் எழுதிய கட்டுரையான தைப்பொங்கல் ஒரு உணவுத் தேட்ட விழாவாகும் என்ற கட்டுரையை தங்கள் சஞ்சிகையில் பிரசுரம் செய்தமைக்கு பணிவன்பான நன்றிகளைத் தெரிவிக்கிறேன்.

திரு.பாலச்சந்திரன் எழுதிய உணர்ச்சிக்குறிகள் என்ற கட்டுரையை வாசித்தபோது அது நான் சிங்கப்பூரில் 1981களில் அங்குள்ள மக்கள் உணர்ச்சிக் குறிகளைப் பிரதிபலித்தமையை நினைவூட்டியது. அங்கு பெருவிரலையும் சுட்டுவிரலையும் தொட்டு வட்டமாக்கிக் காட்டுதலைத் தாராளமாக எங்கும் காணலாம். நான் வேலை செய்த தொழிற்சாலையில் அருமை என்பதற்கு பெருவிரலையும் சுட்டுவிரலையும் தொட்டு பொறுப்பானவர்கள் எனக்குக் காட்டியதை பலமுறை மகிழ்ந்து அனுபவித்திருக்கிறேன். ஆனால் பெருவிரலை உயர்த்தி நல்லது என்பதை காட்டும் குறிப்பை நான் அப்பொழுது அங்கு கண்டதில்லை. **– ஏலையா க.முருகதாசன்**

❍

“ஞானம் 296” வந்து சேர்ந்தது. நன்றி. அண்மைய நாட்களாக ஞானம் அமைதியான மாற்றம் காண்கிறது. ஆசிரியர் பக்கம் புதிய கோணம் - ஆனந்தமான வாழ்த்துக்கள்!

அப்புறம், கவிஞர் செங்கதிரோன் பற்றிய செய்திகள். **செங்கதிரோன்** இலட்சியமான இலக்கியவாதி, எறும்புபோன்ற சுறுசுறுப்பானவர், செயற்பாட்டாளர், ஊக்கம் மிக்கவர். ஊக்கு விப்பவர். என்னுடைய திருக்குறள் கதைகளை “கதைகூறும் குறள்” என மகுடமிட்டு தன் செங்கதிரின் ஆயுட்காலம்வரை தொடர்ந்து வெளியிட்டு ஆதரவளித்தவர். அந்தப் புத்துணர்வு போற்றப்படவேண்டியது. **இரண்டாம் விசுவாமித்திரனுக்கு** நன்றிகள் பல.

**ஷெல்லிதாசன்** கவிதையின் ஏக்கத்தின் சாயல் என்னைக் கவர்ந்தது. “மனிதரின் நிறங்கள்’” ஒரு சிறிய செய்தி. பெரிய ஒரு பண்பாட்டின் வெளிப்பாடு. இந்த மண்ணின் மாண்பு.

“உணர்ச்சிக் குறிகள்” பாலா அவர்கட்கு என் பாராட்டுகள். புதுமைக்கு பாலா - வளரட்டும்.

வழமையாகவே **வாகரைவாணன்** சிந்தனைகள் - அதில் ஒரு செய்தி இருக்கும்.

பொதுவாகவே ஞானம் சிறப்பாக உள்ளது. நன்றி. **– மா.குலமணி**

❍ ❍ ❍

## நிறைபணிச்செல்வர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி
## *பவளவிழா*



இலக்கிய ஆர்வலர்களும் நண்பர்களும் இணைந்து 01.02.2025 அன்று கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமியின் சேவைகளைப் பாராட்டும் முகமாக பவளவிழா நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. இப்பாராட்டு விழாவானது பேராசியர் சபா. ஜெயராசா அவர்களில் வழிநடத்தலில் நடை பெற்றது. வரவேற்புரையை திரு. கே. பொன்னுத்துரையும் நிகழ்ச்சித் தொகுப்பை திருமதி பவானி முகுந்தனும் ஆற்ற பலர் வாழ்த்துரைகளை வழங்கினார்கள். பவளவிழா காணும் நிறைபணிச் செல்வர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்களை ஞானம் வாழ்த்தி மகிழ்கிறது.

இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து வழங்கும்

# இரா. உதயணன் இலக்கிய விருது 2023/2024

இவ்வாண்டு நாவல், சிறுகதை, கவிதை, சிறுவர் இலக்கியம். தமிழ் வளர்ச்சி இலக்கிம், அயலகப் படைப்பாளிகளின் நூல்கள் என விருதுக்காகப் பத்து (10) நூல்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு இரா. உதயணன் இலக்கிய விருதுடன் தலா ரூபா 10.000 ஆயிரம் வீதம் 100.000. பணப்பரிசும் வழங்கப்படவிருக்கிறது.

இவ்வாண்டுக்கான விருதுத் தேர்வுக்காகப் படைப்பாளிகள் நூல்களை அனுப்பி வைக்கலாம். அனைத்துப் படைப்புகளும் முதல் பதிப்பாக இருத்தல் வேண்டும். அயலகப் படைப்பாளிகளுக்கான விருதுக்குரிய நூல்கள் தவிரந்த ஏனைய துறைசார்ந்த நூல்கள் அனைத்தும் இலங்கையில் வாழும் எழுத்தாளர்களினால் எழுதப்பட்டிருக்க வேண்டும். இலங்கையில் ISBN பெற்றிருத்தல் வேண்டும்.

- உலகின் எந்தப் பகுதியிலும் வாழும் எழுத்தாளர்களினாலும் எழுத்தப்பட்டிருக்கலாம்.
- உலகின் எந்தப் பாகத்திலும் பதிப்பித்திருக்கலாம்.
- சிறுகதை, நாவல் ஆகிய இரு துறைசார் நூல்கள் மட்டும் அனுப்ப வேண்டும்.
- அனைத்து நூலக்களும் 2023/2024 தை முதலாம் திகதி தொடக்கம் 2023/2024 மார்கழி 31ஆம் திகதிவரையான காலப்பகுதியில் பதிப்பித்திருக்க வேண்டும்.
- தேர்விற்காக மூன்று பிரதிகள் (நூல்கள்) அனுப்பட வேண்டும்.
- நூல்கள் யாவும் : 2025 பெப்ரவரி 28ம் திகதிக்கு முன் அனுப்பட வேண்டும்.

நூல்கள் அனுப்ப வேண்டிய முகவரி

**இரா. உதயணன் இலக்கிய விருது - 2023/2024**
**இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம், இல.115 மன்னார் வீதி, வைரவபுளியங்குளம், வவுனியா.**
தொ.பே.இல. 00 44 7747794358 ; 0094 771 877 999

# எழுத்தாளர் 'குரு அரவிந்தன் வாசகர் வட்டம்' நடத்தும் உலகளாவிய 3வது திறனாய்வுப் போட்டி – 2025

தமிழ் இலக்கிய உலகில் புகழ்பெற்ற எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களின் தமிழ் இலக்கிய சேவையைப் பாராட்டும் முகமாகவும், வாசிப்பு, எழுத்துப் பழக்கத்தை ஊக்கு விக்கும் நோக்கமாகவும் இடம்பெறும் குரு அரவிந்தன் எழுதிய நாவல், சிறுகதை தொடர்பான திறனாய்வுப் போட்டி.

15 பரிசுகள், மொத்தம் 1,50,000 ரூபாய்கள், இலங்கை ரூபாயில் வழங்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | - 30,000/= | 4ஆம் பரிசு | - 15,000/= |
| 2ஆம் பரிசு | - 25,000/= | 5ஆம் பரிசு | - 10,000/= |
| 3ஆம் பரிசு | - 20,000/= | | |

**போட்டி முடிவு 31. 03. 2025**

10 பாராட்டுப் பரிசுகள் இலங்கை ரூபாய்கள் தலா 5000/=

குரு அரவிந்தன் அவர்களின் படைப்புகளுக்கான திறனாய்வுப் போட்டி. குறைந்தது 2 புதினங்கள் அல்லது 4 சிறுகதைகள் பற்றி உங்களின் கருத்துரைகளைத் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் 5 பக்கங்களுக்குள் அல்லது 1600 சொற்களுக்கு மேற்படாமல் யூனிக்கோட் மற்றும் வேர்ட் (Unicode and Word) அச்சுப்பிரதியாக அனுப்பவும். மாணவ, மாணவிகளாயின் தனியாகக் குறிப்பிடவும். வயது வரம்பு இல்லை. ஒருவர் ஒரு கட்டுரை மட்டுமே அனுப்பலாம். பரிசுபெற்ற கட்டுரைகளைத் திருத்தி நூலாக வெளியிடும் உரிமை வாசகர் வட்டத்திற்கு உரியது.

மின்னஞ்சல் வழியாக ஆங்கிலத்தில் உங்களின் முழுப்பெயர், தெளிவான அஞ்சல் முகவரி, மின்னஞ்சல் முகவரி, செல்போன் எண் விவரங்களோடு அனுப்பவேண்டும்.

போட்டி முடிவுகள் 30 ஆம் திகதி ஏப்ரல் மாதம் 2025 இணையத்தில் வெளியிடப்படும்.

மின்னஞ்சல்: kurufanclub@gmail.com

இணையம்: https://kurunovelstory.blogspot.com/> http://tamilaram.blogspot.com/ https://canadiantamilsliterature.blogspot.com/

செயலாளர், குரு அரவிந்தன் வாசகர் வட்டம். kurufanclub@gmail.com



# கண்ணீர் அஞ்சலி



தனது 81ஆவது வயதில் 10-01-2025 அன்று அந்தனி ஜீவா அவர்களின் மறைவு, ஈழத்து மலையக இலக்கிய உலகிற்கு ஒரு பேரிழப்பாகும். பல்துறை இலக்கிய ஆளுமையாளராகவும் இலக்கியச் செயற்பாட்டாளராகவும் 1960கள் தொடங்கி ஜீவா அவர்கள் இயங்கிவந்துள்ளார்.




ஞானம் சஞ்சிகைக்கும் அந்தனி ஜீவாவுக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருந்து வந்துள்ளது. ஜீவா அவர்கள், 25ஆவது இதழ் தொடங்கி 48ஆவது இதழ்வரை 2 வருடகாலம் இணை ஆசிரியராக தோள்கொடுத்து ஞானம் சஞ்சிகையுடன் பயணித்தவர். 'நானும் எனது நாடகங்களும்', 'திரும்பிப் பார்க்கிறேன்', 'புதிய நூலகம்', 'என் பழைய டயறியிலிருந்து' எனும் தொடர்கள் உட்பட பல கட்டுரைகளையும் ஞானம் சஞ்சிகையில் எழுதியுள்ளார். மேலும் 109ஆவது (ஜூன் 2009) இதழில் அட்டைப்பட அதிதியாக கௌரவித்ததுடன், அவர்களின் பவளவிழா ஆண்டில் நேர்காணல் ஒன்றையும் 228ஆவது இதழில் (மே 2019) வெளியிட்டு ஜீவா அவர்களை ஞானம் வாழ்த்தி மகிழ்ந்தது. ஞானம் பதிப்பகத்துக் கூடாக 1999ஆம் வருடம் வெளிவந்த ஜீவாவின் 'அக்கினிப் பூக்கள்' எனும் நாடக நூலானது சாஹித்திய மண்டல பரிசு பெற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. அந்தனி ஜீவா அவர்களுக்கு ஞானம் தனது கண்ணீர் அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கின்றது.




**இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து ஏற்பாடு செய்து, 02.02.2025 அன்று பேராசிரியர் சபா ஜெயராஜா அவர்களின் தலைமையில் நடைபெற்ற அமரர். அந்தனிஜீவா நினைவேந்தல் நிகழ்வில் செங்கதிரோன் த. கோபாலகிருஸ்ணன் அளித்த கவிதாஞ்சலி.**

## ஜீவா! சரித்திரம் படைத்தாய்! போய் வா!

"கலைத் தேனீ" என்று உன்னைக்
கவிஞராம் சில்லையூரார்
அழைத்தனர் அகவை நீயோ
ஐம்பதை அடைந்த போதில்.
உழைப்பவர் உயரவென்றே
ஊழியம் செய்தாய்! மண்ணில்
நிலைக்குமே உந்தன் நாமம்
நீள்துயில் கொண்டாய் ! போய் வா !

கொழும்பிலே பிறந்து கல்வி
கொழும்பிலே கற்றுப் பின்னர்
தொழும்பெலாம் மலையகத்தின்
தோட்டத்தில் என்று வாழ்ந்தாய்!
அழும்பிள்ளை கண்ணீர் போக்கும்
அன்னையைப்போலும் நின்று
விழும்தொழில் ஆளர் வாழ்வில்
விளக்கேற்ற முனைந்தாய்! போய் வா!

நாடகத் தமிழில் கீர்த்தி
நாட்டினாய்! மட்டுமல்ல
ஊடகத்துறையும் ஓங்க
ஓடி நீ உழைத்து மேலும்
சோடனையில்லா உந்தன்
சொற்களால் சுரண்டுவோரைச்
சாடவும் செய்த ஜீவா!
சரித்திரம் படைத்தாய்! போய் வா!

'அந்தனி ஜீவா' என்றால்
அனைவரும் அறிவர் உன்னை
வந்தனை செய்து வாழ்ந்தோம்!
வானிலே உறைய எம்மை
முந்தினாய் ஜீவா! ஐயோ!
மூளுதே சோகம்! கண்ணீர்
சிந்திநாம் அஞ்சலித்தோம்!
சீர்பெறு தோழா! போய் வா!

**செங்கதிரோன் த. கோபாலகிருஸ்ணன்**


GNANAM - Registered in the Department of Post of Sri Lanka under No. DOP/News/16/2025

கந்தபுராண கலாசாரத்தின் கலங்கரை விளக்கம்

# காசிவாசி செந்திநாதையர்

## நூற்றாண்டுச் சிறப்பிதழ்

(1924 – 2024)




விலை:

ரூபா 1500/=

ஞானம் பதிப்பகம்

3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 6.

+ 94 11 2586013 / + 94 717 362 862

editor@gnanam.info

PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 011 2330195

ISSN 2478-0340